
ராணி முத்து
ஜனவரி 16 2014
உஷாராணி
தென்றல் தீ
ரூ.8

## என்னைப் பற்றி...

நான் இல்லத்தரசி. கணவர் சுருளிராஜன்.

எங்களுக்கு இரு மகள்கள். முதல் மகளுக்கு மணம் ஆகிவிட்டது. இரண்டாவது மகள் படிக்கிறாள்.

சொந்த ஊர் மணப்பாறை அருகிலுள்ள பன்னாங்கொம்பு கிராமம். எனக்கு சிறு வயது முதலே புத்தகம் படிக்கும் பழக்கம் உண்டு. இது என் அம்மாவிடம் இருந்து வந்தது. நிறைய நாவல்கள் படிப்பேன். நான் எழுதுவதற்கு ஊக்குவித்ததே இதுதான்.

வாழ்க்கையில் எல்லோரும் சந்திக்கும் சம்பவங்களும், காணும் நிகழ்ச்சிகளுமே என்னை எழுதத் தூண்டின. அதற்கான ஆர்வம் இருந்தாலும், சந்தர்ப்பம் அமையவில்லை.

இப்பொழுது பத்து ஆண்டுகளாக எழுதி வருகிறேன். என்னை அறிமுகப்படுத்தியது 'ராணி'யும், 'ராணிமுத்து'வும்தான்!

## கதையைப் பற்றி...

இரு கிராமத்து பிரச்சினையில் பண்ணையார் தன் கவுரவத்தைக் காப்பாற்ற, படித்த- நாகரிகமான தன் மகனுக்கு, படிக்காத- நாகரீகமே தெரியாத கீழ் சாதிப் பெண்ணை சந்தர்ப்பவசத்தால் மணம் முடித்து... இளம் நெஞ்சங்களில் தீ வைக்கிறார். அப்பாவுக்காக மணந்துகொண்டாலும், அவளை ஏற்றுக்கொள்ளவில்லை நாயகன். அவன் வாழ்வில் ஏற்கெனவே ஒரு பெண் குறுக்கிட... அதனால் ஏற்படும் திருப்பங்கள்.

மேல்தட்டு வர்க்கத்தின் வாழ்க்கை, நாயகியை மிரள வைக்கிறது. பல அவமானங்களை சந்தித்தாலும் அவளின் பொறுமையாலும்; சகிப்புத்தன்மையாலும் பாரதி என்ற பெயருக்கேற்ப வாழ்வில் எப்படி கணவன் மனதில் இடம் பிடிக்கிறாள் என்பதுதான் கதை.

வாசகர்களின் அன்பான விமர்சனங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

என்றும் அன்புடன்...

சு. உஷாராணி





# தென்றல் தீ

உஷாராணி



1

"கல்யாணத்தை நிறுத்துங்க! எனக்கு இந்தப் பெண்ணை பிடிக்கலை..."

அனைவரும் ஆடிப்போயினர்.

"மணமேடையில் பெண்ணை உட்கார வைத்துவிட்டு, இப்போது

எனக்குப் பிடிக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? ஏன் பிடிக்கலை?"

பெண்ணின் தந்தை பெரியசாமி, பண்ணையாரிடம் ஓடி வந்து அவர் காலைப் பிடித்துக்கொண்டு கதறி அழுதார்.

"ஐயா! நான் என்ன செய்வேன்? இப்போ என் பெண்ணை பிடிக்கவில்லை என்கிறான். அவளோட வாழ்க்கை என்னாவது? இனி அவளை யார் கல்யாணம் பண்ணிக்குவாங்க? அவளுக்குப் பிறகு இன்னும் ரெண்டு பெண் பிள்ளைங்க இருக்காங்க. அவங்களோட எதிர்காலம் என்னாகறது?

உங்க பேச்சை நம்பித்தான், இந்த கல்யாணத்துக்கு சம்மதிச்சேன். இப்போ இப்படி ஆகிடுச்சே? நாங்க ஏழையாக இருந்தாலும், மானம் மரியாதையா வாழ்ந்தோம். அது இப்போ காற்றில் பறந்துடுச்சு.

'இந்தக் கல்யாணம் வேண்டாம். இந்த இடம் சரிப்பட்டு வராது. எங்க தகுதிக்கு ஏத்த இடமா பார்க்கலாம்'ன்னேன்.

நீங்கதான், 'உன் தகுதிக்கு என்ன குறைச்சல்? உன் பெண் ரதி மாதிரி இருக்கா! நல்ல பையன், படிச்சிருக்கான். கண் கலங்காம பார்த்துக்குவான்'னு சொன்னீங்க.

இப்ப என் பொண்ணு வாழ்க்கை பாழாய் போச்சே! உங்க மச்சினன், உங்களைப் பழிவாங்க என் பெண்ணை பயன்படுத்திக்கிட்டாரே! நான் இப்ப என்ன செய்வேன்? நீங்க இதுக்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?" என்று அழுதார்.

பண்ணையாரின் மீது வெறுப்புக் கொண்ட சிலர்- இதுதான் நேரம் என்று, "நீ எதற்கு அவர் பேச்சைக் கேட்டாய்? அவரோட மச்சினன் கதிரேசன்தான் சொன்னாரே! 'என் பண்ணையில் உள்ளவனை உன் பொண்ணுக்கு கட்டி வைக்கிறேன். உன்னோட நிலத்தை எனக்குக் கொடு'ன்னு! நீதான் கேட்கலை.

பண்ணையார் அண்ணாமலையாருக்கு நிலத்தை கொடுத்தே. அவர் இப்ப நிலத்தையும் வாங்கிட்டு, உன்னையும் ஏமாத்திட்டார். இப்போ என்ன செய்யப் போறே?"

"அவர் நல்ல மனுஷன் என்றால், வேற மாப்பிளைக்கு கட்டி வைப்பாறா? ஏன்... தன் மகனுக்கே கட்டி வைக்க வேண்டியதுதானே" என்று மச்சினன் கதிரேசன் ஏளனமாகப் பேசினான்.

தான் நடத்தி வைக்கும் கல்யாணத்தைப் பார்ப்பதற்காக...



அன்றுதான் வெளிநாட்டில் இருந்து வந்திருந்த மகன் ரவி சங்கரையும் அழைத்து வந்திருந்தார்.

மாமன் பேசியதைக் கேட்டு வேகமாக எழுந்த மகனின் கையைப் பிடித்து அமர வைத்தார் பண்ணையார். மாப்பிள்ளையையும், அவன் அப்பாவையும் கூப்பிட்டுப் பேசினார். "உங்க சம்மதம் கேட்டுட்டுத்தானே பேசி முடிச்சேன். இப்போ யார் பேச்சைக் கேட்டுட்டு வேண்டாம் என்கிறாய்?"

"நான் யார் பேச்சையும் கேட்கலை. அவ்வளவு அக்கறை இருந்தால் உங்க பையனுக்கு கட்டி வையுங்க" என்றான்.

பண்ணையார் தன் கோபத்தை அடக்கிக்கொண்டு, "உனக்கு என்ன வேண்டும்... பணம் வேணுமா? இல்ல நகை வேணுமா?" என்றார்.

"உங்கள் பணத்தையும், நகையையும் கொண்டு போய் கிணத்துல போடுங்க. நடத்தை கெட்டவளை என் பையன் தலையில கட்டப் பார்க்கிறீங்களா?"

"பாரு தங்கையா. இது ஒரு பெண்ணோட வாழ்க்கைப் பிரச்சினை. இதில் நீ விளையாடக்கூடாது. கல்யாணம் வரைக்கும் வந்து நின்று போனால் பிறகு அந்தப் பெண்ணை யார் கைப்பிடிக்க முன் வருவாங்க? வார்த்தையைக் கொட்டாதே. அள்ள முடியாது. தங்கமான பொண்ணு அவ. என் கண் முன்னாடியே வளர்ந்தவ. இப்படியொருத்தியை அவதூறு பேசாதே. இது நல்லா இல்லே. இப்ப உன் பையனை தாலி கட்டச் சொல்ல முடியுமா? இல்ல... முடியாதா?" என்றார், கர்ஜனையாக.

"உங்க பையனை தாலி கட்டச் சொல்லுங்க. அது முடியுமா? முடியாதுல்ல... அதுமாதிரிதான்! நாங்க இல்லாதவங்க என்பதால் மிரட்டுறீங்க. உங்களை யார் மிரட்டுறது? உங்களிடம் யார் சொல்றது? எனக்கும் படித்த- நல்ல பணக்காரப் பெண் மருமகளாக வர வேண்டும் என்று ஆசையாக இருக்காதா? இல்லை இருக்கக்கூடாதா?"- கேட்டார் காட்டமாக!

கூட்டத்தில் இருந்தவர்கள் ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி பேசினார்கள். அத்தனையும் பண்ணையார் காதில் விழுந்தது.

தங்கையா பக்கம் ஒரு கோஷ்டியே சேர்ந்துவிட்டது. "மாப்பிள்ளைக்கு பிடிக்கவில்லை என்றால் விட்டுவிடுவதுதானே! அவன் தன் அப்பனுக்கு பயந்து இங்கு வந்திருக்கான். இப்போ

தைரியமா 'வேண்டாம்' என்கிறான். இதற்கு நீங்கதான் பதில் சொல்லணும். ஒரு ஏழைப் பெண் வாழ்க்கையை, உங்க சொந்த பிரச்சினைக்கு பயன்படுத்திக் கொண்டீங்க. உங்களுக்கும், உங்க மச்சினனுக்கும் எவ்வளவோ பகை இருக்கும். அதை நீங்களேதான் பேசித் தீர்த்துக்கொள்ளணும். உங்க பகை உணர்ச்சிக்கு ஊரைப் பயன்படுத்தக்கூடாது. இவ்வளவு நாள், நீங்க தீர்ப்பு சொல்லி நாங்க கேட்டுக் கொண்டிருந்தோம். இப்போ இதற்கும் நீங்களே ஒரு நல்ல தீர்ப்பா சொல்லுங்க. உங்க வீட்டுப் பெண்ணுக்கு இந்த நிலமை ஏற்பட்டிருந்தால் என்ன செய்வீங்களோ... அதைச் செய்யுங்க. பாகுபாடு இல்லாம இருக்கணும்" என்றனர் சிலர்.

## 2

அண்ணாமலையார் ஒரு முடிவு எடுத்தார். "சரி... நீங்க சொல்வதற்கு கட்டுப்படுகிறேன். என் பையனுக்கே அந்தப் பெண்ணை திருமணம் நடத்தி வைக்கிறேன்" என்றார்.

கூடி இருந்த அனைவரும் வாயைப் பிளந்தனர். இதை யாரும் எதிர்பார்க்கவில்லை! அத்தனை பேர் முகத்திலும் வியப்பு, ஆச்சர்யம். 'அவர் மகன் எங்கே! இந்தப் பட்டிக்காட்டுப் பெண் பாரதி எங்கே...?'

இதைக் கேட்டதும் ரவி பெருமளவு அதிர்ந்தான். "அப்பா!" என்றான் அலறலாக.

மகன் கையைப் பிடித்துக்கொண்டு, "இது உன் மாமன் செய்த சூழ்ச்சி. இதில் நான் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறேன். என் மானம், மரியாதை உன் கையிலதான் இருக்குது. அதைக் காப்பாற்று. உன் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன். என்னை நீயும் கைவிட்டுவிடாதே" என்றார்.

ரவிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. 'ஏன்டா இங்கு வந்தோம்?' என்று இருந்தது. 'என்ன செய்வது? எல்லார் முன்னிலையிலும் இப்படிச் சொல்லிவிட்டாரே! இப்போது மாட்டேன் என்றால், அப்பாவுக்கு தலைக்குனிவுதான்.

அப்பாவுக்கும் தெரியும்... போன தடவை ரோகிணியைக்





கூட்டி வந்து, அவளை விரும்புவதை வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் புரிந்துகொள்வார் என்று நினைத்தான். இந்த படிக்காத முட்டாள் பெண்ணை கட்டிக்கொண்டு என்ன செய்வது?'– அவன் மனதில் வெறுப்பு தோன்றியது.

"என்ன பண்ணையாரே! அப்பனும், மகனும் நாடகம் ஆடுறீங்களா? கீழ் சாதிப் பெண்ணை எப்படி மணப்பது என்று ரெண்டு பேரும் யோசிக்கிறீங்களா? என்னடா அநியாயம்... சபையில அத்தனை பேர் முன்னாடி வீராப்பா– 'என் மகனுக்கு கட்டி வைக்கிறேன்' என்று சொல்லிவிட்டு... இப்போது பேசாமல் இருந்தால் எப்படி? இந்நேரம் அடுத்தவனுக்கு தீர்ப்பு சொல்வது என்றால் எப்படிச் சொல்வீங்க?

என் பையன் ஒரு பெண்ணுடன் தப்பா நடந்துவிட்டான் என்று கீழ் சாதிப் பெண் என்று கூடப் பார்க்காமல் அவனுக்கே கட்டி வைக்க வைத்தீர்களே! இப்போது உங்களால் இந்தப் பெண்ணின் வாழ்க்கையே கேள்விக் குறியாகி இருக்கே? இதற்கு என்ன பதில் சொல்லப் போறீங்க?" என்றார் காரமாக ஒருவர்.

'தன்னைக் கண்டால் எதிரில் வரப் பயந்தவன்கூட இன்று நிற்க வைத்துக் கேள்வி கேட்கிறான். என் பிள்ளை எதுவும் பேசாமல் மவுனம் சாதிக்கிறான். இவன் என்னதான் நினைக்கிறான்?'

"ரவி என்னப்பா... இத்தனை பேர் பேசுறது உன் காதில் விழலையா? பேசாமல் இருக்கிறாயே! அப்பாவோட மானம் எப்படியோ போகட்டும் என்று நினைக்கிறாயா?"

"இல்லப்பா... கொஞ்சம் யோசித்துப் பாருங்க. நம் தகுதி என்ன... அந்தஸ்து என்ன? நான், என் படிப்பு... அதைவிட என் மனம்– அதைப் பற்றி யோசித்தீர்களா? இப்படி திடீர் முடிவு எடுத்து என்னை கட்டாயப்படுத்தலாமா? அவர்கள் சொந்தத்திலேயே ஒரு பையனைப் பார்த்து முடிவு பண்ணுங்க. அவர்களுக்கு என்ன வேண்டுமோ செய்யுங்க. தொழில் பண்ணணுமா... பணம் கொடுத்து உதவுங்க. அதை விட்டுட்டு, என்னைக் கல்யாணம் பண்ணச் சொல்வது எந்த விதத்தில் நியாயம்? இந்தப் பெண் நம் வீட்டில் வேலை செய்தவள். அம்மா இவளை மருமகளாக ஏற்றுக்கொள்வாங்களா? யோசித்துப் பாருங்க" என்று நிதானமாகவே சொன்னான்.

பண்ணையாருக்கு கோபம் வந்தது. "படிப்பு என்னடா பெரிய படிப்பு? இனிமேல் அந்தப் பெண்ணை நான் படிக்க வைக்கிறேன்.



நம்ம வீட்டுக்கு வந்தால் அவ அந்தஸ்து உயரப் போகுது. தகுதி... நாம் வளர்த்துக் கொள்வதுதானே தவிர, அது தானே வருவதில்லை.

மனிதர்களாகப் பார்த்து பிரித்து வைப்பதுதானே சாதி. எந்த தெய்வமாவது, 'நீ இந்த சாதி... அதனால கோவிலுக்கு உள்ளே வராதே' என்று சொன்னதுண்டா? நாம்தான் அவர்களைப் பிரித்து வைத்து வேடிக்கைப் பார்ப்பது.

நமக்கு என்ன உணர்ச்சிகள் இருக்குதோ, அதுதான் அவர்களுக்கும் இருக்கும். நம் உடம்பில் என்ன ரத்தம் ஓடுதோ, அதே நிறம்தான் அவங்க உடம்பிலும் ஓடுது. நமக்கும் பசிக்குது. அவங்களுக்கும் பசிக்குது. அவங்களும் பத்து மாசந்தான். நாமும் பத்து மாசந்தான். இதில் வேற்றுமை எங்கிருந்து வந்தது? எப்பவுமே நாம முற்போக்கா இருக்கணும். அடுத்தவர் முன் தலை நிமிர்ந்து வாழணும். இப்போ அந்தப் பெண்ணை திருமணம் செய்து, என் கவுரவத்தைக் காப்பாற்று. இல்லையென்றால் நான் உயிரை விடுவதைத் தவிர வேற வழியில்லை. எனக்கு மானமும், வாக்கும்தான் பெரிசே தவிர... உயிர் பெரிதில்லை. இனி முடிவு உன் கையில்" என்றார் மகனைப் பார்த்து.

கூட்டமே திகைத்தது.

## 3

ரவி யோசித்தான். அப்பாவின் பிடிவாதம் தெரிந்ததுதான். சொன்னதைச் செய்வார்.

அதற்குள் அவன் மாமன் கிருஷ்ணன், "என்ன... பையன் உன் பேச்சைக் கேட்கலையா? என்னமோ மார் தட்டிக்கிட்டீங்க. 'என் பிள்ளை உம் பிள்ளை மாதிரி ஊதாரி இல்ல. நான் கிழிச்ச கோட்டை தாண்ட மாட்டான். என் சொல்லை தட்ட மாட்டான். அவனை சுத்தமான ஆம்பிள்ளையாக வளர்த்திருக்கேன்'னு. அன்றைக்கு ஜம்பமாக பேசியது எல்லாம் பொய்யா...? உம் சாமர்த்தியம் எல்லாம் இந்த ஊர்க்காரப் பயல்களிடம்தானா? பெத்த மகனிடம் செல்லாது போலிருக்கே?" என்று பரிகாசம் செய்தார்.

பண்ணையாரின் மவுனம் மேலும் அவரை பேசத்தூண்டியது.

"போன தடவை வந்தபோது, பட்டணத்தில் இருந்து, ஒரு குட்டியைக் கூட்டி வந்தானே! அவளைத்தான் அவனுக்கு கட்டி வைக்கப் போறியா...?

அது சரி, உன் பையன், பட்டணத்துக்குப் போய் படித்தானோ... இல்லை பெண்களோடு ஊர் சுற்றினானோ... யார் கண்டது? அந்தப் பெண்ணோடு தோட்டம், வாய்க்கால், வரப்பு என்று சுற்றி அலைந்தது எல்லாம், இந்த ஊர் மக்களுக்குத் தெரியாது என்றா நினைக்கிறாய்? அப்படி பெண் பின்னால் சுற்றிய மகனுக்கு இந்தப் பெண்ணை பிடிக்குமா?" என்றார்.

இதைக் கேட்டதும் ரவி ஆத்திரம் அடைந்தான்.

உடனே விறுவிறுவென்று சென்று மணமேடையில் அமர்ந்தான். பெரியவர்கள் மாங்கல்யத்தை எடுத்துக் கொடுக்க... அதை வாங்கி அப்பெண் கழுத்தில் கட்டினான். எல்லோரும் வாயடைத்துப் போனார்கள்.

மாலையும், கழுத்துமாக வாசலில் நின்ற மகனைப் பார்த்து சிவகாமி அதிர்ந்துவிட்டாள். மயக்கம் போடாத குறைதான். பண்ணையார் தன் மனைவியிடம் திரும்பி, "ஆரத்தி கரைச்சு எடுத்துட்டு வா" என்றார்.

ஆனால் அவளோ 'திக்' பிரமை பிடித்தது போல் கதவைப் பிடித்துக்கொண்டு நின்றாள். வேலைக்காரி ஓடி வந்து, ஆரத்தி கரைத்து நீட்டினாள். அதை வாங்கும்போது அவள் கை நடுங்கியது.

"நீயே போய் எடு" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டாள். வேலைக்காரி ஆரத்தி எடுத்ததும், இருவரும் உள்ளே அடியெடுத்து வைத்தனர்.

ரவி தன் கழுத்தில் கிடந்த மாலையைக் கழட்டி சோபாவில் வீசி எறிந்தான். பின் மடமடவென்று மாடியேறி தன் அறைக்குச் சென்றுவிட்டான். கதவை அவன் அறைந்து சாத்தியது, பண்ணையாருக்கு கன்னத்தில் அடித்தது மாதிரி இருந்தது.

'இனி மனைவி என்ன பேசப் போகிறாளோ...?' என்ற கலக்கம் வேறு.

இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு, "என்ன இதெல்லாம்... என் பையனுக்கு இப்படி கல்யாணம் செய்து வைக்க நீங்க யார்? உங்களுக்கு மட்டும் எங்கிருந்து இந்த உரிமை வந்தது? பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் நான் இருக்கும்போது, என்னைக் கேட்காமல் ஒரு வேலைக்காரியைப் பிடித்து கட்டி வச்சிருக்கீங்களே?" என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள்.



பண்ணையார் பொறுமை இழந்தார். கை நீட்டி மனைவியின் கன்னத்தில் அறைந்தார்.

சிவகாமி திகைத்துப் போய்விட்டாள். இத்தனை கால தாம்பத்தியத்தில், அவர் கை நீட்டி அடித்ததில்லை. இப்போது அடிப்பதென்றால், அதுவும் வேலைக்காரப் பெண் முன்! அத்தனை கோபமும் அவள் மேல் திரும்பியது.

"அடிப் பாவி, வந்த அன்னிக்கே, இப்படி குடும்பத்தில் பிரச்சினை இழுத்து விட்டுட்டியே! இதுக்கெல்லாம் நீதான் காரணம். நீ இந்த வீட்டுக்கு வரக்கூடாது. வீட்டைவிட்டு வெளியே போ" என்று விரட்டினாள்.

பண்ணையார், "இந்தப் பிரச்சினைக்கெல்லாம் இந்தப் பெண்ணா காரணம்...? இல்லவே இல்ல. உன் அண்ணன்தான்டி காரணம். அவனாலதான் இப்படி நடந்தது. 'இவளைக் கல்யாணம் செய்துக்கிறேன்' என்று வாக்கு கொடுத்த ஒருத்தன், இன்று அவன் பேச்சைக் கேட்டுக்கிட்டு,'முடியாது' என்று சொல்லிட்டான். அத்தனை பேரும் என்னை காரித் துப்புறாங்க. இதற்கு உன் அண்ணன்தான் காரணம். அங்கேயே அவனை வெட்டிப் போட்டிருக்கணும். பேசாமல் வந்தேன் பாரு... என்னைச் சொல்லணும்!

'உன் பையனுக்கு கட்டி வை'ன்னு அவன்தான் ஊர் ஜனத்துக்கிட்டே சொல்லி, அத்தனை பேரும் என்னை கேள்வி கேட்கிற அளவுக்கு வெச்சிட்டான். எனக்கு எதிரே வரப் பயப்படுறவனெல்லாம் இப்ப எதிர்த்துப் பேசுறான். இதற்கு யார் காரணம். உன் அண்ணன்தான்!

எவ்வளவோ கெடுதல் பண்ணினான். நான் எதுவும் பேசாம ஒதுங்கிப் போனேன். இப்ப ரொம்பத் துள்ளுறான். அவனை ஒரே வெட்டா வெட்டினாத்தான் அடங்குவான். நீ எதுவும் பேசிக்கிட்டு பிரச்சினை பண்ணினே... இந்த வீட்டைவிட்டு கிளம்ப வேண்டியதுதான். எனக்கு மருமக இந்தப் பொண்ணுதான். இதில் சிறிதும் மாற்றமில்லை.

இருக்க பிரியம் இருந்தால் இரு. இல்லைன்னா கிளம்பு, உன் அண்ணன் வீட்டுக்கு! இனிமே இந்தப் பேச்சை பேசிக்கிட்டிருந்தே... நல்லா இருக்காது. உன் பையனுக்கும் புத்தி சொல்லு. அதை விட்டுட்டு அவனையும் எதாவது சொல்லி குழப்பினே, தெரியும் சேதி"



## வாசமே... வருவேன்

கவிதை

ந்தரியே
சொன்னா சொல்லெல்லாம் தேனாகும்-
ன் பட்டுவிரல் தொட்டுவிட்டால்
ட இடம் பொன்னாகும்
வலாகி உன் பார்வை
லாவெல்லாம் குத்துதடி- எனக்கு
று வழி இல்லாம
றும் மனசு வேகுதடி
ல மரம் போல
ால மயிலே
னுக்கு கோலப்புள்ளியடி
விழித் தாமரையே
திலமே சித்திரமே
க்காய் வாசனையே
ழுள்ள சந்தனமே
சைப் புன்னகையை
ளி முகம் வீசட்டும்
ப் பெருமழையில்
ளி மனம் நனையட்டும்
சம் இல்லையடி....
ள்ளை மனம் சொந்தமடி
ளம் எல்லையடி
ழும் வரை இன்பமடி
ளல்லாம் உன் நெனைப்பில்
மனம் வாடுதடி
பார்த்துத் தூதுவிடு
பார்த்துக் கைபிடிப்பேன்!

– பிச்சினிக்காடு இளங்கோ

என்று பகிரங்கமாகவே மிரட்டிவிட்டுப் போனார்.

பாரதி மிரண்டு போய் நின்றாள்... இங்கு நடக்கும் கலாட்டாவைப் பார்த்து! இன்று வரை அவள் இந்த வீட்டின் உள் கூடத்துக்கு வந்ததில்லை. பின் கட்டோடு சரி. இப்போது ஏது செய்வது?

என்ன நடந்தது... நடக்கிறது என்று புரியாமல் நின்றாள். கட்டுவதாக சொன்ன மாப்பிள்ளை யார் என்றே இதுவரை தெரியாது. அவன் ஏன் மாட்டேன் என்றான்? இவன் எதற்கு கல்யாணம் செய்துகொண்டான் என்று புரிந்துகொள்ளக் கூடிய வயதும் - பக்குவமும் இல்லை.

பதினேழு வயதானவள் – கல்யாணக் கனவுகள் எதுவுமின்றி, ஒரு சிட்டுப் போல் சிறகடித்து சுற்றித் திரிந்தாள். பத்தாவது வரை படித்திருக்கிறாள். படிப்பில் படுசுட்டி. வயதுக்கு வந்ததும் வீட்டில் வைத்திருந்து இப்போது கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டார்கள்.

கிராமத்துப் பெண், கள்ளம் கபடு இல்லாத மனது. இதுவரை எந்த ஒரு சலனமும் இல்லாமல் பட்டாம்பூச்சியாய் பறந்து திரிந்தாள். திடீரென ஒரு நாள் அவளிடம் வந்த அப்பா, ‘அம்மணி... உனக்கு கல்யாணம்’ என்றார்.

எதுவும் கேட்காமல் தலையை ஆட்டினாள்.

தன் மகளுக்கு மனசும், உடம்பும் அதற்கான பக்குவத்துக்கு வந்துவிட்டதா? என்று யோசிக்கவில்லை. இவளுக்கு சீக்கிரம் மணம் முடிந்தால்தான், பின்னர் இருக்கும் ரெண்டு பெண்களுக்கும் சாகவாசமாக வைக்க முடியும் என்று கருதி இந்த ஏற்பாட்டைச் செய்தார்.

‘மாப்பிள்ளை யார்? அவரைப் பார்க்க வேண்டும். அவர் என்ன வேலை பார்க்கிறார்?’ என்று சிந்திக்கக்கூட பாரதிக்குத் தெரியவில்லை. எவ்வளவுதான் நாகரிகத்திலும், படிப்பிலும் நம் நாடு முன்னேறினாலும் இன்னும் பல கிராமங் களில் இந்த மாதிரிதான் திருமணம் நடந்து வருகிறது. அதில் ஒருத்தி பாரதி.

வேறொரு வேலைக் காரியால் மற்றொரு அறைக்குள் அழைத்துச் செல்லப் பட்டாள்.

அங்கு மாலையைக் கழட்டி வைத்துவிட்டு அமர்ந்தாள். பசித்தது. யாரும் வந்து சாப்பிடக் கூப்பிட வில்லை. தாகத்தில் நாக்கு வறண்டது. எழுந்து மெதுவாக வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

எல்லோரும் சாப்பிட்டுவிட்டு, பாத்திரங்கள் அப்படியே கிடந்தன. காலையிலும் அவள் சாப்பிடவில்லை. தண்ணியாவது குடிக்கலாம் என்று மெதுவாகச் சென்று தம்ளரை எடுத்தாள். இறுக்கமாகப் பிடித்தும் கையின் நடுக்கத்தில் தம்ளர் கீழே விழுந்தது.

பலமாக சத்தம் எழுந்தது.

4

சத்தம் கேட்டு வெளியே வந்து மாமியார் பார்த்ததும் அதிர்ந்தாள். “என்னடி, நீ கொண்டு வந்த சீர் செனத்திக்கு, தம்ளரைப் போட்டு உடைக்க வேண்டியதுதான் பாக்கி. உன் அப்பன் வீட்டில் இருந்தா கொண்டு வந்தே... இப்படிப் போட்டு உடைக்கிறதுக்கு? உன்னை யாருடி இங்கு வரச் சொன்னது? விருந்து சாப்பிட வந்தியா... என்ன தைரியம் உனக்கு?

நாங்க சாப்பிட்ட மிச்சம் இருக்கு. அதைச் சாப்பிடு. இதுநாள் வரை அப்படித்தானே சாப்பிட்டே! இப்போது உனக்கு வாழ்வு வந்துவிட்டதா?"

பாரதி எதுவும் பேசாமல் தம்ளரை எடுத்து மேலே வைத்துவிட்டு, தண்ணீர் குடிக்காமலேயே சென்றாள்.

"எங்கேடி போற... ஓய்வு எடுக்கவா? இந்த வேலைகளை யார் பார்ப்பது? இதையெல்லாம் சுத்தம் பண்ணு. நீ இந்த வீட்டுக்கு மகாராணி இல்ல... வேலைக்காரிதான். அது நினைவுல இருக்கட்டும். சீக்கிரம் முடி... வேலைகளை" என்று சென்றுவிட்டாள்.

பாரதி அத்தனை பாத்திரங்களையும், எடுத்துவிட்டு மேசையைச் சுத்தம் செய்தாள். பாத்திரங்களை கழுவி அடுக்கி வைத்தாள்.

வீட்டு வேலைக்காரிகள்கூட அவளிடம் பேசவில்லை. அவர்கள் மேலும் பாத்திரங்களைக் கொண்டு வந்து போட்டுவிட்டுச் சென்றனர்.

வாயே திறக்காமல் சகலத்தையும் கழுவினாள். பசியில் உயிர் போனது. குழாயில் வந்த தண்ணியைப் பிடித்துக் குடித்தாள். முகத்தைக் கழுவிக்கொண்டு அறைக்கு வந்தாள். இரவும் அவளை யாரும் சாப்பிடச் சொல்லவில்லை.

பண்ணையார் வெளியே போயிருந்தார். அவர் வந்ததும், "பாரதி எங்கே... சாப்பிட்டாச்சா?" எனக் கேட்டுக்கொண்டே "பாரதி" என்று குரல் கொடுத்தார்.

அவள் மெல்ல வந்து நின்றாள். 'இவர் சாப்பிடச் சொல்ல மாட்டாரா? பசி தாங்க முடியலையே! கடவுளே... இவராவது சாப்பிட சொல்ல வேண்டும்'– என்று மனதார வேண்டினாள்.

"சாப்பிட்டியாம்மா?" என்று அவர் கேட்டு வாய் மூடும் முன் மாமியார்காரி, "அவ இப்பத்தான் சாப்பிட்டா. நீங்கதான் இன்னும் சாப்பிடலை. வெளியே போயிட்டு வந்திருக்கீங்க. களைப்பா இருப்பீங்க. வாங்க... வந்து சாப்பிடுங்க" என்று சொல்லிவிட்டு, கணவனின் முதுகுக்குப் பின் நின்று பாரதியைப் பார்த்து முறைத்தாள்.

பாரதி தலை குனிந்து நின்றாள். மாமியார் தேன் குரலில், "நீ ஏன் நிக்கிறே? இடது பக்க அறையில போய் ஓய்வு எடு" என்று விரட்டினாள். அவளும் மறுப்பு காட்டாமல் சென்றுவிட்டாள்.





பண்ணையார் தன் மனைவியிடம் திரும்பினார். "ஏன் அதை அங்கே போய் படுக்கச் சொல்றே? அவனோட அறைக்கு அனுப்புறதுதானே?"

"அவன் கோபமா இருக்கான். தணியட்டும். பிறகு பார்க்கலாம்."

"கோபம் என் மேலேதானே? அந்தப் பெண் மேல என்ன...? பாவம்... பயந்து போய் இருக்குது."

மறுநாள் காலை. ரவி ஒரு சூட்கேசோடு கிளம்பி கீழே வந்தான். அப்பாவிடம், "நான் சென்னைக்குப் போறேன்" என்றான்.

"அவ்வளவு அவசரம் என்ன? அடுத்த வாரம் போக வேண்டியதுதானே?"

"வேலை இருக்குது. அவசரமா வரச் சொல்லி போன் வந்தது."

"நான் போய் பார்க்கிறேன். நீ இங்கேயே இருந்துட்டு, அடுத்த வாரம் வா."

"இல்லப்பா... நான் கட்டாயம் போகணும். நீங்க அலைய வேண்டாம்."

"சரி... உன் இஷ்டம். போயிட்டு வா. எப்போ பாரதியை கூட்டிட்டு போறே?" என்றார்.

"பாரதியா... யாரது?"

அவனை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு, "அதான்... உன் மனைவி."

அவன் அதிர்ந்தான். "ஓ... அவ பெயர் பாரதியா? அவள் இங்கேயே இருக்கட்டும். பிறகு பார்க்கலாம்" என்று சென்றுவிட்டான்.

'விளக்கமாத்துக்கு பட்டு குஞ்சானாம். பேரைப் பாரு பேரை... பா...ரதி' என்று முனகியவாறே அவசர அவசரமாக வெளியே சென்றுவிட்டான். பண்ணையாரும் போய்விட, அவளை அழைத்தாள் மாமியார். "வீட்டைத் துடைத்து, துணிகளை துவைக்கணும். சமையலையும் கவனி" என்று சொல்லிவிட்டு போய்விட்டாள்.

அதன்படியே வீட்டைத் துடைத்து, துணிகளை துவைத்து காயப் போட்டுவிட்டு, சமையல் வேலைகளில் கூடமாட ஒத்தாசை செய்தாள்.

வேலைக்காரியை சிவகாமி கூப்பிட்டு, "பாரதியை கவனித்துக்



* உலகில் வேகமாக பறக்கும் பூச்சி இனம்– 'டீர்பாட்பிளை'.





* வட அட்லாண்டிக் கடலின் நிறம் நீலம். வடக்கு பிராந்தியத்தில் மட்டும் அது பச்சை நிறத்தில் இருக்கும்.

– **கே.பொன்னுசாமி**, சென்னை.

கொள். எதையாவது எடுத்து சாப்பிட்டுவிடப் போகிறாள்" என்றாள்.

இதை பாரதியும் கேட்டாள். அவள் கண்களில் நீர் ததும்பியது. அவள் ஏழை வீட்டு வரவுதான். ஆனால் சாப்பாட்டுக்கு அடுத்த வீடு சென்றதில்லை. இப்படி திருடி சாப்பிடும் பழக்கமும் இல்லை.

ரொம்ப சோர்ந்து போய்விட்டாள். அந்த பிஞ்சு உடம்பும், மனசும் இதைத் தாங்கவில்லை. வேலையை முடித்துவிட்டு ஓரமாக உட்கார்ந்துவிட்டாள். மற்றவர்கள் டி.வி. பார்த்தனர். இவள் அதற்குக்கூட பயந்து அந்தப் பக்கம் போகவில்லை.

மதியம் எல்லோரும் சாப்பிட்டு முடிந்தது. தட்டில் கொஞ்சம் சாதம் போட்டு மோர் ஊற்றி அவளிடம் தள்ளிவிட்டாள் வேலைக்காரி.

பாரதிக்கு உள்ளம் கொதித்தது.

'இதை சாப்பிட்டுத்தான் உயிர் வாழ வேண்டுமா?' என்றிருந்தது. அதை 'வேண்டாம்' என்று சொல்வதற்கும் பயமாக இருந்தது. கடைசியில் பசி வென்றது. அதை எடுத்துப் பிசைந்து, வாயில் வைத்தாள். அதில் உப்பு இல்லை. தனக்கு உப்பு தேவையில்லைதான். சாதத்தோடு கண்ணீரும் கலந்து சாப்பிட்டாள்.

அப்பா, அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. மாமியாரிடம் போய், "நான் அப்பாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றாள்.

உடனே அவள் வறுத்து எடுத்துவிட்டாள்.

"அங்கு போனால் இங்கு வராதே. எதுக்கு உன் அப்பன் வீட்டுக்கு... சிராடப் போறீயா? இல்லை... மறுவீட்டுக்கு உன் அப்பன் அழைத்தானா? எங்க தலையெழுத்து.... உன்னை கட்டிக்கொண்டு நாங்க அழ வேண்டியது இருக்கு. என் பிள்ளைக்கு எப்படி கல்யாணம் பண்ண வேண்டும் என்று நினைத்தேன். அவனுக்கு நீ பொருத்தமா? குடும்பத்துக்கு ஏத்த மாதிரி நல்ல அழகான– படித்த பெண்ணா பார்த்து கட்டி வைக்கப் போறேன். நீ உன் அப்பன் வீட்டுக்குப் போய் அங்கேயே இருந்துகொள்."

அவள் போட்ட சத்தத்தில் பயந்து நடுங்கிவிட்டாள். பிறகு வாயே திறக்கவில்லை!

5

நாட்கள் உருண்டோடின. பாரதியை 'பிளஸ்–2' எழுத வைத்தார் பண்ணையார்.

ரவி சென்னையில் இருந்து, கிராமத்துக்கு வரவே இல்லை. அங்கு வேலையும் அதிகமாக இருந்தது.

தன் காதலி ரோகிணியிடம் நடந்ததை எல்லாம் சொன்னான். அதை அவள் நம்பவில்லை. கத்தி– ஆர்ப்பாட்டம் செய்தாள். "நீங்கள் ஒரு துரோகி. என்னை நம்ப வைத்து, கழுத்தை அறுத்துட்டீங்க. அப்பா பேச்சை கேட்பவர், என்னை எதற்காக காதலிக்க வேண்டும்? போன தடவை உங்க ஊருக்கு வந்தபோதே அவர் என்னை ஒரு மாதிரி பார்த்தார். அப்பவே அவருக்குப் பிடிக்கவில்லை."

"இல்லை ரோகினி, நீ சொல்வது தப்பு. இது யாரும் எதிர்பார்க்காதது. என் அப்பாகூட இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை."

"அவள் எப்படி... அழகா?" என்றாள், மூக்கை உறிஞ்சிக் கொண்டே!

ரவி சிரித்துவிட்டான். "பரவாயில்லையே... உனக்கு பொறாமை வந்துவிட்டது."

"என் நிலைமையைப் பார்த்தால், உங்களுக்கு சிரிப்பாக இருக்கா? நான் இப்ப என்ன செய்வது? இப்படிப் பண்ணிட்டீங்களே?" என்று அழுதாள்.



# அதிசய இயற்கை 7

இயற்கை அதிசயங்கள் எத்தனையோ இருந்தாலும், புகழ் பெற்ற இயற்கை அதிசயங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 7 அதிசயங்கள் இதோ:

1. **சாக்கடல்:** இது, உப்பு நீர் ஏரி. மேற்கில் பாலஸ்தீனம், இஸ்ரேல் ஆகிய நாடுகளையும் , கிழக்கில் ஜோர்டனையும் கொண்டுள்ளது. உலகின் மிகத் தாழ்வான முனையாகவும், கடல் நீரைவிட 8.6 மடங்கு உப்புத் தன்மை மிகுந்ததாகவும் திகழ்கிறது.

2. **அமேசான்:** இந்த மழைக் காடு உலகின் மிகப் பெரியது. பூமியின் மழைக் காடுகளில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமான பங்கு வகிக்கிறது. இதன் நீர்ப் பெருக்கு, உலகின் பெரிய 10 ஆறுகளின் ஒட்டு மொத்த நீர்ப் பெருக்குக்குச் சமமானது.

3. **ஏஞ்சல்:** இந்த அருவியை முதலில் அடைந்த ஜிம்மி ஏஞ்சல் பெயரால் அழைக்கப்படுகிறது. 979 மீட்டர் உயரத்தில் இருந்து விழுகிறது. நயாகராவைவிட 19 மடங்கு உயரமானது. இதுவே உலகின் மிக உயரமான அருவி. வெனிசுலா, பிரேசில் நாடுகளின் எல்லைகளுக்கு இடையில் கெனாய்மா தேசியப் பூங்காவில் அமைந்துள்ளது.

4. **கிராண்ட் கேன்யன்:** இப்பள்ளத்தாக்கு கிட்டத்தட்ட 60 லட்சம் ஆண்டுகளுக்கு முன் கொலராடோ ஆற்றில் உருவாக்கப்பட்டது. 446 கி.மீ. அகலமும், 16 கி.மீ. ஆழமும் கொண்டது.




5. **கலபகோஸ்:** இது எரிமலைத் தீவாகும். அழியும் நிலையில் உள்ள சிற்றினங்களுக்குப் புகழ்பெற்றது.

6. **ஹேலாங்:** வியட்நாமில் கிவாஸ்நின் பிரதேசத்தில் உள்ளது. இந்த வளைகுடாவில் நிறைய தீவுகள் உண்டு. பார்ப்பதற்கு அழகாக காட்சி அளிக்கும்.

7. **கிரேட் பேரியர்:** இக்கடலோரப் பாறை, உலகின் மிக நீண்ட கடற்கரையோர பாறை அமைப்பு. புறக்கோளில் இருந்து இதைப் பார்ப்பதும் சாத்தியம்.

# அட்டகாசம்



...ந்தர்ராஜனின்
...ந்தினி' நாவல்
...ின்றும் ஆவிகள்
...கிறது என்பது
...ரிகிறது.

...ம்பத்குமார், ஈரோடு.

கதையைச் சொன்ன விதம் வித்தியாசமாகவும்... சம்பவங்கள் விறுவிறுப்பாகவும் இருந்தன. நல்லதோர் சுவாரசியமான நாவலைச் சுவைத்த மகிழ்ச்சியுடன் நிரம்பியது மனம்.

– அயன்புரம் த.சத்தியநாராயணன்.

... படைப்பு என்றே

...பதி, தோட்டக்குறிச்சி.

...சமாக இருந்தது.
... கலந்த அசத்தலான

– சி.தனலட்சுமி, கோவை.

ஆசை நிறைவேறாமல் இறப்பவர்கள், ஆவியாக வந்து தனது குடும்பத்தினரின் பாதுகாப்பைப் பார்த்துக் கொள்வர் என்ற ரகசியத்தை வெளிப்படுத்தியது.

– வி.எஸ்.மோகன், மதுரை.

...சௌந்தர்ராஜனின்
...ாக இருந்தது.
...னுக்கு, கவிதை,
...ல்சுவையாக வந்தது
...தேன்.

...பிரமணியன், திருச்சி.

அட்டையில் இருந்து, உள்ளடக்கம் வரை வரவேற்கத்தக்க மாற்றம் நிறைந்திருப்பதை நன்கு ரசிக்க முடிகிறது.

– வெ.லட்சுமி நாராயணன், வடலூர்.

... கருத்துகளை அனுப்ப வேண்டிய முகவரி:
இதயம் பேசுகிறது,
...ராணி முத்து', சென்னை- 600 007.



"நடந்தது நடந்துவிட்டது. அதை நினைத்து இனி எந்தப் பயனும் இல்லை. நானே அதை மறக்க முயற்சி செய்கிறேன். நீ பேசிப் பேசி எனக்கு நினைவுபடுத்தாதே. உன்னை நான் கைவிட மாட்டேன்" என்றான்.

"அப்படியென்றால், நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து பண்ணிக்குவீங்களா?" என்றாள்.

"அதைப் பிறகு யோசிப்போம். இப்போது நாம் எப்பவும் போல் இருப்போம்."

"உங்க அப்பாவுக்குத் தெரிந்தால்..."

"தெரிந்தால் தெரியட்டும். அவர் பிடிவாதத்தால்தான் நான், அவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டேன். இனி என் இஷ்டப்படிதான் வாழ்வேன். இதை மாற்ற இனி யாராலும் முடியாது."

"என்னை கைவிட்டுவிட மாட்டீங்களே?" என்றாள்.

அவன், "மாட்டேன்" என தலை அசைத்தான். ரோகிணி, கன்னத்தில் முத்தம் கொடுத்தாள்.

பாரதி 'பிளஸ்–2' தேர்ச்சியானதும் தொலைதூரக் கல்வியில் 'டிகிரி' சேர்த்துவிட்டார். இடையில் ரவி, ஊருக்கு வந்தான். மனைவி இருப்பதையே மறந்தவன் போல நடந்துகொண்டான். அவளை திரும்பிக்கூட பார்க்கவில்லை.

அவள் எப்பவும் போல் தன் வேலையைப் பார்த்தாள். 'ஒரு நேரச் சாப்பாடுதான். இதை யாரிடமாவது சொன்னால், இந்த வீட்டைவிட்டுத் துரத்திவிடுவேன்' என்று மாமியார் மிரட்டி வைத்திருந்தாள்.

எனவே, மதியம் மட்டும் சாப்பிடுவாள். வேலைக்காரி போடும் மோர் சாதம் மட்டும்தான். இன்று வரை அவள் உப்புப் போட்டு இங்கே சாப்பிடவில்லை. வேறு எதையும் தொட மாட்டாள். பசி தாங்கப் பழகிக்கொண்டாள்.

அன்று ரவி சாப்பிட்டுக்கொண்டிருந்தான். இவள் கதவு இடுக்கின் வழியாகப் பார்த்தாள். அவன் அம்மா பரிமாறினாள். மகனுக்கு ஊட்டிவிட்டாள். அப்போது மகனிடம் பெருமையாக, "பாரதிக்கு தினமும் ஒரு வேளை சாப்பாடுதான். ஆனா, வேலைக்காரியிடம் சொல்லி ரொம்பவே வேலை வாங்கிவிடுவேன். அப்பன் வீட்டுக்கு

# வீரப் பதில்




புலவர் புகழேந்தியை மட்டம் தட்ட நினைத்தார் ஒட்டக்கூத்தர். "எங்கள் சோழ அரசன், முதுகுக்குக் கவசம் கட்டுவது இல்லை! ஏன் தெரியுமா? பெரிய வீரன்" என்றார்.

உடனே புகழேந்தி, "உங்கள் சோழ அரசன், முதுகுக்குக் கவசம் போடாமல் இருப்பதற்குக் காரணம் எங்கள் பாண்டிய அரசன் மேலுள்ள நம்பிக்கைதான்! அதாவது, புறமுதுகு காட்டி ஓடுகிறவர்கள் மீது பாண்டியன் ஒருபோதும் வேல் எறிய மாட்டார்" என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் ஒட்டக்கூத்தரால் பதில் பேச முடியவில்லை.

–மெர்வின், சென்னை.

அவளை அனுப்புவதில்லை. நம்ம வீட்டைவிட்டு வெளியே விடுவதில்லை. எல்லா வேலையும் அவளைத்தான் செய்யச் சொல்கிறேன்" என்றாள்.

"இது அப்பாவுக்குத் தெரியுமா?" என்றான் ரவி.

"தெரியாது. சொல்லக்கூடாது என்று அவளிடம் சொல்லி வைத்திருக்கேன்."

பிறகு அவன் எதுவும் பேசவில்லை. பாரதிக்கு கண்ணீர் பெருகியது.

'நான் என்ன தப்பு செய்தேன்? எதற்கு இந்த தண்டனை? 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்' என்று நானா கேட்டேன். 'முடியாது' என்றால், என்னை விடவேண்டியதுதானே?'

ரவியின் தங்கை சுமதி, ஊரில் இருந்து வந்திருந்தாள். அவளின் இரண்டு வயது மகன் துறுதுறுவென்று இருந்தான். வீட்டில் ஒரு பொருள் வைக்க முடியவில்லை. அத்தனையும் எடுத்துப் போட்டு உடைத்தான். அவனை கவனிக்கும் வேலையும் இப்போது பாரதிக்கு சேர்ந்துகொண்டது.

ரவியின் தங்கையோ பாரதியை வெறுத்தாள். "உனக்கு என்ன



தகுதி இருக்கு... என் அண்ணனை மணப்பதற்கு? எங்கள் வீட்டுக்குள் கால் வைப்பதற்குக்கூட உனக்குத் தகுதி இல்லை. என் வீட்டில் எல்லோரும் கேவலமாகப் பேசுகிறார்கள். அப்பா இப்படிப் பண்ணிவிட்டாரே...?" என்று திட்டினாள்.

பாரதி எதுவும் பேசாமல் மவுனம் சாதித்தாள். இரண்டு நாள் கழித்து திடீரென்று, "என் மகனின் கழுத்தில் கிடந்த செயினை காணவில்லை. நீதான் திருடி இருப்பாய்" என்று அவள் மீது பழி போட்டாள்.

"நான் பார்க்கவில்லை. எனக்குத் தெரியாது" என்று மறுத்துப் பார்த்தாள்.

சுமதி தன் அம்மாவிடம் சொன்னாள். அவளும்...

" செயினை எடுத்து உன் அப்பன் வீட்டுக்கு கொடுத்துட்டாயா? இந்த மாதிரி பிச்சைக்காரி மருமகளா வந்தா, திருடாமே என்ன செய்வா...?" என்று அவளது குடும்பத்தைப் பற்றி கேவலமாகப் பேசினாள்.

"நான் எடுக்கவில்லை அத்தே."

"ஏ...ய்... என்னை உன் வாயாலே 'அத்தை'ன்னு சொல்லாதே! உன்னை அப்படியே கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுவேன்" என்று சடையைப் பிடித்து ஆட்டினாள்.

வலி தாங்க முடியாமல் பாரதி, "விடுங்க. எனக்கு வலிக்குது" என்று கெஞ்சினாள். அப்போது ரவி வந்தான். அவனிடமும் நடந்ததைச் சொன்னாள் அம்மா.

அவன் இதுதான் சமயம் என்று கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தான். அந்த அடியில் தடுமாறிவிட்டாள். குனிந்த தலை நிமிரவில்லை.

"சொல்லுடி... செயினை என்ன பண்ணினே? அதை எடுத்து உன் தங்கச்சிக்கு போட்டு, என்னை மாதிரி பெரிய பணக்காரனாகப் பிடிக்கச் சொன்னாயா?" என்று வார்த்தைகளில் நெருப்பைக் கக்கினான்.

பாரதிக்கு அங்கு இருக்க முடியவில்லை. 'அப்பா வீட்டுக்குப் போய்விடுவோமா?' என்று நினைத்தாள்.

மதியம் எல்லோரும் சாப்பிட்டபின் சற்று கண் அயர்ந்தனர். அப்போது பின்வாசல் வழியாக புறப்பட்டுச் சென்றாள்.

சிறுகதை

# மாற்றம்

**பாரதி தேவராஜ்**

கார் வேகம் தணிந்து 'போர்ட்டிகோ'வில் நிற்கவும்... துள்ளிக் குதித்து வந்து கதவைத் திறந்துவிட்டாள், தனி உதவியாளர் சுனிதா.

ரமேஷிடம் 'பிரீப்கேஸை' வாங்கிக்கொண்டாள். அவள் நவீன ரகம். எப்போதும் 'மாடர்ன் டிரஸ்ஸை'த்தான் விரும்புவாள். அலுவலக பணியாளர்கள் அத்தனை பேரின் கவனத்தையும் ஈர்ப்பாள். ரமேஷ் அவளை மிகவும் விரும்பினான். திருமணம் செய்து கொள்ளவும் தயாரானான். சுனிதாவும் ஏற்றுக்கொள்ள தயாரானாள்.



திருமணம் தொடர்பாக தன் அம்மாவிடம் அனுமதி கேட்டான். தாய் சில நிபந்தனைகள் விதித்தார். இவற்றை சுனிதா ஏற்றுக் கொள்வாளோ... என்னவோ...? என்று தயக்கம் ஏற்பட்டது. இருந்தபோதும் மெதுவாக தன் தாயின் நிபந்தனையைச் சொன்னான்.

"சுனிதா– அம்மா கொஞ்சம் பழமை விரும்பி. நீ 'மாடர்ன் டிரஸ்' போடுறது அவங்களுக்குப் பிடிக்காது. ஆனா, கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டாங்க. ஒரு பத்து நாள் மட்டும் சேலை கட்டினா போதும். அப்புறம் ஆபீஸ் வரும்போது பழையபடி 'மாடர்ன்'னா வரலாம். ஏதாச்சும் சொல்லி சமாளிச்சுக்கலாம். என்ன சொல்றே?"

"நீங்க சொன்னா மறுக்கவா போறேன்? உங்க இஷ்டம்."

கல்யாணம் தடபுடலாய் நடந்தது.

விருந்து, கோவில் குளம் என்று பத்து நாளும் சுனிதா விதவிதமாய் பட்டுச் சேலையில் வலம் வந்தாள்.

'இதுகூட 'சூப்பர்'தான்!' என்று அவள் மனதுக்குப்பட்டது. மறுநாள் அலுவலகம் செல்ல வேண்டும். இன்றிருந்து மறுபடியும் 'மாடர்ன் டிரஸ்'தான் என்று எதிர்பார்த்தவனுக்கு ஏமாற்றம். விலை உயர்ந்த காஞ்சி பட்டுச் சேலையில் புறப்பட்டாள் அவள்.

"ஏன்... இன்னைக்கு ஆபீசுக்குத்தான் போகப் போறோம். 'மாடர்ன் டிரஸ்' போடலையா?"

"இல்லைங்க... இனிமே தினம் தினம் சேலையிலதான் ஆபீசுக்கு வருவேன். 'மாடர்ன் டிரஸ்'ல வரும்போதும் எல்லோரும் ஒருமாதிரி பார்ப்பாங்க. ஆனால், சேலை கட்டி இருக்கும்போது மரியாதையாய் பார்ப்பதுடன், மதிப்பாகவும் நடந்துக்கிறாங்க" என்றாள்.

மனைவியை வியப்பாக பார்த்தான் ரமேஷ்.

*



அம்மாதான் முதலில் பார்த்தாள். ஓடி வந்து, "மகளே... பாரதி" என்று கட்டி அணைத்துக்கொண்டாள். அவள் சத்தத்தைக் கேட்ட பலரும் பார்க்க வந்தனர்.

"எப்படிம்மா இருக்கே?" என்று கண்ணீருடன் விசாரித்தார் அப்பா. பாரதிக்கு அழுகை வந்தது.

"அப்பா... நான் இனி அங்கு போகவேமாட்டேன். இங்கேயே இருந்துக்கிறேன்" என்று அழுதாள்.

அம்மாவும், அப்பாவும் பதறிவிட்டனர்.

"ஏம்மா இப்படிச் சொல்றே? பெரிய இடம். கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருக்கும். நீதான் அனுசரிச்சு நடந்துக்கணும். நீ இங்கே வந்துட்டா உன் தங்கைகளின் நிலை என்னாகும்? அவர்களுக்கு எப்படி கல்யாணம் நடக்கும்? பண்ணையார் என்ன நினைப்பார்? அவர் மரியாதையைக் காப்பாற்ற வேண்டாமா? நீ அந்த வீட்டு மருமகள். அவர்கள் கவுரவத்தை குலைப்பது போல் நடந்துக்கலாமா?

உன்னை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு தயக்கமாகத்தான் இருக்கும். அவங்க அந்தஸ்து என்ன... நம் நிலைமை என்ன? உனக்கு

நல்ல வாழ்வு கிடைச்சிருக்கு. அதை வீணாக்கிடாதே” என்றார்.

“அப்பா... உங்களைப் பார்க்கக்கூட வரக்கூடாதுன்னு சொல்றாங்க.”

“பரவாயில்லை. நீ எங்களைப் பார்க்க வர வேண்டாம். அவர்கள் என்ன சொல்றாங்களோ அதன்படி நட. இப்ப வந்தது அவர்களுக்குத் தெரியுமா?”

“தெரியாமல்தான் வந்தேன்.”

“இது ரொம்ப தப்பு. இது மாதிரி வரக் கூடாது. உடனே உன் வீட்டுக்குப் போ” என்றார்.

பாரதிக்கு என்னமோ போல் இருந்தது. ‘பெற்றோர் வீட்டுக்கு வந்தால் ஆறுதல் கிடைக்கும். இனி புகுந்த வீடு போக வேண்டாம். எங்களுடனே இரு. இருப்பதை சாப்பிட்டு சந்தோசமாக இருக்கலாம்’ என்று சொல்வாங்க என்று எதிர்பார்த்தாள். ஆனால், ‘இங்கு இப்படி வராதே’ என்று சொன்னவுடன், அவளுக்கு முகம் தொங்கிப் போயிற்று.

தந்தையின் நிலையை எண்ணிப் பார்த்தாள். அவர் சொல்வது சரிதான் என்று நினைத்தாள். உடனே கிளம்பிவிட்டாள்.

## 6

வீட்டுக்குள் மெதுவாகச் சென்றாள். அவர்கள் அத்தனை பேரும் ‘ஹாலில்’ இருந்தனர். இவள் வந்ததைப் பார்த்து, “எங்கேடி போயிட்டு வந்தே?” என்றார் சிவகாமி.

“அப்பா வீட்டுக்கு...” என்றாள்.

“உன்னைத்தான் அங்கே போகக் கூடாதுன்னு சொன்னேனே! எதற்கு போனாய்? எதையாவது திருடிக் குடுத்துட்டு வந்தாயா? என்ன தைரியம் இருந்தால்... நான் சொல்லியும் உன் அப்பன் வீட்டுக்குப் போவே? பாத்தியாடா... அவள் செய்யும் காரியத்தை? நான் சொல்வது எதையும் கேட்பதில்லை. எவ்வளவு திமிர் பாரு. நீ சரியில்லைடா. அதான் இந்த ஆட்டம் போடுறா. அவளை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கணும்.”

பாரதி உள்ளே போய் காப்பி எடுத்து வந்தாள். ரவியிடம் கொடுத்தாள். காப்பி வாங்கும் சாக்கில் அவள் பெருவிரலைப்



பிடித்து, நகத்தால் அழுத்தினான். அவளுக்கு வலியில் உயிர் போயிற்று. உதட்டைக் கடித்து வலியைப் பொறுத்துக்கொண்டாள். அவன் பார்வை அவளது முகத்திலேயே இருந்தது.

பின் மெதுவாக விட்டான். ‘யாரும் அறியாமல் அடுத்தவர் முன்னிலையில் எப்படி சத்தம் போடாமல்– திட்டாமல் தண்டிக்கிறான். மகாகெட்டிக்காரன்தான்’ என்று மனதில் நினைத்தாள்.

ரெண்டு நாட்களில் ரவி சென்னைக்குச் சென்றுவிட்டான். பாரதி அவ்வளவு வேலையும் பார்த்துக்கொண்டு, நன்றாகவும் படித்தாள். இப்போது வீட்டை நிர்வாகம் பண்ணவும்– அழகுபடுத்தவும் கற்றுக்கொண்டாள். வீட்டுக்கு வந்தவர்களை எவ்வாறு உபசரிப்பது– வெளிஇடங்களில் எப்படி நடந்துகொள்வது? என்று அத்தனையும் பழகிவிட்டாள்.

சுமதிக்கு அவளின் நீண்ட கூந்தலும், அழகிய விழிகளும், ‘பார்லர்’ போகாமல் பளிச்சிடும் வில் புருவமும், முகத்தின் மினு மினுப்பும் பொறாமையைத் தூண்டின.

அவளைப் பார்த்தால்... இல்லாத வீட்டுப் பெண் போல் இருக்காது. நடையிலேயே உள்ள நிமிர்வு. வயதுக்கு மீறிய வளர்ச்சியும்.

இந்த நிலையில் பண்ணையாரின் அறுபதாம் கல்யாணம் வந்தது. வீடே கோலாகலமாக இருந்தது. அனைவருக்கும் புதுத் துணி எடுத்தனர்... வீட்டில் வேலை பார்ப்பவர்கள் உள்பட. ஆனால், பாரதிக்கு மட்டும் எடுக்கவில்லை. அவ்வளவு விருந்தும், சாப்பாடும் நடந்தும் ஒரு வேளைதான் சாப்பிட்டாள். வகை வகையான உணவுகள் பலவிதமாக இருந்தாலும், அதில் ஒன்றுகூட எடுத்துக்கொள்வில்லை.

ஆனால், அடி மனதில் சாப்பிடணும் போல் ஆசை எழுந்தது. அவளும் சின்னப் பெண்தானே! ஆனால் ஆசையை அடக்கிக்கொண்டு– முகத்தில் புன்னகை மாறாமல் வளைய வந்தாள்.

ரவி, சென்னையில் இருந்து ரோகிணியையும் கூட்டி வந்தான். பாரதியைப் பார்த்ததும் அவளுக்குப் பொறாமை எகிறியது. ஆனால், பாரதி எந்த குறையும் இல்லாமல் கவனித்துக்கொண்டாள்.

ரோகிணி ஏதோ கேட்டு அவள் மாற்றிக் கொடுக்கவும், ரவி முன்னாடியே கன்னத்தில் அறைந்தாள். திடுக்குற்று கணவனைப்

பார்த்தாள். ரோகிணி அவன் தோளில் தொங்கிக்கொண்டு, "பாருங்க... இந்த வேலைக்காரி செய்வதை. நான் ஒன்று கேட்டால், இவள் ஏதோ ஒன்று தருகிறாள். இவளை என் கண் முன்னாடி நிக்கச் சொல்லாதீங்க. உடனே போகச் சொல்லுங்க" என்றாள்... அவனது மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டே!

பாரதிக்கு உடல் மொத்தமும் ஆடியது. 'தன் கண் முன்னாடியே இப்படி நடந்துகொள்கிறவர்கள், ஊரில் எப்படியெல்லாம் நடப்பார்கள்? இவன் ஏன் இப்படி என்னை சித்திரவதை செய்கிறான்?'– எதுவும் பேசாமல் அறையைவிட்டு வெளியே வந்தாள்.

தன் பொறுமையால் அந்த வீட்டில் உள்ளவர்களை தன்பால் ஈர்க்க முடியும் என்று நம்பினாள். ஆனால், அது அவ்வளவு எளிதில் முடியாது என்று தெரிந்துபோயிற்று.

அனைவரும் பட்டிலும், நகையிலும் ஜொலித்தார்கள். பாரதி மட்டும் சாதாரணப் புடவையில் இருந்தாள்.

பண்ணையார் தன் மனைவியிடம், "பாரதிக்கு புதுச் சேலை எடுக்கலையா?" என்றார்.

அவள் அலட்சியமாக... "மறந்துவிட்டேன்" என்றாள்.

உடனே சென்று பீரோவைத் திறந்து பட்டுச் சேலையும், சில நகைகளும் கொண்டு வந்து கொடுத்தார். அவள் வாங்க மறுத்தாள்.

"என் மருமகள் எப்படி இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். இதை நீ கட்டிக்கொள். இந்த நகைகளை அணிந்து கொள்" என்றார்.

அவர் பேச்சை தட்ட முடியாமல் வாங்கிக்கொண்டாள்.

தேன் கலந்த குங்கும நிறச் சேலையிலும், ஜொலிக்கும் நகையிலும் தேவதை போல் மாறினாள்.

சிவகாமியின் சொந்தக்காரர்கள், பாரதியை வைத்த கண் எடுக்காமல் பார்த்தனர். அவளின் சிரித்த முகம், கவனித்த பாங்கு அனைவரையும் அவள் பக்கம் இழுக்கச் செய்தது.

ஒரு அம்மாள் வந்து, "உன்னை சிவகாமி நன்றாக வைத்துக்கொள்கிறாளா? ரவி உன்னிடம் எப்படி நடந்துக்கிறான்?" என்று வாயைக் கிளறினாள்.

அதற்கு புன்னகை மாறாமல், "என் மாமியார் என்னை தன் பெண் போல் பார்த்துக்கிறார். கணவரும் அப்படித்தான்" என்றாள்.

"ரவி இங்கு வரும்போது ஒரு பெண்ணை கூட்டி வருகிறான். நீ இருக்கும்போது ஏன் அவள் வருகிறாள்? கல்யாணத்துக்கு முன் அப்படி இருந்தாலும், இப்போது ஒழுக்கமாக இருக்க வேண்டாமா? அந்தப் பெண் அவனிடம் கொஞ்சுவதும், அவளிடம் இவன் சிரித்து சிரித்துப் பேசுவதும் நல்லாவா இருக்கு? இதுக்கு நீ இடம் கொடுக்கக்கூடாது" என்றாள்.

"அவள் என் கணவனுடன் படித்த பெண். பட்டணத்து நாகரிகம். அடுத்த ஆண்களை தொட்டுப் பேசக் கூடாது என்ற நம் கிராமத்துப் பழக்கம் தெரியாது. மற்றபடி எதுவுமில்லை."

"அவளுக்குத்தான் தெரியாது! உன் புருஷனுக்குமா தெரியாது? அவளும், அவள் அலங்காரமும் பார்க்க சகிக்கலை. நீ உன் புருஷனை விட்டுக் கொடுப்பியா?" என்று அந்த அம்மாள் ஆணி அடித்துவிட்டு சென்றுவிட்டாள்.

இவர்கள் பேசியதை செடி மறைவில் நின்று ரவியும் கேட்டான். பெரியவள் சென்றதும் பாரதிக்கு மனது படபடவென்று அடித்துக் கொண்டது. நெஞ்சைப் பிடித்துக்கொண்டு, நீண்ட பெருமூச்சு விட்டாள். அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. சட்டென அதைத் துடைத்துக்கொண்டு, மற்றவர்களுடன் கலந்துவிட்டாள்.

அன்று இரவு விருந்து முடிந்தது. சிவகாமி, பாரதியைக் கூப்பிட்டு... "பட்டும் நகையுமா இருக்கோம் என்று வேலையை எல்லாம் அப்படியே போட்டுவிட்டுப் போய்விடாதே. எவ்வளவு நேரம் ஆனாலும் இருந்து முடிச்சிடு" என்றாள்.

மற்ற வேலைக்காரர்களிடம், "நீங்க வீட்டுக்குப் போங்க. உங்களுக்கு இன்றைக்கு வேலை அதிகம். எல்லாம் அவள் பார்த்துக்குவா" என்று அனுப்பினாள்.

அங்கு சிதறிக் கிடந்தவற்றை எல்லாம் பார்த்த பிறகு, இவளுக்கு தலை சுற்றியது. ஆனால் எதுவும் பேசவில்லை. 'பட்டுச்சேலைக்கும்–நகைக்கும் கிடைத்த பரிசு, இது' என்று நினைத்து பேசாமல் வேலையைப் பார்த்தாள்.

அனைத்தையும் முடித்துவிட்டு, பால் எடுத்துக்கொண்டு ரவியின் அறைக்குச் சென்றாள்.

படுக்கையில் கிடந்தான். அவனை உரசியபடி ரோகிணி

உட்கார்ந்திருந்தாள். இதைப் பார்த்ததும் பாரதிக்கு கை–கால் நடுங்கியது. ரவியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, தலையைக் குனிந்துகொண்டாள். அவளிடம் பாலை நீட்டியபோது, கையில் இருந்த தட்டு நடுங்கியது.

அலட்சியமாக சாய்ந்துக்கொண்டே எடுத்ததில், கை தவறி அவள் மீது பால் கொட்டியது. உடனே, "என் மீது பாலைக் கொட்டிவிட்டாள். அய்யோ... சுடுதே! பாருங்க ரவி, இவ இப்படிப் பண்ணிட்டா" என்று கத்தி கூப்பாடு போட்டாள்.

பாரதியின் முடியைப் பிடித்து ஆட்டி, அவளைப் பிடித்து தள்ளிவிட்டாள். ஏற்கெனவே பயந்து நடுங்கிக் கொண்டிருந்தவள்– தடுமாறி பக்கத்தில் இருந்த டீபாய் மீது விழுந்தாள். நெற்றியில் அடிபட்டு ரத்தம் வந்தது.

ரவி பதறி எழுந்தான். "ரோகிணி... என்ன இது?" என்று அதட்டினான். அதைத் தாங்க முடியாமல் அவள் 'ஓ' என்று அழுதாள். அதைத் தாங்க முடியாமல் அவளைத் தேற்றினான்.

பாரதி எழுந்து ரத்தத்தை தன் முந்தானையால் துடைத்து முடித்து, பால் கொட்டிய இடத்தை சுத்தம் செய்துவிட்டு மெதுவாக தள்ளாடியபடியே வெளியே சென்றாள்.

ரவி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். பாரதி கீழே வந்து தோட்டத்துக்குச் சென்றாள். வாய்விட்டுக் கதறி அழுதாள். தேற்றுவாரோ... ஆற்றுவாரோ இன்றி தவித்தாள்.

ரோகிணி தூங்கியதும், ரவி எழுந்து வந்து 'பால்கனி'யில் நின்றான். அவன் மனம் ஒரு நிலையில் இல்லை. கீழே தோட்டத்தைப் பார்த்தான். பனியில் மலர்கள் நனைந்து– தன் மகிழ்ச்சியை தெரிவிப்பது போல் தலையை ஆட்டின.

பாரதி மட்டும் பாத்திரங்களை எடுத்துப் போட்டு, கொட்டும் பனியில் உட்கார்ந்து சுத்தம் செய்தாள்.

'இவ மட்டும் ஏன் இந்த நேரத்துக்கு வேலை பார்க்கிறாள்? அம்மா சொல்லி இருப்பாங்களோ...?' என்று கருதியவன் அப்படியே நின்று வெகுநேரம் அவள் வேலை செய்வதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

## 7

அன்று இரவு வேலை முடித்து வெகுநேரம் கழித்து படுத்தும் அவளுக்கு தூக்கம் வரவில்லை. நினைவு எல்லாம் ரவி மீதே இருந்தது. 'என்னிடம் ஏன் அப்படி நடந்துகொள்கிறான்? எனது கண் முன்னாடியே படுக்கையில் அவளுடன்...? இந்த நிலைமை எதிரிக்குக்கூட வரக்கூடாது. கடவுளே... எனக்கு ஏன் இந்த நிலைமை? நான் என்ன பாவம் பண்ணினேன்?'– மனம் புலம்பித் தவித்தது.

தூக்கமே வரவில்லை. வேலையில் தன்னை மறக்கலாம் என்றாலும் முடியவில்லை. இப்போது எந்த வேலை செய்தாலும் அவன் நினைவே மனதை அடைத்துக்கொண்டிருந்தது.

ஒருவழியாக எப்படியோ தூங்கிவிட்டாள்.

காலையில் எப்பவும் போல் வேலை செய்தாள். சுமதியின் கணவன் செந்தில், தன் மகனை தூக்கிக்கொண்டு அறையில் இருந்து வெளியே வந்தான்.

"குட்மார்னிங் பாரதி" என்றான்.

"குட்மார்னிங் அண்ணா" என்றாள். அப்படியே செந்திலுக்கு காப்பியும், குழந்தைக்குப் பாலும் கொண்டு வந்தாள்.

"இரவு அவ்வளவு வேலைகளை முடித்து– ரொம்ப நேரம் கழித்து படுத்தும் இவ்வளவு சீக்கிரம் எழுந்துவிட்டாயே! அப்படியும் உன் முகம், மலர்ந்த தாமரையாக இருக்கிறதே? அதன் ரசசியம்தான் என்ன?" என்றான் புன்னகையுடன்.

மெலிதாக சிரித்துக்கொண்டாள். பதில் ஏதும் சொல்லவில்லை. காலையில் அனைவருக்கும் உணவு பரிமாறினாள். அப்போது செந்தில், "நீயும் உட்கார்ந்து சாப்பிட வேண்டியதுதானே! எல்லோரும் எடுத்துப் போட்டு சாப்பிடலாம்" என்று பாரதியை அழைத்தான்.

அதற்கு சுமதி, "வேலைக்காரியெல்லாம் நம்மகூட சரி சமமா உட்கார்ந்து சாப்பிடலாமா?" என்றாள்.

"சுமதி. அவங்க உன் அண்ணி..." என்று அதட்டினான். உடனே சுமதிக்கு கண்ணீர் கொட்டியது.

"அவள் உங்களையும் கைக்குள் போட்டுவிட்டாளா? எனக்குத்

தெரியும்... காலையில் எழுந்ததும் அவளுடன் பேசிச் சிரித்தது'
என்று அழுதாள்.

"ஏய் என்ன பேசுறே நீ! என்னையும் உன் அண்ணன் போல நினைத்தாயா? ஏழை வீட்டுப் பெண் என்றால் மான– மரியாதை இருக்காதா?

அவ எனக்கு தங்கை மாதிரி. நீயும் ஒரு பெண்தானே! உன் அண்ணனை கேட்கக் கூடாதா... 'ஏன் இப்படியொரு பெண்ணை கல்யாணம் செய்துகொண்டு, அடுத்த பெண்ணோடு சுத்துறே?' என்று!

உன் கண் முன்னாடி நான் இப்படி நடந்தால், நீ சும்மா விடுவியா? இல்லை உங்கள் வீட்டில்தான் விடுவாங்களா? அவள் பக்கத்துல கேட்க ஆள் இல்லை என்றுதானே இப்படிச் செய்றீங்க.

நடந்தது நடந்துவிட்டது. இனி என்ன செய்ய முடியும்? அவளை நல்லபடியாக வாழ வைக்க வேண்டியது உங்கள் கடமை அல்லவா? அதை விட்டுட்டு, சென்னையில் என்ன செய்கிறான்?

ஏன்... அவன் மட்டும்தான் 'பிசினஸ்' செய்கிறானா? மற்றவங்க என்ன கோலி விளையாடுகிறோமா? மனைவியையும் தன்னோடு கூட்டிக்கொண்டு போவதுதானே! இது உன் அம்மாவுக்குத் தெரியாதா?

நீ எப்படி என்னிடம் உரிமையாக எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறாயோ அது போலத்தானே அந்தப் பெண்ணும் எதிர்பார்ப்பாள். உனக்கு ஏன் அது தெரியலை?"– செந்தில் இப்படி கேட்டதும், வீட்டில் ஒரு ரகளையே நடந்துவிட்டது.

"மாப்பிள்ளை... என் மகளை நீங்கள் அவளோடு ஒப்பிட்டுப் பேசுவது சரியில்ல. அவளும் இவளும் ஒன்றா? நீங்கள் ஏன் புரியாமல் பேசுறீங்க! அவளுக்கு கொஞ்சம் இடம் கொடுத்தால், தலை மேல் ஏறி உட்கார்ந்துவிடுவாள். இனிமேல் இது பற்றிப் பேசி, நமக்குள் பிரச்சினை வேண்டாம்."

"நான் உண்மையைப் பேசுவது உங்களுக்கு பிரச்சினையாக இருக்கா? உங்களிடம் போய் எடுத்துச் சொன்னேனே... என்னைச் சொல்லணும்"– அதன்பிறகு மவுனம் கடைபிடித்தான்.

ரவி எப்போது ஊர் கிளம்பிப் போனானோ தெரியாது,. இரண்டு நாட்களாக காணவில்லை அவனை. எப்போது போகிறான், எப்போது வருகிறான் என்றே தெரிவதில்லை. மனம் ரணமாக வலித்தது பாரதிக்கு.



'ஏழையாக பிறக்கவே கூடாது. அப்படி பிறந்தாலும், பணக்கார வீட்டு மருமகளாக வரக்கூடாது. பிடிக்காத கணவனுக்கு மனைவியாக இருக்கவே கூடாது. இதைவிடக் கொடுமை இந்த உலகத்தில் இல்லை.'

இப்படி சிந்தனையிலே உழன்றவாறே வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள். போன் அடித்தது. தயக்கத்துடனே எடுத்தாள்.

"ஹலோ" என்றாள். மறுமுனையில்...

"ஹலோ... யாரு பேசுறது?" என்றதும் இவளுக்கு குரல் புரிந்தது.

"நான் இந்த வீட்டு வேலைக்காரி பேசுறேன்"என்றாள். மறுபக்கம் சிறிது அமைதி நிலவியது. பேசுவது பாரதிதான் என்று புரிந்துகொண்டான் கணவன்.

"அம்மா இல்லையா?" என்றான்.

"இல்லை... வெளியே போயிருக்காங்க"

"எங்கே?"

"எனக்குத் தெரியாது"

அவனிடம் முதல் முறையாக போனில் பேசுவது அவளுக்கு நடுக்கம் தந்தது. அது குரலில் தெரிந்தது. அதை அவனும் கண்டுபிடித்துவிட்டான்.

"சரி... நான் அம்மா வந்த பிறகு பேசறேன்" என்று போனை வைத்தான்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் கரகரவென்று வழிந்தது. 'ஒரு வார்த்தை... நீ எப்படி இருக்கே?'ன்னு கேட்கலையே! மனைவியாகக்கூட நினைக்க வேண்டாம். ஒரு மனுஷியாகக்கூட நினைக்கக்கூடாதா?

ஏழை என்றால் எனக்கு எந்த ஆசாபாசமும் இருக்கக்கூடாதா? இவன் இப்படி அடுத்தவளுடன் அலைவான். நான் எதுவும் பேசக்கூடாதா? எப்படியெல்லாம் கற்பனை செய்து வைத்திருந்தேன்? எனக்கு வரும் கணவன் என்னை மட்டுமே நேசிக்க வேண்டும். எனக்கே சொந்தமாக இருக்க வேண்டும். ஆனால், இங்கு நடப்பது வேறு. இதை தட்டிக் கேட்க முடியுமா?' என்று நினைத்தாள்.

# 8

பாரதிக்கு அவள் பிறந்த வீட்டு நினைவை மறக்க முடியவில்லை. பக்கத்தில் இருந்துகொண்டு- பெற்றவர்களையும், கூடப் பிறந்த தங்கையையும் பார்க்கக்கூடாது என்பது எவ்வளவு கஷ்டம்? அனுபவிப்பவர்களுக்குத்தான் அதன் வலி தெரியும்.

தங்கைகளோடு எவ்வளவு சந்தோஷமாக அந்தப் பூந்தோட்டத்தில் சுற்றி வருவாள்? ஒவ்வொரு பூவிலும் இருக்கும் பட்டாம்பூச்சியைப் பிடிப்பதற்கு பின்னாடியே ஓடுவாள். ஒன்றைப் பிடித்து வந்து, தங்கைகளுக்கு காட்டி அதன் அழகையும்- நிறத்தையும் ரசிப்பாள்.

எத்தனை நிறம், எத்தனை அழகு? தான் ஒரு பட்டாம்பூச்சியாக பிறந்திருக்கக்கூடாதா? என்றுகூட நினைத்தாள்- ஏங்கினாள். அன்பு கிடைக்காமல் உடம்பெல்லாம் வலிப்பது போல் இருந்தது. அவளுக்கு அழுவது என்றால் பிடிக்காது... அதுவும் அடுத்தவர் முன்னிலையில்.

ஒரு நாள் மாமியார் தன் மகனிடம், 'இவள் கைகாரிதான். எவ்வளவுதான் பிரச்சினை என்றாலும், கண்களில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் வருவதே இல்லை. அவ்வளவு அழுத்தம்- ஆணவம். இப்போதே இப்படி இருக்காளே... நல்ல முறையில் இருந்தால், நம்மளையே மதிக்கமாட்டாள்' என்றாள்.

மகன் அதற்கு, 'அவள் கண்களில் இருந்து கண்ணீர்தானே வர வேண்டும். பேசாமல் இருங்க. ரத்தமே வர வைக்கிறேன். நான் படுத்துகிற பாட்டில் அவளாகவே இந்த வீட்டைவிட்டுப் ஓடிப் போக வேண்டும்' என்றான்.

அந்த வார்த்தை இப்போது அவளின் நெஞ்சைச் சுட்டது.

அன்று ஊர் கோவில் திருவிழா. பாரதிக்கு வேலை அதிகமாக இருந்தது. அத்தனை சொந்தங்களும் வீட்டுக்கு வந்திருந்தன. வந்தவர்கள் பேசாமல் இருந்தாலாவது பரவாயில்லை. ஆள் ஆளுக்கு பாரதியைப் பற்றி குறை கூறினர்.

"உன் தகுதிக்கு எப்பேர்ப்பட்ட மருமகள் வர வேண்டும். இப்படி நடந்துவிட்டதே?" என்று வருத்தப்படுவது போல் மனதுக்குள்



சந்தோஷப்பட்டனர். இந்த போலியான அன்பு, சிவகாமிக்கு அத்தனை ஆறுதலாக இருந்தது.

எல்லோருக்கும் புதுத் துணிமணி வாங்கி வந்திருந்தான் ரவி. பண்ணையில் வேலை பார்ப்பவர்களுக்கும் வேட்டி, சேலை கொடுத்தார்கள். ஆனால், பாரதிக்கு மட்டும் எதுவும் கிடையாது.

குறைந்த விலையில் ஒரு சேலையை எடுத்து வந்து, யாருக்கும் தெரியாமல் கொடுத்தார் அவளின் அப்பா. ஆனால், அதையும் வாங்க மறுத்துவிட்டாள். திருவிழாவுக்கு வந்த உறவினர் மத்தியிலும் அவமானப்படுத்தப்பட்டாள். எனவே, அன்றைய இரவுகூட அவளுக்கு தூங்கா இரவாகவே இருந்தது.

மறுநாள் காலையில் தலைக்கு குளித்துவிட்டு, பூஜைக்கு பூப் பறிக்க கூடையுடன் தோட்டத்துக்குச் சென்றாள். அவளுக்கு ஆறுதலும் நிம்மதியும் தரும் ஒரே இடம் இந்த தோட்டம்தான். பிறந்ததில் இருந்து பூந்தோட்டத்திலேயே வளர்ந்தவள்.

ஒவ்வொரு பூக்களின் பக்கமாக போய் நின்று சிறிது நேரம் பேசினாள்.

ரவி எழுந்து ஜன்னல் வழியே வெளியே பார்த்தான். இருள் பிரியாத காலை வேளை. பூந்தோட்டம் பார்க்க அழகாக இருந்தது.

பாரதி இங்கும் அங்கும் பட்டாம்பூச்சி பிடிக்க ஓடிக்கொண்டிருந்தாள். 'இவ என்ன இந்த நேரத்தில் இப்படி ஓடிக்கிட்டிருக்கா?' என்று வியப்புடன் பார்த்தான்.

அவள் விழுந்து புரண்டு ஒரு பட்டாம்பூச்சியைப் பிடித்துவிட்டாள். அந்த மகிழ்ச்சியில் கன்னக்குழி தெரிய புன்னகைத்தாள்.

"என்னைவிட்டு நீ ஓடிவிட முடியுமா? உன்னை என்ன செய்துவிடப்போகிறேன்? ஏன்... இப்படி பயந்து ஓடுறே? இந்த பொல்லாத மனிதர்களிடையே நாம் அகப்படக்கூடாது என்று நினைத்தாயா? நான் ஒன்றும் உன்னை கொன்றுவிட மாட்டேன். உன் அழகை ரசித்துவிட்டு விட்டுவிடுவேன். சுதந்திரமாக பறந்து செல்லலாம். என்னால்தான் அது முடியாது. எனது சிறகை வெட்டி- பிய்த்து தனித் தனியாக எறிந்துவிட்டார்கள்.

பொல்லாத மனிதர்கள். நானும்தான் அவர்கள் கையில் சிக்கும் வரை உன் மாதிரி இருந்தேன். இந்த உலகமே வண்ணமயமானது. எங்கும் சந்தோஷம்- நிம்மதி என்று நினைத்திருந்தேன். அது இல்லை என்று இப்போதுதான் தெரிகிறது.

பணம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் கிடைக்க கூடும், பல சந்தோஷங்கள். என்னைப் போல் ஏழைகளுக்கு கிடையாது. நீயும் கல்யாணம் செய்துகொள்ளாதே! உன் சிறகையும் வெட்டிவிடுவார்கள். நீ இந்த வானில் சுதந்திரமாக சிறகடித்துப் பறந்து செல்" என்று கூறி அதை பறக்கவிட்டாள்.

ரவி அதை கவனித்துக்கொண்டிருந்தான். 'சிறிய பட்டாம்பூச்சி மீது அவளுக்கு இத்தனை அன்பா?' என்று வியந்தான்.

அந்த வேளையில் மலர்களோடு அவளைப் பார்க்க பரவசமாக தெரிந்தது. அப்படியே அணைக்க வேண்டும் போல் இருந்தது. சட்டென மாடியில் இருந்து கீழே இறங்கி தோட்டத்துக்குச் சென்றான். அவள் அறியாமல் மெதுவாக பின்புறம் சென்று, சட்டென கட்டி அணைத்தான்.

ஆனால், பாரதி பயந்து அலறிவிட்டாள். மறுமுறை கத்த வாயைத் திறக்க முடியவில்லை. அவன் உதடு, அவளது செம்பவழ இதழ்களை அழுந்த மூடி இருந்தன. திமிறினாள். அவனோ விடவில்லை. அவளுக்கு மூச்சு வாங்கியது. அவனைப் பிடித்து கைகளால் தள்ளினாள். அந்த வலுவான உடலை சிறிதுகூட அசைக்க முடியவில்லை.

பல நிமிடம் சென்று விடுவித்தான். அவளுக்கு வந்ததே கோபம். எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"உங்களுக்கு வெட்கமா இல்லை... இப்படி பின்னாடி வந்து கட்டிப் பிடிக்க? என்ன தகுதி இருக்கு உங்களுக்கு, என்னைத் தொட?"

அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான்.

'தொட்டால் போதும்... அப்படியே குழைந்துவிடுவாள். அதற்காகத்தான் ஏங்கிக்கொண்டு இந்த வீட்டில், இவ்வளவு கஷ்டத்தையும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறாள். நாம் எப்படி நடந்தாலும் கண்டுகொள்ள மாட்டாள். தனக்கு வாழ்வு கொடுத்தால் போதும் என்று நினைப்பாள். எதிர்த்துப் பேசத் தெரியாது' என்று கணக்குப் போட்டான். அது தவறு என்று இப்போதுதான் புரிந்தது.

"என்ன தகுதி இல்லை? இப்படிச் சீறுறே! மரியாதையா பேசு. இல்லையென்றால் தொலைத்துவிடுவேன்" என்று மிரட்டினான்.

"இந்த மிரட்டல் என்கிட்டே வேண்டாம். அதையெல்லாம் இங்கு வந்திருக்காளே... அவகிட்டே வச்சுக்குங்க."



"அது தெரியும்டி. நீ எனக்குச் சொல்லித் தர வேண்டாம். நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல். என்ன தகுதி இல்லை என்னிடம்? அழகு இல்லையா... அந்தஸ்து இல்லையா... வசதிதான் இல்லையா? இல்ல, நான் ஆண்பிள்ளை இல்லையா...? சொல்லு... என்ன தகுதி இல்ல?" என்று அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

## 9

"தகுதின்னு எதைச் சொல்றீங்க? பணம், அந்தஸ்து, ஆள்பலம், இதெல்லாம் இருந்தால்தான் ஒரு மனிதன் ஆண் மகனா? தனி மனித ஒழுக்கம்தான் தனித் தகுதி. இது தெரியுமா...? விதவிதமான பெண்களுடன் சுற்றுவதும், தண்ணி அடிப்பதும், புகைப்பதும் தகுதி இல்லை.

நானா உங்களை விரும்பி, 'என்னை கல்யாணம் செய்துகொள்ளுங்கள்' என்றேன். எதற்கு இந்த தண்டனை எனக்கு? உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் பகிரங்கமாக சொல்வதுதானே! நீங்கள் என்னிடம் வந்து, 'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை' என்று சொல்லி இருந்தால், உங்களை கல்யாணமே செய்திருக்க மாட்டேன். அன்று என்ன நடந்தது என்றே எனக்கு தெரியாது. எந்த தப்பும் செய்யாத எனக்கு இந்த தண்டனை என்றால், உங்களுக்கு யார் தண்டனை கொடுப்பது? அடுத்தவளைத் தொட்ட கையால் என்னைத் தொடாதீங்க. எனக்கு அருவருப்பா இருக்கு.

இது மாதிரி நான் தப்பு பண்ணினா, என்னை ஏத்துக்குவீங்களா? நான் மட்டும் எதில் குறைந்துவிட்டேன், தப்பு பண்ணின உங்களை ஏத்துக்க?" என்று கண்கள் சிவக்க பேசினாள்.

"என்னடி ரொம்ப அதிகமா பேசுறே! உன்னை காலில் விழுந்து கெஞ்ச வைக்கிறேன் பாரு. அப்பத் தெரியும் என் தகுதி என்னவென்று..." என்று பிடித்துத் தள்ளினான்.

'தொபீர்' என்று பூக்கூடையுடன் கீழே விழுந்தாள். அவன் பார்த்து ஓர் ஏளனச் சிரிப்பு சிரித்துவிட்டு சென்றுவிட்டான்.

அவள் வெகு நேரம் அப்படியே உட்கார்ந்து இருந்தாள். 'நான் பேசியது தவறோ? அவனுக்குப் பிடித்த மாதிரி நடந்திருக்கணுமோ? அவன் போக்கிலேயே போய் திருத்தி இருக்க வேண்டுமோ? அவன் செய்ததை ஏற்றிருந்தால், சந்தோஷமாக நம்மை

வைத்திருப்பானோ...?'-இப்படி நினைக்கும்போதே, அவளுக்கு குமட்டியது. நினைக்கவே அவமானமாக இருந்தது.

ரவி உள்ளுக்குள் எரிமலையாக குமுறினான். 'பார்க்க சின்னப் பெண் போல இருக்கா. என்ன பேச்சு பேசுறா? 'அடுத்தவளைத் தொட்ட கையால் என்னைத் தொடாதே' என்கிறாள். இவளுக்கு எவ்வளவு திமிர் இருக்கணும்? இருக்கட்டும்... கவனிச்சுக்கிறேன்.'

அன்று நல்ல வெயில். காய்ந்துகொண்டிருந்த துணிகளை எடுப்பதற்காக சென்றாள். அப்போது மொட்டை மாடியிலேயே வைத்து பூட்டிவிட்டான்.

"கதவை ஏன் பூட்டுறீங்க...? உடனே திறங்க. எனக்கு வேலை இருக்கு" என்று கத்தினாள்.

**நேற்று அம்மா...**

"கண்ணா... 'ஸ்கூல்' போறதுக்கு 'பேக்' எடுத்துக்கிட்டியா...?"
"எடுத்துக்கிட்டேன்ம்மா."
" 'பேக்'ல சிலேட் இருக்கா பாரு..."
"இருக்கும்மா."
"டப்பால பென்சில் இருக்கா?"
"இருக்கு."
"டிபன் பாக்ஸ் வச்சிருந்தேன். எடுத்துக்கிட்டியா?"
"எடுத்துகிட்டேன்ம்மா."
"என் சமத்துல்ல... கவனமா போயிட்டு வாப்பா..."



காலை கீழே வைக்க முடியாத அளவுக்கு தரை சுட்டது. நிற்பதற்கு சிறு நிழல்கூட இல்லை.

கால் மாற்றி மாற்றி நின்றாள். சூடு தாங்க முடியவில்லை. மறுபடியும் கதவைத் தட்டினாள். "என்னங்க... கதவைத் திறங்க. சூடு தாங்க முடியலை" என்று கதறினாள். ஆனால், அவன் கண்டுகொள்ளவில்லை. மாலையில்தான் கதவைத் திறந்துவிட்டான்.





**இன்று மனைவி...**

"ஏங்க... கையில கடிகாரம் கட்டிக்கிட்டீங்களா?"
"கட்டிகிட்டேன்."
"செல்போனை எடுத்தீங்களா?"
"எடுத்துட்டேன்."
"ஆபீஸ் கார்டு?"
"ம்... எடுத்துக்கிட்டேன்."
"சமத்தா போயிட்டு வாங்க...."

**நாளை மகன்...**

"அப்பா, துணியெல்லாம் 'பேக்' பண்ணிட்டீங்களா?"
"ம்..."
"கையில பணம் வச்சிருக்கீங்களா?"
"வச்சிருக்கேன்."
"எங்க 'போன் நம்பர்' எல்லாம் குறிச்சிக்கிட்டீங்களா?"
"குறிச்சிட்டேன்."
"அம்மாவை கைத்தாங்கலா பிடிச்சிக்கிட்டு கவனமா கிளம்புங்கப்பா. அங்கேயாவது பிக்கல் பிடுங்கல் இல்லாம இருங்க. முதியோர் இல்லத்தோட ஆட்டோ வந்திருக்கு பாருங்கப்பா..."



– எஸ்.ஏ.பி.கற்பகம், சென்னிமலை.

(அடுத்த பக்கம்)

வெயிலில் வாடிய பூசணிப்பூவாய் வதங்கிப்போய் இருந்தாள். கால் புண்ணாகிவிட்டது. நடக்க முடியவில்லை. தாங்கித் தாங்கி மெதுவாக கீழே இறங்கி வந்தாள். அதைப் பார்த்தவனுக்கு மனதை என்னவோ செய்தது.

வேலைகள் அப்படியே கிடந்ததால், சிவகாமி கோபமாகத் திட்டினாள். மறுபக்கம் கால் வலி தாங்க முடியவில்லை. வேதனையில் இரவு நல்ல காய்ச்சல் வேறு. தூக்கம் பறிபோனது.

ரவி, அவள் அறைக்குச் சென்று பார்த்தான். எதுவும் விரிக்காமல், தலைக்கும் ஒன்றும் இல்லாமல் தரையில் குறுகிப் படுத்திருந்தாள். அவளிடம் எதுவும் பேசாமல், சூட்கேசை எடுத்துக்கொண்டு ஊருக்குக் கிளம்பினான்.

சகலத்தையும் பார்த்தும் பார்க்காதது போல் இருந்தார் பண்ணையார். 'இதை இப்படியே விடக்கூடாது. இதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும்' என்று நினைத்தார்.

சிவகாமிக்கும் அடிக்கடி உடம்பு முடியாமல் போனது. அதைச் சாக்காக வைத்து, "நாம் ரவியுடன் சென்னைக்கு போய்விடுவோம். என்னாலும் வேலை பார்க்க முடியலை. இங்கு ஆஸ்பத்திரி வசதியும் போதாது. அங்கு பெரிய ஆஸ்பத்திரி இருக்குது. உடம்புக்கு முடியலை என்றால் காண்பித்துக் கொள்ளலாம்.

நீயும் எதற்கு இந்த வயதான காலத்தில் இப்படி ஓடியாடி வேலை செய்ய வேண்டும்? இவ்வளவு நாள் பார்த்தது போதும். இனிமேல் மகனுடன் இருப்போம். அவனும் இங்கு அடிக்கடி வர முடியலை. இங்கு பண்ணையை நான் அப்பப்ப வந்து பார்த்துக்கிறேன்" என்றார்.

சிவகாமியும் யோசித்தாள். பிறகு, "சரிங்க... நாம சென்னைக்கே போய்விடுவோம்" என்றாள்.

பண்ணையார் தன் மகனுடன் பேசி, உடனே கிளம்ப ஏற்பாடு செய்தார். அதன்படி மூவரும் சென்னை வந்தனர். பெரிய வீடுதான். சுற்றிலும் தோட்டம். இருந்தாலும் பாரதிக்கு கிராமத்தில் இருந்த வசதி இங்கு இருப்பதாகத் தெரியவில்லை.

கீழே பெரியவர்கள் தங்கிக்கொண்டார்கள். மாடி அறைக்கு பாரதியைப் போகச் சொல்லிவிட்டார் பண்ணையார். அவள் தயங்கித் தயங்கியே மேலே சென்றாள்.

பார்த்ததும் உதட்டைச் சுளித்தான். "எங்கு போனாலும் என்னிடம் வந்துதான் ஆக வேண்டும். இப்ப நீ என்ன செய்ய முடியும்? நான் உன்னை எது வேண்டுமானாலும் செய்யலாம்."

"கத்தி கீழே இருக்கிற மாமாவைக் கூப்பிடுவேன்" என்றாள் துடுக்காக.

"மேலே கூப்பிட்டு என்ன சொல்வாய்? 'என்னை இவர் கட்டிப் பிடித்தார். முத்தம் கொடுத்தார்' என்று சொல்வாயா?" என்றான் ஏளனமாக.



பாரதி முகம் கன்றிச் சிவந்தது. எதுவும் பேசாமல் விழித்தாள்.

அவன் சிரித்துக் கொண்டே... "பக்கத்து அறையை நீ பயன்படுத்திக்கொள்" என்றபடி சென்றுவிட்டான்.

அவள் தன் துணிமணிகளை எல்லாம் அங்கே எடுத்து வைத்தாள். அறை நல்ல வசதியாக இருந்தது. ஓரத்தில் சிறு கட்டில். அதை ஒழுங்குபடுத்திவிட்டு, குளித்து முடித்து கீழே வந்தாள்.

இங்கும் வேலைக்காரர்கள் இருந்தார்கள். அடுப்படிக்குச் சென்று சாப்பாடு தயார் செய்தாள். மதியம் ரவி வரவில்லை. சிவகாமி, பாரதியைத் திட்டினாள்.

"உனக்கு கொஞ்சமாவது அக்கறை இருந்தா என் மகனை சாப்பிட அழைத்து வந்திருப்பாய்! இல்லைன்னா கொடுத்து அனுப்பி இருப்பாய். ஆனா, இப்ப அவன் எதுவும் சாப்பிடாமல் போய்விட்டான். அவனைக் கவனிக்க உனக்கு ஏது நேரம்...?" என்றாள்.

ரவி போனதே பாரதிக்குத் தெரியாது. 'அவனுக்கு அக்கறை இருந்தால்... 'போய்ட்டு வர்றேன். சாப்பிட வரமாட்டேன்' என்று சொல்லி இருப்பான்' என்று நினைத்தாள். கண்கள் கலங்கின.

தன் அப்பா, அம்மாவிடம்கூட சொல்லவில்லை... சென்னைக்கு வருவது பற்றி! ஊரில் இருந்தாலாவது அந்தப் பக்கம், இந்தப் பக்கம் போகும்போது பெற்றோரைப் பார்க்கலாம். இப்போது அதற்கும் வழியில்லை.

ரவி வீடு திரும்ப இரவு அதிக நேரம் ஆனது. பாரதி அதுவரை காத்திருந்தாள். வந்தவன், அவள் இருப்பதையே பார்க்காமல் தன் அறைக்குள் சென்றுவிட்டான்.

'குளித்துவிட்டு வருவான்' என்று காத்திருந்தாள். அவன் வரவே இல்லை. அவனது அறைப் பக்கம் சென்றாள். கதவைத் தட்டினாள். "வரலாம்" என்றான்.

மெதுவாக உள்ளே சென்றாள். "என்ன முதலிரவு அன்றைக்கு வரும் புதுப் பெண் போல் இவ்வளவு மெதுவாக காலை எடுத்து வைத்து வர்றே! என்ன விஷயம். இன்று கொண்டாடி கூத்தடிக்கலாமா?" என்றான், கண்களைச் சிமிட்டியவாறு!

இவள் சற்று நேரம் அசைவற்று நின்றாள். அவனும் அதை ரசித்துக் கொண்டிருந்தான்.

## மறதி



**ஆ**ங்கில மொழியில் அழியாப் புகழ் பெற்ற நவீனங்களை எழுதிக் குவித்த சர் வால்டர் ஸ்காட், சிறந்த கவிஞரும் ஆவார். ஒரு நாள் அவர் ஒரு கவிதையை நண்பர் ஒருவரிடம் படித்துக் காட்டி, அதை உணர்ச்சி மேலிட வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார். பொருள் பொதிந்த அந்தக் கவிதையின் நடையழகை மெய் மறந்து எடுத்து விளக்கி, "கவிஞர் பைரன் பிரபுவின் திறமையோ திறமை" என்று மட்டற்ற மகிழ்வுடன் கூறினார்.

நண்பர் விடைபெற்று சென்ற பிறகுதான் அவருக்கு உண்மை தெரியவந்தது; அந்த இனிய கவிதை பைரனுடையது அல்ல... தான் இயற்றியது என்று!

–கலவை பா.வரதன்

### 10

"**சா**ப்பிட வாங்க" என்றாள்.

"சாப்பிடுறதுக்கு கூப்பிடத்தான் வந்தியா?"

"ஆமா."

"இதற்கு வந்திருக்கவே வேண்டாம். இத்தனை நாள் நீ சொல்லித்தான் சாப்பிட்டேனா... இல்லையே! நான் சாப்பிட்டுட்டேன், என் 'கேர்ள் பிரண்டு'டன்! நீ போகலாம்" என்றான்.

மெதுவாக நிமிர்ந்து முகத்தைப் பார்த்தாள். அவனும் ஊடுருவிப் பார்த்தான். அதில் களைப்புத் தெரிந்தது. கூடவே, மெலிதான அதிர்வும்.

"குடிக்க பால் வேணுமா?" என்றாள்.

"சரி... கொண்டு வா."

அவள் கீழே சென்று ஒரு தம்ளர் பாலை எடுத்து வந்தாள். அதை வாங்கிக்கொண்டான். அதன்பின் சிறிது நேரம்கூட நிற்காமல் உடனே அங்கிருந்து வெளியே சென்றுவிட்டாள். அவள் செல்வதையே வெறித்துப் பார்த்தான்.

தன் அறைக்கு வந்து படுத்தவளுக்கு கண்ணீர் பெருகியது. புது இடம்... தூக்கம் வரவில்லை. 'கணவன் நேரில் வந்து கூப்பிட மாட்டானா?' என்று மனம் ஏங்கியது. உடனே, 'ச்சி... எவ்வளவு கீழ்த்தரமாக யோசிக்கிறோம்' என எண்ணியவாறே தூங்கிப்போனாள்.

காலையில் அவளைப் பார்த்ததும் மேலும் கீழும் ஆராய்ந்தான். சுடிதாரில் இன்னும் ரொம்ப சின்னப் பெண்ணாகத் தெரிந்தாள். 'சுடிதார் இவளுக்கு ரொம்பவே அழகு' என்று நினைத்தவன்– ஒரு நிமிடம் அவளை தன் காதலியோடு ஒப்பிட்டுப் பார்த்தான்.

சிவகாமி, பண்ணையார், ரவி... மூவரும் சாப்பிட அமர்ந்தனர். எடுத்து ஒரு வாய் வைத்ததும், "த்தூ" என்று துப்பிவிட்டு– "என்ன சாப்பாடு இது?" என்றபடி கை கழுவிவிட்டுச் சென்றுவிட்டான்.

சிவகாமி, பாரதியைத் திட்டினாள். "உனக்கு அக்கறை வேண்டும். என்ன சாப்பிடுவான்– எது பிடிக்கும் என்று கேட்டுச் செய்யணும். உன் இஷ்டத்துக்கு செய்தால் இப்படித்தான். உன்னால் என் பிள்ளை சாப்பிடாமல் போய்விட்டான். நீயே நல்லா கொட்டிக்கோ" என்றாள்.

பண்ணையார் சாப்பிட்டுவிட்டு, "நல்லாத்தானே இருக்குது. ஏன் பாரதியைத் திட்டுரே சிவகாமி? பாவம் அந்தப் பெண். உன் மகனை கண்டிக்காமல் இவளைத் திட்டுவது சரியில்லை" என்றார்.

சாப்பாடு நன்றாகவே இருந்தது, சிவகாமிக்கும் புரிந்தது. இருந்தாலும் மருமகளை திட்டித் தீர்த்தாள்.

அவன் தன் நண்பர்கள் மாதங்கள் உருண்டோடின. ஒரு நாள் அவர்கள் மற்றும் நண்பிகள் சிலரை வீட்டுக்கு அழைத்து வந்திருந்தான். அவளுக்குத்தான் எல்லோரும் பாரதியிடம் நன்றாகப் பழகினர். மிகவும் என்னவோ போல் இருந்தது. அதிலும் சாந்தி என்ற பெண் நெருங்கிவிட்டாள்.

அமைதிக்கும் ஒத்து அவள், "ரவியோட அவசரத்துக்கும், உன்னோட சிமிட்டினாள். வராதே! எப்படி சமாளிக்கிறே?" என்று கண் அவளின் பாரதி அதைக் கேட்டு பேந்தப் பேந்த விழித்தாள். "என் அவசரத்தையெல்லாம் கையைப் பிடித்து லேசாக அழுத்தியவாறு,

பாரதியிடம் காட்டமாட்டேன். அதை இவள் தாங்க மாட்டாள்" என்றான் ரவி.

"அதானே பார்த்தேன், எப்போதும் பாரதியின் முகத்தில் புன்னகை தவழ்கிறதே என்று" என்றாள் சாந்தி.

பாரதி, ரவியின் கையில் இருந்து தன் கையை மெல்ல உருவினாள். ஆனால், அவன் உடனே விடாதது அவளுக்கு தர்ம சங்கடமாக இருந்தது. அவளால் சகஜமாக இருக்க முடியவில்லை.

"ரவி... இந்த வருஷம் நாம எல்லாரும் எங்காவது ஒரு வாரம் வெளியூர் போகலாம். புதுமணத் தம்பதி நீங்க. அதனால இடத்தை நீங்கதான் முடிவு பண்ணணும்."

அத்தனை பேரும் ஒரே நேரத்தில் கூச்சலிட்டனர்.

உடனே ரவி, "இந்தத் தடவை நீங்க மட்டும் போயிட்டு வாங்க. எனக்கு வேலை அதிகமா இருக்கு. நான் அடுத்தத் தடவை வர்றேன்" என்றான்.

"அதெல்லாம் முடியாது. நீங்க வந்துதான் ஆகணும். எல்லாரும் குடும்பத்தோடு போய் வருவோம். ஏன்... எங்களுடன் வர, உங்களுக்குப் பிடிக்கலையா? தனியாகப் போக வேண்டுமா? இல்லை, இதுக்கு உன் மனைவியிடம் 'பெர்மிஷன்' கேட்க வேண்டுமா? வேண்டுமானால் ரெண்டு பேரும் உள்ளே போய் பேசி முடிவெடுத்துவிட்டு வாங்க. இல்லைன்னா நாங்க கண்களை மூடிக்கிறோம். காதுகளைப் பொத்திக்கிறோம். இங்கேயே பேசி முடிவெடுங்க" என்று ஒருத்தி கூறவும், எல்லோரும் சிரித்தனர்.

ரவியும் சிரித்துக்கொண்டே, "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை... பாரதி, எங்கே போகலாம்... நீயே சொல்லு" என்றான்.

அவள் தயங்கி, "நான்... நான்... என்ன சொல்ல! எனக்கு..." என்று திக்கித் திணறினாள்.

"பேசவே மாட்டாங்க போலிருக்கு" என்றான் ஒருவன்.

"ரவிதான் அவளுக்கும் சேர்த்து பேசுகிறானே... அது போதாதா? பாரதி, இவன் உன்னை தூங்க விடுறானா? இல்ல... பேசிக்கிட்டே இருக்கானா?"- என்றாள் ஒருத்தி

"இல்லையே..." என்று அவள் ஆரம்பிக்கவும், அவளது தொடையில் கை வைத்து அழுத்தினான். வாயைத் திறந்தவள், 'கப்'பென்று மூடிக்கொண்டாள்.

"நீங்க சொல்லுங்க பாரதி. ரவி தட்டாமல் கேட்பான். சிரித்தே



மழுப்பிவிடுவான். இனி அவனிடம் காரியம் ஆக வேண்டும் என்றால், உங்க சிபாரிசு இருந்தா போதும். நீங்க இங்கு வந்த பிறகு, ரவியைப் பார்ப்பதே அதிசயமாகிவிட்டது. ஆபீசில் இருந்து நேரே வீட்டுக்கு வந்துடுறான் போல" என்றாள் அவனின் தோழி.

பாரதி மெதுவாக கணவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, கண்களை தாழ்த்திக்கொண்டாள். அதை ரவியும் கவனித்தான்.

"சரி... 'டூர்' போவோம். நீங்களே சொல்லுங்க... எங்கு போகலாம்ன்னு?"

"போன தடவை கொடைக்கானலுக்கு ஆண்கள் மட்டும் போயிட்டு வந்தீங்க. பெண்கள் யாரும் வரலை. அதனால இந்த முறை எல்லோரும் சேர்ந்து கொடைக்கானலுக்கு போகலாம்" என்றனர்.

"ம்... உங்க இஷ்டம் போலவே கொடைக்கானல் போலாம். ஆனா, ஒரு வாரம் கிடையாது. மூன்று நாட்கள்தான்" என்றான் ரவி. பிறகு, மனைவியைப் பார்த்து கண் சிமிட்டினான்.

பாரதிக்கு உள்ளே கொதித்தது.

'எப்போது போகிறான்... எப்போது வருகிறான் என்றே புரியலை. என்ன ஆபீஸ், என்ன வேலை என்று கூடத் தெரியாது. இப்போது பொண்டாட்டி சொல்வதைத் தவிர வேறெதுவும் செய்வதில்லை என்பது போல் என்னமாய் நடிக்கிறான்?'

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'இப்படியும் மனிதர்கள் நேரத்துக்கு தகுந்தாற்போல் பேசுவார்களா?' என நினைத்தாள்.

"என்ன பாரதி... அதற்குள் கனவா? உங்க இனிமையான மாலை நேரத்தை நாங்க வந்து கெடுத்துட்டோம். எங்களை சபிச்சிடாதீங்க. நாங்க வர்றோம்" என்று கிளம்பினர்.

போகும்போது, "இந்த ஞாயிற்றுக்கிழமை எங்க வீட்டுக்கு கண்டிப்பா வரணும்" என்றாள் சாந்தி.

"காலையிலேயே வர முடியாது. சாயங்காலம் வர்றோம்" என்றான் ரவி.

"சரி... கட்டாயம் வரணும். ரவி மறந்தாலும் நீங்களே ஞாபகப்படுத்திடுங்க. நீங்க வந்த பிறகு இவனுக்கு எங்க ஞாபகமே இல்லை...." என்றாள்.

பாரதி, "சரி" என்று தலையாட்டினாள்.

அவர்கள் எல்லோரும் கிளம்பிச் சென்றனர். பாரதி 'வெடுக்'கென

தன் கணவனின் பிடியில் இருந்து கையை உருவிக்கொண்டாள்.

அவன் புருவம் மேலேற... கடைக் கண் பார்வை பார்த்தான். பின் எதுவும் பேசாமல் போய்விட்டான். அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

இங்கு உடுத்திக்கொள்ள நல்ல உடை இல்லை. கையில் பத்து ரூபா கிடையாது. தலை வலித்தால்கூட ஒன்றும் செய்ய முடியலை. ஒரு வீட்டுக்கு வேலைக்குப் போயிருந்தாலும், நல்ல சம்பளம் கொடுத்திருப்பாங்க. இங்கு சாப்பாடும் இல்ல. சம்பளமும் இல்லையே?'– பெருமூச்சு விட்டாள்.

"எதை நினைச்சு இந்த ஏக்கப் பெருமூச்சு?" என்றான் கேலியாக!

"எனக்கு இப்ப போட்டுக்க நல்ல 'டிரெஸ்'சும் இல்லை" என்று கூறவும் அவள் குரல் கம்மியது.

'அவன் முன் அழக்கூடாது' என்று விருட்டென உள்ளே போய்விட்டாள். சிறிது நேரம் கழித்து, "கிளம்பு பாரதி... கடைக்கு போய் வரலாம்" என்றான்.

"எதுக்கு கடைக்கு?" என்றாள்.

"உனக்கு துணி எடுத்துட்டு வருவோம்."

"நான் வரலை. இத்தனை நாள் இல்லாத அக்கறை, இப்போது எதுக்கு? உங்க 'பிரண்ட்ஸ்' முன்னாடி நல்ல 'டிரெஸ்' போட்டுக்கொண்டு நடிக்கணும், அப்படித்தானே!" என்றாள், வெடுக்கென்று.

அவன் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றான்.

## 11

மறு நாள் மாலை. அலுவலகத்தில் இருந்து திரும்பி வரும்போது, ரவியின் இரண்டு கைகளிலும் பைகள். நேராக பாரதியின் அறைக்குள் நுழைந்தான். அவள் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள்.

மெதுவாக... "பாரதி" என்றான்.

அவள் சடக்கென திரும்பினாள். கண்கள் சிவந்திருந்தன. இமைகள் வீங்கி தெரிந்தன.

அதைப் பார்த்த ரவி, "ஏன்... அழுதாயா?" என்றான்.



அவளது கையைப் பிடித்துக் கொண்டான். "உனக்கு சுடிதார், சேலை எல்லாம் எடுத்து வந்திருக்கேன். அளவு சரியா இருக்கான்னு பாரு. 'கலர்' பிடிச்சிருக்கா... இல்லை மாற்றலாமா?" – என்றபடி ஒவ்வொன்றாக எடுத்துக் காண்பித்தான். அவள் எல்லாவற்றையும் பார்த்தாள். அத்தனையும் விலை உயர்ந்தவை.

"பிடித்திருக்கா பாரதி?"

"ஒரு வேலைக்காரிக்கு எதற்கு இத்தனை? அதவும் சுடிதார் எல்லாம்! மத்தவங்களுக்கு எடுத்துக் கொடுப்பது போல சாதாரண விலையிலேயே ஒரு சேலை எடுப்பதுதானே?" என்றாள் கம்மிய குரலில்.

"பாரதி, போதும் உன் குத்தலான பேச்சு."

"உங்க 'பிரண்ட்ஸ்' களால எனக்கு புதுத் துணி கிடைச்சிருக்கு... அப்படித்தானே?"

"இல்லை! உனக்கு எடுத்துத் தரணும்னு ஒரு வாரமாகவே நினைத்தேன். அதிக வேலை இருந்ததால், என்னால முடியலை. நான் மனசாரத்தான் எடுத்து வந்தேன்... என்னை நம்பு பாரதி."

"உங்க மனசில் இடம் இல்லாத எனக்கு, எப்படி துணி எடுக்க நினைவு வரும்? எனக்கு இதையெல்லாம் உடுத்தும்போது, உங்க 'பிரண்ட்ஸ்'தான் நினைவுக்கு வருவாங்க."

"பிளீஸ் பாரதி. அவர்களுக்காக நான் எடுத்துத் தரலை. நானே விருப்பப்பட்டுதான் எடுத்து வந்தேன்."

"இவ்வளவு நாள் எங்கே போயிற்று இந்த அக்கறை? நான் கிழிந்த சேலைகளை தைத்துத்தானே கட்டி வந்தேன்! அப்போது தெரியலையா உங்களுக்கு? எங்க வீட்டில் கஷ்டப்பட்டபோதுகூட இப்படி ஒட்டுப் போட்ட துணி கட்டியது இல்ல. அங்கே போனால்கூட, நான் வாங்கி தரச் சொல்லி கேட்டிருப்பேன். என்னை



"உங்களைப் பிள்ளையார் கோவில்லே பார்த்திருக்கேன்!"

"நான் உங்களை ஆஞ்சநேயர் கோவிலில் பார்த்திருக்கேன்!"

- சீத்தாதம்பி, சென்னை.

அங்கும் போகக் கூடாதுன்னு சொல்லிட்டீங்க! வேலைக்காரங்களுக்கு கொடுப்பது போல் எனக்கு கொஞ்சம் சம்பளமாவது கொடுக்கலாம். வேண்டியதை வாங்கிக்கொள்வேன். எதுவும் செய்யலை என்றால் நான் என்ன செய்வேன்? நீங்க அடிக்கடி கூட்டிக்கொண்டு ஊர் சுற்றுகிறீர்களே... 'அவள்களை'விட நான் எந்த விதத்தில் குறைந்துவிட்டேன்?"

ரவி அவளை தலை முதல் கால் வரை நிதானமாகப் பார்த்தான். அவள் சொல்வது போல் எந்தக் குறையும் இல்லை.

"ஏழை, கீழ் சாதிப் பெண் என்றுதானே என்னை ஒதுக்கி வச்சிருக்கீங்க?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்ல. நீயாக எதையாவது நினைத்துக்கொண்டு பேசாதே! நான் என்ன ஊரா சுற்றுகிறேன்? நீ இது மட்டுமா பேசுவே... இதுக்கு மேலேயும் பேசுவே. சரி, இதையெல்லாம் எடுத்து வை" என்றான்.

"இல்லை. எனக்கு வேண்டாம். சம்பளம் கொடுங்க. நான் எடுத்துக்கிறேன்" என்றாள்.

அவனுக்கு கோபம் வந்தது. "நீ என்ன வேலை செய்து கிழிக்கிறாய்? பணம் என்ன உன் அப்பன் வீட்டு மரத்திலா காய்க்கிறது... நீ கேட்டதும் எடுத்துத் தர! இதோ பாரு... எனக்கு பொறுமை கிடையாது. எதையாவது பேசி என் கோபத்தைக் கிளறாதே. நான் சொல்லும் வேலையை தினமும் ராத்திரியில் செய்கிறாயா? உனக்கு பணம் தருகிறேன்" என்று கண்ணை கவர்ச்சியாக சிமிட்டினான்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது. இருந்தாலும் அமைதியாகிவிட்டாள்.

மறுநாள் காலை தலைவலியாக இருந்தது. வாந்தி வேறு! எழுந்திருக்க முடியவில்லை. இருந்தாலும் மெதுவாக எழுந்து கீழே போனாள். வேலை எதுவும் பார்க்க முடியவில்லை. ஒரே வாந்தியாக வந்தது.

சத்தம் கேட்டு சிவகாமி வந்து பார்த்தாள். மருமகள் வாந்தி எடுப்பதைக் கண்டதும் ஒரு பக்கம் சந்தோஷம் இருக்கத்தான் செய்தது.

"பாரதி, என்ன வாந்தி எடுக்குறே? என்ன செய்யுது? வா... வந்து உட்காரு" என்று பரபரத்துவிட்டாள்.



"ஒண்ணுமில்ல அத்தே... தலைவலி. அதான் வாந்தி. கொஞ்ச நேரம் படுத்தால் சரியாகிடும். படுக்கவா...?" என்றாள்.

இதற்குள் ரவியும், பண்ணையாரும் வந்துவிடவே... விஷயத்தை அவர்களிடம் சொல்லி சந்தோஷப்பட்டாள்.

ரவிக்கு ஒன்றும் புரியவில்லை. 'பாரதி வாந்தி எடுத்தால் அம்மாவுக்கு என்ன...?'– என்று நினைத்தான்.

"ரவி, பாரதியை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போடா" என்றாள்.

"சாதாரண ஒரு வாந்திக்கு ஏன் இந்த ஆர்ப்பாட்டம்?"

"அவள் 'உண்டாகி' இருக்காடா. ஆம்பளை உனக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது?"

அவன் தன் தலையில் அடித்துக்கொண்டான். "அவ உண்டாகலை. இப்ப குண்டாகித்தான் இருக்கா. அவளையே கேட்க வேண்டியதுதானே?"

பாரதிக்கு தலை சுற்றியது. 'இவர்கள் 'இப்படி' அர்த்தம் எடுத்துக் கொண்டார்களே!' என்று பேசாமல் குனிந்து நின்றாள்.

ரவி அவளைப் பார்த்து, "போ... பேசாமல் போய் படு. சரியாகிவிடும்" என்றான்.

விட்டால் போதும் என்று அவள் அறைக்குள் வந்து கதவை சாத்திக் கொண்டாள். வெளியில் மாமனாருக்கும்- மாமி யாருக்கும் சந்தோஷம். கணவனுக்கோ ஏகக் குழப்பம்!

ஞாயிறுக்கிழமை மாலை.

"சீக்கிரம் கிளம்பு பாரதி... சாந்தி வீட்டுக்குப் போகணும்" என்று பரபரத்தான் ரவி.

"நான் வரலை" என்றாள் அலட்சியமாக.

சுள்ளென்று கன்னத்தில் அறைந்தான்.

"நீ உன் மனசில் என்ன நினைச்சிக்கிட்டிருக்கே? வா என்றால் வரணும். பதில் பேசக் கூடாது. நான் சொல்வதை செய்வதென்றால் இங்கே இரு. இல்லையென்றால் எங்காவது தொலைந்து போ. உன்கூட பெரிய ரோதனையாய்ப் போச்சு" என்று தலையில் ரெண்டு கொட்டு வைத்தான். அவளுக்கு வலி தாங்க முடியவில்லை. கண்கள் கலங்கிவிட்டன.

"ஐந்து மணிக்குள் கீழே வரணும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

பாரதி பயந்து நடுங்கிவிட்டாள். அவனது பேச்சின் வலிமை, அவளைப் பயமுறுத்தியது. மாலை ஐந்து மணிக்கு கீழே இறங்கி வந்தாள். சுடிதார் அணிந்திருந்தாள்.

அவளை ஒரு மாதிரிப் பார்த்துவிட்டு, கார்ச் சாவியுடன் முன்னே சென்றான். இவள் ஆட்டுக்குட்டி போல் பின்னால் போனாள். கார் கதவைத் திறந்து- டிரைவர் இருக்கையில் அவன் அமரவும்... இவள், பின்கதவைத் திறக்கப் போனாள்.

"மகாராணிக்கு நான் என்ன டிரைவரா? வாடி... முன்னாடி" என்று கையைப் பிடித்து இழுத்தான்.

அவளுக்கு மணிக்கட்டில் வலி... உயிர்போனது. உதட்டை பற்களால் அழுந்தக் கடித்தாள்.

கையை எவ்வளவுதான் இழுத்தும் அவன் விடவில்லை. பின் மெதுவாக விட்டான். கை கன்றி சிவந்துவிட்டது. அசைக்கக்கூட முடியவில்லை. எதுவும் பேசாமல் வந்தாள்.

அரை மணி நேரம் கழித்து, ஒரு வீட்டின் முன் சென்று கார் நின்றது. அவன் இறங்கிக்கொண்டு, அவள் பக்கம் வந்து கதவைத் திறந்துவிட்டான்.

அவள் இறங்கியதும், "முகத்தைக் கொஞ்சம் சிரிப்பா வச்சிக்க" என்றான், கடித்த பற்களுக்கிடையே!

அவள் உள்ளுக்குள் குமைந்தாள், 'பெண் தோழிக்காக தன்னை எப்படியெல்லாம் நடிக்கச் சொல்கிறான்' என்று!

அவர்களை சாந்தி தம்பதியர் பலமாக வரவேற்றனர். கொஞ்ச நேரம் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். இரவு 'டிபன்' சாப்பிட்டதும் கிளம்பத் தயாரானான் ரவி.

"என்ன அவசரம்! இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருக்கலாமே?" என்றான், சாந்தியின் கணவன் தீபக்.

"இல்லை... எனக்கு வேலை இருக்கு."

"என்ன வேலை, இந்த நேரத்தில்? 'லேட்'டா படுக்கைக்குப் போனா, உன்னை வெளியே தள்ளி கதவைச் சாத்திவிடுவாளா பாரதி?" என்று பலமாக சிரித்தாள் சாந்தி.



## 12

**அ**ன்று 'பிசினஸ்' விசயமாக ஒரு விருந்து. அதற்கு பாரதியையும் அழைத்தான். மறுத்தால் திட்டு கிடைக்கும் என்று நினைத்தாள். அதனால் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றாள்.

பொறுமை இழந்த ரவி, "ஒன்று பேசியே கொல்லு... இல்லைன்னா பேசாம கொல்லு" என்று உதட்டை பிதுக்கிவிட்டு அறைக்குள் சென்றுவிட்டான்.

பாரதி பயந்துகொண்டு கிளம்பினாள். தலை முடியைத் தளரப் பின்னி, அழகான சுடிதாரை அணிந்துகொண்டாள்.

சீக்கிரமே ரவியும் புறப்பட்டுவிட்டான்.

அவனை மறித்தபடி, "காப்பி...?" என்றாள்.

"ம்... ஒரு அரை தம்ளர் குடு."

"..........."

"ஆமா... நீ கிளம்பலையா?"

"கிளம்பிட்டேனே!"

"இந்த 'டிரெஸ்'சிலா?"

"ம்... ஏன் நல்லா இல்லையா?"

"நல்லாத்தான் இருக்கு. நாம் போற இடம் அப்படி! சேலை கட்டிட்டு வா" என்றான்.

அவள் காப்பியை கொடுத்துவிட்டு தயங்கி நின்றாள்.

"சீக்கிரம் பாரதி. நேரமாகிடுச்சு. சேலை மாத்திக்கிட்டு வந்துடு" என்றான்.

அவள் திருதிருவென விழித்தபடி, ஏதோ சொல்ல வருவது போல் பார்த்தாள். ஆனால் தயங்கினாள்.

"என்ன... வேறு ஏதாவது சொல்லணுமா?"

அவன் அப்படிக் கேட்டவுடன், கண்களை அகல விரித்தாள்.

"இப்ப என்ன கேட்டுட்டேன்னு கண்ணை இந்த உருட்டு உருட்டுறே?"

"எனக்கு சேலை கட்டத் தெரியாது. அதான்..."

"போச்சுடா"- என்று கைகளை மேலே தூக்கினான்... "நான் கட்டி விடட்டுமா" என்றான் சிரித்துக்கொண்டே.

அவள் பயந்து இரண்டடி பின்னால் நகர்ந்தாள்.

"என்ன... இந்த நடுங்கு நடுங்கறே? சரி, சேலையை எடுத்துட்டு வா" என்றான்.

"இல்ல..."

"ம்... வா! நானே சொல்றேன்... எதைக் கட்டுவதென்று..."

பின்னாடியே போனான். இள நீலநிற சேலையை எடுத்துக் கொடுத்தான்.

"இதைக் கட்டிக்க... நல்லா இருக்கும்" என்றவுடன், அந்தச் சேலையை தயக்கத்துடன் வாங்கிக்கொண்டாள். உடனே பிடுங்கிக்கொண்டு, "சரி...வா போகலாம்" என்று இரண்டு, இரண்டு படிகளாக குதித்து இறங்கினான். பாரதி மெதுவாக... படிக்கு நோகுமோ என்று அடி மேல் அடி வைத்து வந்தாள்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை... சேலையைப் பிடுங்கிக்கொண்டு, எங்கு கூட்டிப் போகிறான் என்று!

ஓர் அழகு நிலையம் முன் கார் நின்றது. "போ... சேலையை கட்டிக்கொண்டு வா" என்றான்.

"எங்கே போய் கட்டுவது?" என்றாள் மெதுவாக.

"அங்கே என்ன எழுதி இருக்குது... படித்தாயா?"

"ம்..." – என்று தலையாட்டினாள்.

"உள்ளே போய் சேலையைக் கொடு. அவங்களே கட்டி விடுவாங்க. 'பில் பே' பண்ணிடுறேன்."

அப்போதும் அவள் அசையவில்லை.

"போ பாரதி... நேரமாகுது."

"நான் போகமாட்டேன். நீங்க என்னமோ பொய் சொல்றீங்க. சேலை கட்ட இங்கே யாராவது வருவாங்களா... நான் மாட்டேன். என்னை என்னமோ பண்ண நினைக்கிறீங்க" என்றாள்.

அவன் அப்படியே அசையாமல் உட்கார்ந்துவிட்டான், அவள் சொல்வதைக் கேட்டு. 'இப்படி வெகுளியாகப் பேசுபவளிடம் என்ன சொல்வது?'

மென்மையாக அவளது கையைப் பிடித்தான். அவளோ 'வெடுக்'கென எடுத்துக்கொண்டாள். அவனுக்கு முகத்தில் அறைந்தது போல் இருந்தது. கோபப்பட இது நேரம் இல்லை.



பின்னர் மெதுவாக, "இங்கே அழகாக சேலை கட்டி விடுவாங்க பாரதி. ஒன்றும் பயமில்லை. வா, நானும் கூடவே வர்றேன்" என்றான்.

"சரி" – என்று உள்ளே நுழைந்தாள்.

அங்கே இருந்த பெண்ணிடம் அவன் ஏதோ சொன்னவுடன், பாரதியை அறைக்கு அழைத்துச் சென்று– கதவை மூடிவிட்டு– சுடிதாரை அகற்ற முயன்றாள்.

பாரதிக்கு கை– காலெல்லாம் உதறல் எடுத்தது.

"நான் கழட்ட மாட்டேன்" என்று முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தாள்.

உடனே அப்பெண் வெளியே வந்து, "உங்க மனைவி துணியைக் கழட்ட மாட்டேன்னு அழறாங்க. நீங்க போய்ப் பாருங்க" என்றாள்.

ரவி அந்த அறைக்குள் சென்றான். பாரதி அழுதுகொண்டிருந்தாள்.

"என்ன... இப்படி மடத்தனமா பண்றே?"

"நான் இங்கே சேலை கட்ட மாட்டேன்" என்று அழுதாள்.

அவமானமாக உணர்ந்தான் அவன். என்ன செய்வதென்று புரியவில்லை. அவளது கையைப் பிடித்து இழுத்தபடி, காருக்குள் சென்றான்.

கார் நேராக சாந்தியின் வீட்டுக்குச் சென்றது.

"வா" என்று இழுத்துப் போனான். அவள் கை கிடுகிடுவென நடுங்கியது.

சத்தம் கேட்டு கதவைத் திறந்த சாந்தி ஆச்சரியப்பட்டாள்.

"வாங்க... வாங்க... என்ன திடீர்னு! ஒரு போன்கூடப் பண்ணாமே?" என்றாள்.

"ஒண்ணுமில்ல. ஒரு 'பார்ட்டி'க்குப் போகணும். இவளுக்கு இந்த சேலையைக் கட்டிவிடு" என்றான்.

சாந்தி அப்போதுதான் பாரதியை நன்றாகப் பார்த்தாள். அழுது முகம் வீங்கி இருந்தது.

"தீபக் இன்னும் வரலையா சாந்தி?"

"வந்துட்டார். மேலே இருக்கார்..." – சொல்லிக்கொண்டு இருக்கும்போதே தீபக் கீழே இறங்கி வந்தான்.

"ஹலோ ரவி. என்ன அதிசயம்... வாவ்" – என்று வரவேற்றான்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்க– பாரதிக்கு முழு 'மேக்அப்' செய்துவிட்டாள் சாந்தி

"ரவி, நான் உன்னிடம் ஒன்று கேட்கலாமா?" என்றாள் சாந்தி.

"நீ என்ன கேட்கப் போகிறாய் என்று தெரியும். அதைப் பற்றி பிறகு பேசலாம். எனக்கு நேரம் ஆகிவிட்டது. சீக்கிரம் சாந்தி... சொன்ன நேரத்துக்கு எனக்கு போகணும். உனக்குத் தெரியுமே?"

"எனக்குத் தெரியும். உன் பொண்டாட்டிக்குத் தெரியலியே! நான் என்ன செய்வது?"

ரவிக்கு சிரிப்பு வந்தது. எழுந்து மனைவி அருகில் சென்றான். அவளின் அழகு, அவனை வியக்க வைத்தது.

"என்ன பூ வைக்கட்டும் ரவி?" என்று 'பிரிட்ஜை' திறந்தாள்.

"என்ன இருக்கு ?"

"மல்லி, ஜாதி, ரோஜா" என்றாள்.

"உன் விருப்பம்" என்றான். தலை நிறைய மல்லிகைப் பூவை வைத்து, காதோரம் ஒற்றை ரோஜாவையும் வைத்தாள்.

'பேண்ட் பாக்கெட்'டில் இருந்து நகையை எடுத்தான். அதை பாரதி கழுத்தில் போட்டுவிட்டான். அந்தத் தொடுதலில் அவள் உடம்பு நடுங்கியது. பவளம் வைத்த வளையல் தோடு, மோதிரம், எல்லாம் போட்டுவிட்டு எட்ட நின்று அழகு பார்த்தான். அருகில் சென்று முகத்தை கையில் ஏந்தி, நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்.

அதற்குள் அவளுக்கு வியர்த்துவிட்டது. அதை சாந்தி கண்டுகொண்டாள்.

"போயிட்டு வர்றோம் சாந்தி. வர்றேன்டா தீபக்" என்று சென்றுவிட்டான்.

அவர்கள் போனதும் கணவனிடம், "என்ன தீபக்... இவ இப்படி இருக்கா? கல்யாணமாகி இத்தனை மாதங்கள் ஆச்சு. ரவியைப் பார்த்தாலே பயந்து நடுங்கறா. அவர் முத்தம் கொடுத்ததுக்குள்ள எப்படி வியர்த்து கொட்டிவிட்டது பார்த்தியா?" என்றாள், சாந்தி.



"ஆமா... அவர்களுக்குள் ஏதோ பிரச்சினை இருப்பது போல் தெரிகிறது. அவர்களாக சொல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாது. அவன் சின்னப் பையன் கிடையாது... சொல்லித் திருத்துவதற்கு. பார்ப்போம்... சொல்றானான்னு."

அந்த நட்சத்திர ஓட்டல் முன் காரை நிறுத்தினான் ரவி. "வா பாரதி" என்றான்.

அவளும் இறங்கி அவனோடு இணைந்து நடந்தாள்.

"என்னங்க... இவ்வளவு கூட்டமா இருக்கு? என்னை தனியே விட்டுட்டுப் போயிடாதீங்க."

"பயப்படாதே! நான் உன் கூடவேதான் இருப்பேன்."

அங்கு எல்லோரும் பெரிய இடத்து நபர்களே இருந்தனர். குடும்பத்தோடு வந்திருந்தனர்.

இவர்களைப் பார்த்ததும், அனைவரும் வந்து வரவேற்றனர்.

"இன்றைக்குத்தான் உன் மனைவியை எங்க கண்ணில் காட்டணும் என்று நினைத்தாயா? உன் 'செலக்ஷன்' உண்மையிலேயே 'சூப்பர்'. தேவதை மாதிரி இருக்கா."

சிலர், "ஹலோ" என்று கையை நீட்டினர் . பாரதி இரு கரம் கூப்பினாள்.

ரவி சிரித்துக்கொண்டான். அந்த நேரம் யாரோ ஒருவர் கூப்பிட... "இதோ வர்றேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றான்.

"என்னப்பா... மனைவிகிட்ட 'பெர்மிஷன்' கேட்டுட்டு வந்தாயா?" என்று சிரித்தார் அவர்.

"இந்தாப்பா... குடி" என்று தம்ளரை நீட்டினார். ரவி அதை வாங்கிக்கொண்டு பாரதியை நோக்கித் திரும்பினான். அவள் கண்களில் பயம் தெரிந்தது. தம்ளரை கீழே வைத்துவிட்டு, சிறிது நேரம் பேசிவிட்டு மனைவியிடம் வந்தான். அவளுக்கு ஏ.சி.யிலும் வியர்த்தது.

"சாப்பிடலாமா பாரதி?"

"ம்..." என்று தலையாட்டினாள்.

"ஏன் பயப்படுகிறே? 'ரிலாக்ஸா' இரு. நான் பக்கத்திலேதானே இருக்கேன். பிறகு என்ன பயம்?"

இருவரும் சாப்பிட்டனர். பிறகு அனைவரிடமும் விடைபெற்று – வீட்டுக்கு கிளம்பினர்.

காரில் வரும்போது... "பாரதி" என்றான். அவள் திடுக்கிட்டு, "என்னங்க?" என்றாள்.

"நான் மெதுவாகத்தானே கூப்பிட்டேன். எதுக்குப் பயந்தே?"

"திடீர்னு கூப்பிடவும் பயந்துட்டேன்."

"திடீர்னு கூப்பிடாமே... 'உன்னை கூப்பிடப் போறேன்'னு சொல்லிவிட்டா கூப்பிட முடியும்?"

காரை ஓரமாக நிறுத்தினான். அவள், "ஏன்?" என்று ஏறிட்டாள்.

காரின் விளக்குகளை அணைத்துவிட்டு, அவளை இழுத்துக் கட்டி அணைத்தான்.

அவள், "விடுங்க... என்னை" என்று திமிறினாள்.

அவளின் இதழ்களை சுவைத்தான். கழுத்தில் முகம் புதைத்தான். மலரில் தேன் குடிக்கும் வண்டானான்.

பாரதியோ அனலில் இட்ட புழுவாகத் துடித்தாள். பின் மெள்ள மெள்ள அவளும் இளகத் தொடங்கினாள்.

ரவியின் வார்த்தைகள் குழறின. "பா...ர...தி! நீ எவ்வளவு அழகு?" என்றான்.

அவன் எப்போதோ சொன்னது, அப்போது அவள் நினைப்புக்கு வந்தது.

## 13

'உன்னை ஒரு நாளும் என் மனைவியாக ஏற்றுக்கொள்ள மாட்டேன். அப்படியே ஏத்துக்கிட்டாலும், பத்தோடு பதினொன்றாகத்தான் இருப்பே! என் மஞ்சத்தில்தான் இடம் உண்டே தவிர நெஞ்சத்தில் இல்லை. ஆனா, கூடிய சீக்கிரம் உன்னை என் படுக்கைக்கு வர வைப்பேன்' என்று சவால் விட்டான். அந்த நினைவு திடீர் என வந்தது.

அவன் நெகிழ்ந்திருந்த நேரத்தில், அவனைப் பிடித்து பலங்கொண்ட மட்டும் தள்ளினாள். இந்த எதிர்பாராத தள்ளுதலில், அவன் திகைத்து அவளைவிட்டு விலகினான்.

"என்ன பாரதி... இந்த நேரத்தில் இப்படிப் பண்ணிட்டே! உனக்கும் பிடித்துத்தானே, நீயும் என்னைத் தழுவினே?"



"இல்ல... எனக்கு ஒண்ணும் வேண்டாம்" என முகத்தைப் பொத்தினாள்.

"என்ன வேண்டாம்...?" என்று சீறினான்.

அவள் அலட்சியமாக பார்த்தாள்.

"நீ என்ன உலக மகா அழகியா? உன்னை விட்டால் எனக்கு வேற ஆள் கிடைக்காதா?" என்று அவளைப் பிடித்துத் தள்ளினான், கோபத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல். பாரதி, கார் கதவின் மேல் விழுந்தாள். முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

"எதற்கு இப்ப அழுகிறே... அப்படி என்ன நடந்துவிட்டது? இன்று நீ பண்ணினதுக்கு, உன்னை நாலு சாத்து சாத்தியிருக்கணும். பேசாமல் இருந்தேன் பாரு... என்னைச் சொல்லணும்."

"அடிங்க... அடிச்சுக் கொல்லுங்க. நீங்க நிம்மதியாக இருப்பீங்க. அப்பத்தானே நான் எதுவும் கேட்க மாட்டேன். நீங்க இஷ்டத்துக்கு ஊர் சுத்துங்க."

"இப்படிப் பண்ணினால், நான் அப்படித்தான் ஊர் சுற்றுவேன். அதைக் கேட்க நீ யார்?" என்றான், கடுமையாக.

"யாருன்னு கேட்கிறீங்களே... பிறகு எதுக்கு என்னை இப்படிப் பண்ணுறீங்க...? என்னையும் உங்க 'கேர்ள் பிரெண்டு'களைப் போலத்தானே நினைக்கிறீங்க?"

"அடக் கடவுளே... நான் உண்மையில் உன்னை..." என்று தொடங்கியவன், பேச்சை பாதியில் நிறுத்தினான்.

முன்பு கோபத்தில் கொட்டிய வார்த்தைகளை அவனே மறந்துவிட்டான். ஆனால், இவளோ அதையே நினைத்துக்கொண்டு அடம் பண்ணினாள்.

அதன்பின் எதுவும் பேசாமல் காரை எடுத்தான். வேகமாக ஓட்டினான். அதில் தெரிந்தது அவனின் கோபம். 10 நிமிடங்களில் வீடு வந்துவிட்டது.

பாரதி எதுவும் பேசவில்லை. காரைவிட்டு இறங்கி தன் அறைக்குள் நுழைந்து, உடையை மாற்றிக்கொண்டு கீழே வந்தாள். கணவனுக்கும், மாமனார்- மாமியாருக்கும் சாப்பாடு எடுத்து வைத்துவிட்டு, பால் தம்ளருடன் அறைக்குள் நுழைந்தாள்.

ரவி அப்போதுதான் குளித்து முடித்து இடுப்பில் டவல் கட்டிக்கொண்டு வந்தான்.

பாரதிக்கு அவனைப் பார்த்தவுடன் என்னவோ போல் இருந்தது. கண்களைத் தாழ்த்திக்கொண்டாள்.

“ஏன் பாரதி... என்னை நிமிர்ந்துகூடப் பார்க்கலாம். நான் என்ன சிங்கமா, புலியா?” என்றான்.

அவளால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அவனது அகன்ற மார்பும், ரோமங்களும், வலுவான கரங்களும்... அவளுக்கு எங்கே தன்னை மறந்துவிடுவோமோ என்றிருந்தது.

“பால் இந்தாங்க” என்றாள்.

“ஏன்... பக்கத்துல வந்து கொடுக்கக் கூடாதா?” என்று அவன் சொல்லவும்– அவள் குனிந்துகொண்டே முன்னே வரவும்– அவனும் இரண்டு எட்டு முன் எடுத்து வைக்கவும்... அவன் மேல் மொத்தமாக மோதினாள்.

ரவி அவளை அப்படியே பிடித்துக்கொண்டான். தம்ளரில் பால் ததும்பியது. கை அந்த அளவுக்கு நடுங்கியது.

பாலை வாங்கி பக்கத்து மேசை மேல் வைத்தான்.

“எதற்கு இந்த நடுக்கம்? நான் உன்னை அப்படி என்ன பண்ணிவிடுவேன்?”

“விடுங்க. நான் போகணும்.”

“எங்கே?”

அவள் முகத்தை நிமிர்த்தினான். கருவிழிகள் படபடவென அடித்தன.

“சரி... போ” என அவன் சொல்லியும் அசையாமல் அப்படியே நின்றாள்.

“ம்... நீ போனால்தான் நான் ‘டிரஸ்’ மாத்த முடியும். என்னை இப்படியே எவ்வளவு நேரம் நிற்க வைத்துப் பார்ப்பாய்?”

அவள் சட்டென வெளியே போனாள். தன் அறைக்குச் சென்று, ‘அவன் சொல்வது போல் நாம் நடந்துகொண்டால் என்ன... ஏன் இப்படி பண்றோம்? அவனிடத்தில் பெரிதாக என்ன தப்பு இருக்கு? பெரும்பாலும் யார்தான் இந்தக் காலத்தில் தப்பு பண்ணாமே இருக்காங்க? நாம் பிடிவாதமாக இருப்பது சரியா?’ என்று மனது நினைத்தது.

உடன் தன் தலையை குலுக்கிக்கொண்டாள். ‘ச்சே... என்ன நினைப்பு இது? ஏன் இப்படி கீழ்த்தரமாக நினைக்கத் தோன்றுகிறது. இவ்வளவு பாடு படுத்துறான். அவன் மேல் எப்படி அன்பு வந்தது? அவன்தான் இனி தனக்கு எல்லாம்... அவனை விட்டால் வேற யார்



இருக்கா...?’– என்று நினைக்கும்போதே கண்ணீர் வந்தது.

கழட்டி வைத்த நகை, சேலை எல்லாம் அப்படியே இருந்தன. நகைப் பெட்டியை எடுத்துக்கொண்டு, மறுபடியும் அதே அறைக்குச் சென்றாள். அங்கு அவன் இல்லை. சுற்றிலும் தேடினாள். பின் ‘பால்கனி’யை எட்டிப் பார்த்தாள். அங்கு நின்று நிலவை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“க்கும்...” என்று கனைத்தாள். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. “என்னங்க” என்றாள், மெதுவாக.

திரும்பினான். “என்ன?”

“இதை கொடுக்க வந்தேன்.”

“ஏன்?”

அதற்கு அவள் பதில் ஏதும் சொல்லவில்லை.

“சரி... உன்னோட அமைதி எதுக்குன்னு தெரியலை. அந்தப் பெட்டியை அங்கே வைத்துவிட்டு, சீக்கிரம் இந்த அறையைவிட்டுப் போய்விடு” என்றான் கடுமையாக.

அந்தக் குரலில் அதிர்ந்தாள்.

“ஏன் கோபமாக இருக்கீங்க?” என்றாள்.

அவன் கண்கள் கோவைப்பழம் போல் சிவந்திருந்தன. அவற்றை ஒரு முறை இறுக மூடித் திறந்தான்.

பிறகு எதுவும் பேசாமல் வெளியே கை நீட்டினான்.

‘பதிலுக்கு ஏதாவது பேசினால்... அவ்வளவுதான்’ என்று நினைத்து மவுனமாக வெளியேறினாள்.

கொஞ்ச நேரத்தில் அவனும் அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே போனான்.

பாரதிக்கு திக்கென்றது. ‘இந்த நேரத்துக்கு எங்கே போறான்? இங்கு வந்த பிறகு, எந்தப் பெண்ணும் வீட்டுக்கு வருவதில்லை. இவனும் இரவில் வெளியே போனதில்லை. இன்று போகிறானே... எதற்கு? அந்தப் பெண்களைப் பார்க்கவா? அவன் சொல்படி நான் நடந்திருந்தால், இப்படி ‘அவள்களை’த் தேடிப் போகமாட்டான். இருந்தாலும்... ‘மாட்டேன்’ என்று சொன்னவுடன் இப்படியா வீட்டைவிட்டு வெளியேறி– வேறு பெண்ணை தேடிப் போவதா?’ என்று அழுதாள்.

அதோடு, தூக்கமும் வரவில்லை. படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள்... பிறகு நடந்தாள். அவனுக்கு போன் செய்தாள்.

'செல்' அடித்ததும் எண்களைப் பார்த்தான். வீட்டு எண் என்றதும் துண்டித்தான். மறுபடியும் அழைத்தாள். அப்புறமும் 'கட்' செய்தான். வெறுத்துப் போனாள். கணவன் மீது சந்தேகமும் அதிகரித்தது.

வெகுநேரம் கழித்தே வீட்டுக்கு வந்தான் அவன். பாரதி படுத்திருப்பதைப் பார்த்தான். அழுது, அழுது கண்களில் கண்ணீர் காய்ந்திருந்தது. 'சரி... காலையில் பேசிக்கொள்ளலாம்' என்று தன் அறைக்குச் சென்றுவிட்டான்.

மறுநாள் காலை. அவளைக் கூப்பிட்டு கேட்டான்.

"நேத்து எதுக்கு போன் பண்ணினே...?" என்றான்.

"நீங்கதான் 'கட்' பண்ணிட்டீங்களே! இப்ப எதுக்கு கேட்கிறீங்க?"

"என்ன விஷயம்னு தெரிஞ்சுக்கலாம்னுதான்..."

"சும்மாதான் போன் பண்ணினேன்."

"சும்மா எதுக்குப் பண்ணினே? நான் இங்கே இல்லாதது, உனக்கு எப்படித் தெரியும்?"

பேசாமல் இருந்தாள்.

"நான் கேட்பதற்கு பதில் சொல்லு பாரதி" என்றான் அழுத்தமாக.

அவளிடம் மறுபடியும் பயம்.

## 14

"நீங்க வெளியே போனது எனக்குத் தெரியும்."

"இந்த நேரத்தில் எங்கு போகிறான் என்று சந்தேகப்பட்டு போன் பண்ணினாயா?" என்றான்.

அவள் தலை குனிந்தாள்.

"சந்தேகப்பட்டுதானே! எனக்கு வேறு எந்த வேலையுமே இல்லையா...? உன் சந்தேகப் புத்தி உன்னை எங்கு கொண்டு போய் நிறுத்தப் போகுதுன்னு பாரு."

'யார் யார்தான் வேதாந்தம் பேசுவதென்றே இல்லை. தப்பு பண்ணிட்டு, எனக்கு 'அட்வைஸ்' வேறு பண்ணுறீங்க! உங்களுக்கு யார்தான் புத்திமதி சொல்வது?' என்று மனதுக்குள் நினைத்தாள்.



ஆபீசில் அன்று வேலைப்பளு அதிகமாக இருந்தது. சாப்பிடக்கூட நேரம் இல்லை. அப்போதுதான் கிராமத்தில் இருந்து போன் வந்தது, பாரதியின் அப்பா இறந்துவிட்டார் என்று!

அவன் திகைத்துப் போய்விட்டான். 'இதை அவளிடம் எப்படிச் சொல்வது? தாங்கிக்கொள்ள மாட்டாளே...! நாமே வீட்டுக்குப் போய்... நேரே சொல்லலாம்' என்று நினைத்து, வேலையை பாதியில் நிறுத்திவிட்டுக் கிளம்பினாள்.

இதனிடையே தொழிற்சாலையில் இருந்து அவசரமாக போன் வந்தது. உடனே அங்கே விரைந்தான். அங்கு ஏற்பட்ட சில குளறுபடி காரணமான அவனுக்கு வெளியூர் சென்று, வி.ஐ.பி. ஒருவரை அவசரமாக சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம். புறப்பட்டுவிட்டான்.

இந்த அவசரத்தில் பாரதியின் அப்பா இறந்த செய்தியை அப்படியே மறந்துவிட்டான். அந்த பிரபலத்தை நேரில் பார்த்து– சில பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு– மூன்று நாட்கள் கழித்துதான் வீடு திரும்பினான்.

அப்போதுதான் நினைவு வந்தது. விஷயத்தைச் சொன்னான்.

பாரதி கதறிவிட்டாள்.

"என்னைப் பழி வாங்கத்தான் இப்படிச் செய்துட்டீங்க..."என்றாள்.

"இல்ல பாரதி. அவசர வேலையில் மறந்துட்டேன். தப்புதான். நான் உடனே சொல்லி இருக்கணும்."

"வேணும்னுதான் சொல்லாம மறைச்சிட்டீங்க. நான் நம்ப மாட்டேன்" என்றாள்.

பண்ணையாரும் அவனைத்திட்டினார். "சரி...இனியும் தாமதிக்காம கிளம்பும்மா பாரதி" என்று அவளை அவசப்படுத்தினார்.

"எதற்கு...? என் அப்பா உயிரோடு இருக்கும்போது பார்க்கக் கூடாது என்று சொன்னீங்க. இப்ப இறந்து மூன்று நாள் ஆகிவிட்டது. இனி எதற்கு? கடைசியாக்கூட அவரைப் பார்க்கவிடாம பண்ணிட்டீங்களே" என்று அழுதாள்.

"சரிம்மா... நடந்தது நடந்துவிட்டது. கிளம்பு... போயிட்டு வரலாம். நீயும் வாடா" – பண்ணையார் விரட்டினார்.

"சாரிப்பா... என்னால வர முடியாது" – மறுத்தான். வேலைகளை காரணம் காட்டினான்.

அப்பாவின் நீண்ட நேர சரிக்கட்டலுக்குப் பின்... சரி என்று அவனும் கிளம்பினான்.

பாரதி அழுதுகொண்டே வந்தாள். காரை வேகமாக ஓட்டினான். ஊர் வந்ததும் அவளுக்கு துக்கம் அதிகரித்தது. இறங்கி ஓடிச் சென்று அம்மாவையும், தங்கையையும் கட்டிக்கொண்டாள். அவள் கதறிய கதறலில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கூடிவிட்டனர்.

"அப்பா, உங்களை கடைசியா பார்க்கக்கூட எனக்கு கொடுத்து வைக்கலியே...? நான் அத்தனை பாவியாகிட்டேனே?" என்று அழுதாள்.

ரவிக்கோ என்னமோ போல் இருந்தது. 'தான் தப்பு பண்ணிவிட்டோமோ? மாமனார் இறந்த விஷயத்தை உடனே சொல்லி இருந்தாலாவது கடைசியாக ஒரு முறை அவர் முகத்தையாவது பார்த்திருப்பாள். இப்படி விட்டுவிட்டேனே?'

அவள் அழுதுகொண்டே இருந்தாள்.

உள்ளே சென்று- "பாரதி" என்றான். அவளும் இவனைப் பார்த்ததும் எழுந்து வந்தாள்.

"நேரமாகுது. நான் கிளம்பணும். இப்ப கிளம்பினால்தான், நாளை காலையில போக முடியும். வரட்டுமா? நீ எப்போ வர்றே?" என்றான்.

அவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது. 'அடுத்தவர் முன்னிலையில் தன் கோபத்தைக் காட்ட கூடாது. நாம் சந்தோஷமாக இருக்கிறோம் என்று அம்மா நினைத்துக்கொண்டிருக்கிறார். அதனால் அமைதியாகவே இருந்துவிட வேண்டும்' என்று எண்ணியவள், "சரி... போயிட்டு வாங்க" என்றாள்.

'செல் போன்' ஒன்றை கொடுத்தான்.

"இதை வைத்து கொள். அவசரத்துக்கு உதவியாக இருக்கும். நீயும் போன் பண்ணு" என்றான்.

"நான் யாருக்குப் போன் பண்ணிப் பேசப் போறேன்? இந்த கரிசனம் என் மீது அப்போதே இருந்திருக்கணும்."

ரவி எதுவும் பேசாமல் சென்றுவிட்டான். பாரதிக்கோ தான் அப்படிப் பேசி இருக்கக்கூடாதோ... 'அவன் கொஞ்சம் தாழ்ந்து போகவும், நான் அளவு மீறி பேசுகிறேனோ?'- என்றிருந்தது.



ஒரு வாரம் கடந்தது. பாரதி இல்லாதது, வீடே 'வெறி'ச் என்று இருந்தது ரவிக்கு! உள்ளே வரவே பிடிக்கவில்லை.

சிவகாமிக்கோ கஷ்டமாக இருந்தது. என்னதான் வேலைக்காரங்க இருந்தாலும், பாரதி இருந்து பணிவிடைகளைச் செய்யும் முறையே தனிதான்.

சுமதி வந்திருந்தாள். மணி எட்டாகியும் படுக்கையிலேயே இருந்தாள்.

தாய்க்கு கடுப்பானது. 'பாரதியாக இருந்தால் இப்படி இருப்பாளா? இந்நேரத்துக்கு எல்லா வேலைகளையும் முடித்திருப்பாளே! பேரனைக்கூட என்னால சமாளிக்க முடியவில்லையே?'- மகள் மீது ஆத்திரமாக வந்தது.

"சுமதி" என்று கத்தினாள். ஆனால், அவள் எழுந்தபாடில்லை.

ரவி 'டிபன்' சாப்பிடுவதற்காக கீழே வந்தான். ஆனால், எதுவும் தயாராகவில்லை.

"பாரதி" என்றான். பிறகுதான் புரிந்தது... வீட்டில் இல்லை என்று! அவள் இல்லாமல் எந்த வேலையும் சரிவர நடக்கவில்லை.

சிவகாமி, "போய் பாரதியைக் கூட்டி வாடா. இல்லையென்றால் ஒரு போன் பண்ணியாவது வரச் சொல்லு. வீடே என்னவோ போல் இருக்கு" என்றார்.

"சரிம்மா" என்றான்.

அப்பாவுக்கு போன் செய்தான்.

"எப்பப்பா திரும்பி வர்றீங்க? பாரதி என்ன பண்றா? இப்ப எங்க இருக்கா? நம் வீட்டிலா... இல்ல அவ வீட்டிலா?"

"அவங்க வீட்டில்தான் இருக்கா."

"நீங்க சாப்பாட்டுக்கு என்னப்பா பண்ணுறீங்க?"

"பாரதி நேரத்துக்கு சாப்பாடு கொடுக்கிறா."

"அப்பா... நம்ம வீட்டுக்கு பாரதி வரும்போது, எனக்கு போன் பண்ணச் சொல்லுங்க. இல்லைன்னா நானே பண்ணுறேன். மதியம் எப்ப வருவா?"

"சரியா ஒரு மணிக்கு."

"சரிப்பா... நானே பண்ணுறேன்."

சொன்னது போலவே பாரதி சரியாக ஒரு மணிக்கு அவர் இருந்த

அறைக்கு சாப்பாடு கொண்டு வந்தாள். அவள் உள்ளே வருவதற்கும், அங்கே போன் ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது.

“போனை எடும்மா” என்றுவிட்டு, பின்புறம் சென்றுவிட்டார்.

பாரதி எடுத்து, “ஹலோ” என்றாள்.

“ரவி பேசுகிறேன்.”

“தெரியுது... சொல்லுங்க” என்றாள்.

“பரவாயில்லையே... என் குரல் நினைப்பு இருக்குதே?”

“சரி... என்ன விஷயம்?”

“ஏன்... விஷயம் இருந்தால்தான் பண்ணணுமா? அதான் நீ எனக்கு போன் பண்ணலையா?”

“நான்தான் உங்க பக்கத்துல இல்லையே... அதனால சந்தோஷமா, நிம்மதியா இருக்க வேண்டியதுதானே?”

மறுமுனையில் மவுனம் நிலவியது.

“ஹலோ... ஹலோ...” என்றாள்.

“ம்... ம்... நீ அப்படித்தான் நிம்மதியா– சந்தோஷமா இருக்கியா?” என்று ‘டக்’கென இணைப்பைத் துண்டித்தான். அவள் வாயடைத்துப் போனாள். ரிசீவரை மெதுவாக வைத்தாள்.

மாமனார் வரவும் சாப்பாடு போட்டுவிட்டு, தன் வீட்டுக்கு கிளம்பினாள்.

“பாரதி... வந்த காரியம் எல்லாம் முடிஞ்சாச்சு. நாம ஊருக்கு எப்பம்மா போகலாம்? எவ்வளவு நாள்தான் இங்கிருக்க முடியும்? எனக்கும் அங்கு வேலை இருப்பது உனக்குத் தெரியும்தானே?”

“போகலாம் மாமா” என்று பொதுவாகச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

பாரதியின் அம்மாவும், மகள் தன் கணவன் ஊருக்குச் செல்ல அனுமதி கொடுத்தாள்.

அந்த வாரத்திலேயே பாரதியும், பண்ணையாரும் ஊருக்குக் கிளம்பினர்.

அதற்குள் சிவகாமிக்கு மூச்சுத் திணறிவிட்டது. சுமதி வேறு வேலைக்காரர்களை திட்டியும், விரட்டியும், மிரட்டியும் வேலை வாங்கியதால் பலர் ‘லீவு’ போட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். ஒருத்தி மட்டும் இருந்தாள். அவளும் ஒழுங்காக சமைக்கவில்லை.



சிவகாமிக்கு பத்தியச் சாப்பாடு. ஆனால், அந்த வேலைக்காரி சமைத்ததோ சிவகாமிக்கும் சுமதிக்கும் சுத்தமாகப் பிடிக்கவில்லை.

இதுபற்றி கேட்டதும், “பாரதிம்மாதான் நல்லா சமைப்பாங்க. எனக்கு சமையல் வேலையெல்லாம் அவ்வளவா வராது. காய் நறுக்கி கொடுப்பேனே தவிர சமைப்பதில்லை” என்றாள்.

சிவகாமி எதுவும் பேசவில்லை. சுமதியிடம் சொன்னாள். “நீயாவது சமையல் செய்யிம்மா. இவ சமையலை வாயில வைக்கவே முடியலை.”

“என்னால் முடியாதும்மா. உன் மருமக வந்ததும் சமைக்கச் சொல்லி சாப்பிட்டுக் கொள். என்னாலும் இங்கே சாப்பிட முடியவில்லை” என்றாள்.

தாய்க்கு... மருமகள் இல்லாதது பெரிய குறையாகவே தெரிந்தது.

## 15

பாரதி வந்துவிட்டாள். வீடே மறுபடியும் சுறுசுறுப்பானது. அடுப்படி அலங்கோலமாகக் கிடந்தது. வந்ததுமே அதைச் சுத்தம் செய்யும் வேலையைப் பார்க்க தொடங்கிவிட்டாள். அவரவர்களுக்கு தேவையானவற்றை செய்து எடுத்து வைத்தாள்.

சுமதி, ‘அது வேண்டும், இது வேண்டும்’ என்று அதிகாரம் செய்தாள். சிவகாமிக்கே கோபம் வந்தது.

“நீ பேசாம இருக்கமாட்டியா?” என்று மகளைத் திட்டினாள்.

பாரதி எதையும் கண்டுகொள்ளவில்லை. இரவு... வேலை முடிந்ததும் அறைக்குள் சென்று படுத்துவிட்டாள். இன்னும் ரவி வரவில்லை. இவள் ஊர் திரும்பியதும் அவனுக்குத் தெரியாது.

வெகுநேரம் கழித்து வந்தான். அவனுக்கு வெளியே சாப்பிட நேரமில்லை. பசித்தது. “அம்மா... சாப்பிட என்ன இருக்கு?” என்றான்.

“தெரியலைடா... பாரதி வந்துட்டா! அவளிடமே கேளு” என்று போய் படுத்துவிட்டார்.

பாரதி வீடு திரும்பியது, ரவிக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. மேலே சென்று அறைக் கதவைத் தட்டினான். திறக்கவில்லை.

"பாரதி, நான்தான் வந்திருக்கிறேன். கதவைத் திற" என்றான்.

கதவைத் திறந்து அப்படியே நின்றாள். அவளை இடித்துக்கொண்டு உள்ளே சென்றான்.

"எப்படி இருக்கே... எப்போ வந்தே? ஏன் எனக்கு போன்கூட பண்ணலை?"

எந்தக் கேள்விக்கும் பதில் வரவில்லை.

என்றாலும் அவள் முகத்தை ஆவலோடு பார்த்தான்.

"சாப்பிட என்ன இருக்கு?"

"போய் அடுப்படியில் பாருங்க. என்னை ஏன் கேட்கிறீங்க?" என்றாள் படக்கென!

ரவிக்கே 'ஏன் கேட்டோம்?' என்றிருந்தது. சட்டென எழுந்து தன் அறைக்குச் சென்றுவிட்டான்.

பாரதியும் ரோசமாக படுத்துவிட்டாள். 'பசித்தால் சாப்பிடட்டும். இல்லையென்றால் பட்டினி கிடக்கட்டும்' என்று நினைத்தாள்.

இருந்தாலும் அவளால் நிம்மதியாக உறங்க முடியவில்லை. மனது அடித்துக்கொண்டது. 'அவனுக்கு ரொம்பவே பசித்திருக்கும். அதனால்தான் கேட்டிருப்பான்' என எண்ணியவாறே எழுந்து கீழே சென்றாள்.

தோசை வார்த்து எடுத்துக்கொண்டு, அறைக்குச் சென்று கதவைத் தட்டினாள்.

"திறந்துதான் இருக்கு. உள்ளே வரலாம்..." என்றான்.

கதவைத் திறந்துகொண்டு 'டிபனை' மேசை மேல் வைத்துவிட்டு, "சாப்பிடுங்க" என்றாள்.

அவன் உடைகூட மாற்றாமல் அப்படியே படுத்திருந்தான்.

"எனக்கு வேண்டாம். உனக்கு ஏன் வீண் சிரமம்? நீ போய்ப் படு" என்றான்.

"இல்லை... சாப்பிடுங்க" என்றாள்.

"எனக்கு வேண்டாம். நீ போகலாம்" என்று திரும்பி படுத்துக்கொண்டான்.

அவள் அப்படியே நின்றாள். 'அவன் சொன்னால் சொன்னதுதான். பிடிவாதக்காரன். பசியோடு வந்தவனை நாம் இப்படி பேசியிருக்கக் கூடாது' என எண்ணினாள்.



"போய்ப் படு பாரதி. ஒரு நேரம் சாப்பிடாம இருந்தா நான் ஒன்றும் செத்துவிட மாட்டேன்" என்றான்.

அவள் போய்விட்டாள்.

காலையில் அவனுக்குப் பிடிக்கும் என்று பூரி மசாலா, வெங்காய ஊத்தாப்பம், புதினா சட்னி என்று நிறைய வகைகளைத் தயார் செய்திருந்தாள்.

ரவியோ சாப்பிடாமலேயே சென்றுவிட்டான். மதியமும் வீட்டுக்கு வரவில்லை. அவளுக்கு அழுகை வந்தது. எதையும் காட்டிக்கொள்ளாமல் வேலையைக் கவனித்தாள்.

'இனிஅவன் தன்னிடம் வந்து கெஞ்சினாலும் பேசக் கூடாது' என்று நினைத்தாள்.

இரவு அவன் வரும் வரை முன் அறையில் உட்கார்ந்தே இருந்தாள். இவளைத் திரும்பி பார்க்காமலேயே சென்றுவிட்டான்.

பின்னாடியே போனாள். "சாப்பிட வாங்க" என்றாள்.

"உனக்கு எதுக்கு சிரமம்? எனக்கு என்ன ஆளா இல்ல... சாப்பாடு போடுவதற்கு? நீ போய் சாப்பிட்டுப் படு" என்று முகத்தில் அறைவது போல் கதவைச் சாத்தினான்.

ஒரு வாரமாக வீட்டில் சாப்பிடவில்லை. அவளிடம் பேசவும் இல்லை. பாரதியும் வீம்பாக இருந்தாள்.

சிவகாமிக்கு 'பிரஷர்' அதிகமாகி, மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். பாரதி பலமாக கத்திவிட்டாள்.

"என்னங்க... இங்க வாங்க. வந்து அத்தையைப் பாருங்க. மாமா சீக்கிரம் வாங்க..." என்று பதறினாள்.

ரவியும், பண்ணையாரும் ஓடி வந்தனர். பண்ணையார் தன் மனைவியைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டு காருக்கு விரைந்தார். கார், ஆஸ்பத்திரி நோக்கி பாய்ந்தது.

அந்தப் பிரபல மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டாள், சிவகாமி. பல்வேறு சோதனைகளுக்குப் பின், 'இப்போது எதுவும் சொல்ல முடியாது' என்று டாக்டர் சொல்லிவிட்டார்.

அனைவரும் அங்கேயே இருந்தனர். மறுநாள்தான் கண் விழித்தாள் சிவகாமி. "இனிமேல் பயமில்லை" என்றனர் மருத்துவர்கள்.

'ஐ.சி.யு.'வில் இருந்து சாதாரண அறைக்கு மாற்றிவிட்டார்கள். வீட்டிலும், ஆஸ்பத்திரியிலும் அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்தாள் பாரதி.

ஒரு வாரம் கழித்துதான் சிவகாமியை ஆஸ்பத்திரியில் இருந்து 'டிஸ்சார்ஜ்' செய்தனர். ஆனால், முழு ஓய்வில் இருக்க வேண்டும், எழுந்து நடக்கக் கூடாது என்றும் டாக்டர்கள் கூறிவிட்டனர்.

இதனால் படுத்தப் படுக்கையாகவே கிடந்தாள் சிவகாமி. அவள் அருகிலேயே படுத்து நேரத்துக்கு மருந்து- மாத்திரைகளைக் கொடுத்து கவனித்துக்கொண்டாள் பாரதி.

அன்று ஒரு நாள் இரவு. பண்ணையார் வந்து, "இவளை நான் பார்த்துக்கிறேன். நீ போய் மேலே படும்மா. பாவம்... நல்லா தூங்கி ரொம்ப நாளாச்சு" என்றார்.

"இல்ல மாமா. நானே பார்த்துக்கிறேன்."

ரவியும் சொன்னான். "நீ போய் படு பாரதி. நான் பார்த்துக்கிறேன்."

"வேண்டாம். நானே பார்த்துக்கிறேன்."

"ரொம்ப சோர்வா தெரியிறே! எவ்வளவு நாள் தூங்காம இருப்பே? சொல்வதைக் கேளு. பிடிவாதம் பிடிக்காதே! உனக்கு முடியவில்லைன்னா யார் பார்ப்பாங்க?" என்றான் மென்மையாக!

இதை அடுத்து அவள் மெதுவாக அடியெடுத்து வைத்து தன் அறைக்குச் சென்றாள்.

சற்று நேரம் கழித்து ஒரு தம்ளர் பாலுடன் அங்கு விரைந்தான் ரவி.

பாரதி தூங்கிவிட்டிருந்தாள். சிறிது நேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். 'எத்தனை அருமையான பெண்! கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல், என் அம்மாவை எப்படியெல்லாம் கவனித்துக்கொண்டாள்? எவ்வளவு அசதி இருந்தால், படுத்ததும் இப்படி தூங்குவாள். அம்மா இவளை எவ்வளவு திட்டினாங்க! அதையெல்லாம் மனதில் வைத்துக்கொள்ளாமல் நன்றாகக் கவனித்தாள்.

வேறொரு பெண் என்றால், 'உங்கள் அம்மா என்னை எப்படி கொடுமைப்படுத்தினாங்க...! நான் எதற்கு அவங்களைப் பார்க்க வேண்டும்?' என்பாள். ஆனால், இவள் வாயே திறக்கவில்லை.'



மனதுக்குள் பாராட்டினான்.

மறுநாள் பாரதிக்கு நல்ல காய்ச்சல். எழ முடியவில்லை. அவளின் முனகல் சத்தம், பக்கத்து அறை வரை கேட்டது.

போய் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். அனலாகக் கொதித்தது. "பாரதி" என்று எழுப்பினான்.

அவளால் கண் திறந்துகூட பார்க்க முடியவில்லை.

"இப்படி காய்ச்சல் அடிக்கிறதே! ஏன் என்னிடம் சொல்லவில்லை? சொல்லி இருந்தால் உடனே டாக்டரைப் போய் பார்த்திருக்கலாமே...? சரி, எழுந்திரி... ஆஸ்பத்திரிக்கு போகலாம்."

"இல்லை... எனக்கு ஒன்றுமில்லை. நீங்க ஆபீஸ் கிளம்புங்க. அத்தையைப் பார்க்கணும்..." என்று எழுந்தாள்.

எழுந்தவளால் நிற்க முடியவில்லை. உடனே ரவி தாங்கிப் பிடித்தான்.

"நான் சொல்வதைக் கேட்கமாட்டாய்... அப்படித்தானே?" என்றான் கோபமாக.

அவள் எதுவும் பேசவில்லை. அவனே தொடர்ந்தான்.

"இப்போது ஆஸ்பத்திரிக்கு என்னுடன் கிளம்ப முடியுமா... முடியாதா...?"

அப்போதும் அவளிடம் மவுனம்.

அவன் வெளியே போனான். அரை மணி நேரத்தில் ஒரு டாக்டர் வந்தார். பாரதிக்கு ஊசி போட்டுவிட்டு. நல்லா ஓய்வு எடுக்கச் சொல்லிவிட்டுச் சென்றார்.

"நான் போய் உனக்கு 'டிபன்' கொண்டு வர்றேன். நீ பேசாம படு" என்று கீழே போனான். தட்டில் இட்லி வைத்து- சாம்பார் ஊற்றிக்கொண்டு வந்தான்.

"சாப்பிடு பாரதி, சாப்பிடாமல் மாத்திரை போடக்கூடாது."

"நான் காலையில் எதுவுமே சாப்பிடுறதில்லை. அதனால எனக்கு வேண்டாம்."

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன சொல்றே நீ... காலையில எதுவும் சாப்பிடுறதில்லையா?"

"ம்... உங்களுக்கு ஒன்றுமே தெரியாது பாருங்க."

"உண்மையாகவே எனக்குத் தெரியாது. ஆமா... ஏன் காலையில் சாப்பிடுவதில்லை? சொன்னால்தானே எனக்குத் தெரியும்!"

"நான் உங்க வீட்டுக்கு வந்ததில் இருந்து ஒரு வேளை சாப்பாடுதான். அதுவும் உப்பில்லா மோர் சாதம் மட்டும். இரவும் சாப்பிடமாட்டேன். உங்க அம்மா சொல்லலையா... அல்லது உங்களுக்குத் தெரியாதா?"

அவனுக்கு அப்போதுதான் நினைவு வந்தது. கல்யாணமான புதிதில் அம்மா சொன்னது.

அவன் அப்படி நினைக்கவில்லை. இவ்வளவு நாளும் அவள் இப்படித்தான் தொடர்கிறாள் என்று. 'இவள்தானே சமைக்கிறாள். சாப்பிடுவாள்' என்கிற நினைப்பே இருந்தது.

"அடப்பாவி, இத்தனை நாளும் இப்படித்தான் சாப்பிட்டியா? யாருக்குத் தெரியும் நீ இப்படி சாப்பிடுவது?" என்று ஓங்கி அறைந்தான்.

அவள் தடுமாறி விழப் போனாள். அவளை அப்படியே தாங்கிப் பிடித்தான். பிடித்தவளை அணைத்துக்கொண்டு,

"உனக்கு இரக்கமே இல்லையா? நான் எப்படித் துடிக்கிறேன்! உண்மையிலேயே உன்னை ஏற்றுக்கொண்டேன். என் மனதில் உன்னைத் தவிர வேற யாரும் இல்லையென்று நம்புகிறாயா? அல்லது... என்ன செய்தால் நம்புவாய் சொல். அதையும் செய்கிறேன். செத்தால்தான் நம்புவியா? இந்த நிமிடமே செத்துவிடுகிறேன்" என்று குமுறினான்.

பேசிக்கொண்டே ஒரு இட்லியை எடுத்து அவளுக்கு ஊட்டிவிட்டான்.

அதைச் சாப்பிட்டதுமே அப்படியே அவன் மீது வாந்தி எடுத்தாள்.

பதறி, "சாரிங்க. இருங்க... துடைச்சிவிடுகிறேன்" என்றாள்.

"பரவாயில்ல பாரதி. நானே கழுவிக்கிறேன். நீ பேசாம படு" என்றான்.

அவன் குளித்துவிட்டு, கீழே தரையையும் சுத்தம் செய்தான்.

"அய்யோ, நீங்க எதுக்கு இதெல்லாம் செய்றீங்க?"

"ஏன்... செய்யக்கூடாதா? நான் செய்யாமல் வேற யார் செய்வா? வா... வந்து என் அறையில் படுத்துக்கொள். உனக்கு ரொம்ப வேர்க்குது. 'ஏ.சி.' போட்டு விடுகிறேன்."

"வேண்டாங்க. வாந்தி எதுவும் எடுத்துட்டா என்ன செய்வது? நான் இங்கேயே இருக்கேன்"– அவள் சொல்லி வாய் மூடும் முன்



அப்படியே தூக்கிக்கொண்டு அறைக்குச் சென்று கட்டிலில் படுக்க வைத்தான்.

"இந்தா... முதல்ல இந்த மாத்திரையைப் போட்டுக்க."

"நான் போட்டுக்கிறேன். நீங்க ஆபீஸ் கிளம்புங்க."

"நான் போனா சாப்பிடமாட்டே..."

"இல்ல... சாப்பிடுறேன். நீங்க போங்க. அத்தை எப்படி இருக்காங்க?"

"அவங்க நல்லாத்தான் இருக்காங்க."

"நான் ஆபீஸ் போயிட்டு சீக்கிரம் வந்துடுறேன். நீ படுத்து ஓய்வு எடு" என்று சென்றுவிட்டான்.

அடுத்த ரெண்டு மணி நேரத்துக்குள் பத்து போனாவது பண்ணி இருப்பான். மதியமே வீட்டுக்கு வந்துவிட்டான்.

பாரதி மாத்திரை போட்டுவிட்டு, நன்றாக தூங்கிக் கொண்டிருந்தாள்.

அவனும் அப்படியே படுத்துவிட்டான்.

திடீரென அவள் விழித்துப் பார்த்தாள். அவன் ஆதரவாய் கட்டிப் பிடித்து படுத்திருந்தான்.

## 16

பாரதியின் தளிர் மேனி நடுங்கியது. 'கத்திவிடுவோமோ?' என்று பயமாக இருந்தது. 'அசைந்தால் அவன் விழித்துக்கொள்வானோ?' என அப்படியே இருந்தாள்.

அவளை அறியாமல் அவளது உடம்பில் ஓடும் நடுக்கத்தை உணர்ந்து, அவன் விழித்துக்கொண்டான்.

அவளைப் பார்த்து லேசாக சிரித்தான். அந்தச் சிரிப்பில் மயங்கினாள்.

"குளிருதா பாரதி... 'ஏ.ஸி.'யை அணைக்கட்டுமா?" என்றான்.

"இல்லை. வேண்டாம்... எனக்குக் குளிரலை."

"அப்புறம் ஏன் நடுங்குது உடம்பு?"

"தெரியலை!"

"உண்மையிலேயே தெரியலையா... இல்லை, தெரியாத மாதிரி நடிக்கிறாயா? ஏன்... என் அன்பு- அணைப்பு பிடிக்கலையா?"

"பிடிச்சிருக்கு."

"அப்புறம் ஏன் இந்த நடுக்கம்?"

"தெரியலை. உங்களைப் பார்த்தாலே எனக்கு இப்படி நடுங்குது."

"இனிமே என்னைப் பார்த்து பயப்படக்கூடாது. சரியா? மாத்திரை சாப்பிட்டியா?"

"ம்..."- என்று தலையாட்டினாள்.

"சரி... நீ 'ரெஸ்ட்' எடு. எனக்கு வேலை இருக்கு"- எழுந்து, தான் கொண்டு வந்த 'பைலில்' மூழ்கினான்.

'கொடைக்கானலுக்கு சுற்றுலா போனபோதும், இப்படித்தான் 'பைலை' கையோடு கொண்டு வந்திருந்தான். பகல் முழுவதும் சுற்றிவிட்டு, இரவில் வேலையில் மூழ்கிவிட்டான்.

முதலாளியே இவன்தானே? ஏன்... இரவு- பகலாக வேலை பார்க்கிறான்? இதற்கெல்லாம் ஆள் வைத்துக்கொள்வதுதானே?' என்று நினைத்தாள். பின்னர், கொடைக்கானலில் நடந்த சம்பவம் அவள் நினைவுக்கு வந்தது.

எல்லோரும் ஜோடி ஜோடியாகச் சுற்றினர். சுற்றுலா வந்தவர்கள் பலரும் அப்படித்தான் இருந்தனர்.

மாலை நேரத்தில் பாரதியும், ரவியும் ஓரிடத்தில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில் ஒரு ஜோடி மெய் மறந்த நிலையில்...

பாரதி அவர்களைப் பார்த்துவிட்டு, முகத்தை திருப்பிக் கொண்டாள். ரவி அதைக் கவனித்தான்.

"ஏன் பாரதி முகத்தைத் திருப்புறே?"

அவளுக்கு எரிச்சலாக இருந்தது. உடனே பேச்சை மாற்ற நினைத்தவள், "நீங்க அடிக்கடி கொடைக்கானலுக்கு வருவீங்களா...?" என்றாள்.

"ம்... அடிக்கடி வருவேன்"

"நீங்க மட்டுமா... இல்ல...?"- என்றவள், நாக்கை கடித்துக்கொண்டாள்.

"இதை என்னிடம் நேரடியாகவே கேட்க வேண்டியதுதானே? 'யாருடன் வருவீங்க?' என்று. நீ நினைப்பது சரிதான். நான் தனியாக



வருவதில்லை. பெண்களோடுதான் வருவேன். அவர்களோடு இது மாதிரி சந்தோஷமாகத் தான் இருப்பேன்... போதுமா? இன்னும் எதுவும் தெரிந்துகொள்ளணுமா...?" என்றான்.

'கொஞ்சம்கூட வெட்கம் இல்லாம, கட்டின மனைவியிடம் இப்படி சொல்கிறானே! எனக்குத்தான் அசிங்கமா இருக்கு.'

மழை பொழியத் தொடங்கியதால், சீக்கிரமே அறைக்கு திரும்பிவிட்டனர். 'பால்கனி'யில் இருந்து வெளியே பார்த்தால், அத்தனை அழகாக இருந்தது வானம். சீக்கிரமே இருட்டிவிட்டது. மழை வேறு தொடர்ந்தது. இது மாதிரி இருந்தால், பாரதிக்கு ரொம்பவே பிடிக்கும். ஆனால் குளிர், ஊசியாய் துளைத்தது உடலில்! அதையும் பொருட்படுத்தாமல் வெளியில் நின்று வேடிக்கைப் பார்த்தாள்.

அவளுக்கு அதிக சந்தோஷமாக இருந்தது. திரும்பிப் பார்த்தாள். ரவி அங்கு வந்துகொண்டிருந்தான்.

"பாரதி... உள்ளே வா" என்றான்.

"நீங்க வந்து பாருங்களேன். எவ்வளவு அழகா இருக்குது?"

பலரும் 'பால்கனி'யில் நின்றனர்... அதன் அழகை ரசிக்க! அதேநேரம் அவர்கள் ஒருத்தரை ஒருத்தர் தழுவிய நிலையில்...

## ஒன்று... இன்னொன்றாக!



கிணத்து மேட்டின் சரளை
வாசலுக்கும்
வெள்ளைமண் கோலமிடவும்.

புயலில் சாய்ந்த மாமரம்
குதிராகவும்
இலைகள் தோரணமாகவும்

கால் தேய
உழைத்த வண்டி மாடு
கால் முறிஞ்சு
கறிக்கும், தோலுக்கும் போனது.

கிழிந்த பழைய வேட்டி
இடுப்புக் கோவணமாக
உருமாறியது.

விபத்தில் சிதைந்த
என் மகனின்
இதயம் கண்கள் சிறுநீரகம்
கல்லீரல்

ஒவ்வொன்றும்
வெவ்வேறு சரீரங்களில்
இப்போது!

- சிவதாரன்

"எதைப் பார்க்க சொல்றே பாரதி? எல்லாம் நல்லாத்தான் இருக்கு. இதுக்கு நீ சம்மதிக்கணுமே? சம்மதிச்சா நான் 'ரெடி'. உனக்கு சம்மதமா...?"

அவன் எதைச் சொல்கிறான் என்று புரிந்துகொண்டாள். அழகாக உதட்டைச் சுளித்து பழிப்பு காட்டினாள். அவள் உதட்டைச் சுளிக்கும்போது கன்னத்தில் அழகாக சுழன்று குழி விழுந்தது.

உடனே அவளின் உதட்டை விரல்களால் பிடித்தான்.

"ம்...ம்.... விடுங்க வலிக்குது."

"பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்தாயா... எப்படி இருக்காங்க என்று? இதற்குத்தான் இங்கு வருவது. வேறு எதற்கு...? உள்ளே வா... பனிக்காற்று உடம்புக்கு ஒத்துக்காது."

உள்ளே சென்றதும் அவன் மீண்டும் 'பைலை' எடுத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டான். பின்னர் ஒரு மணி நேரம் கழித்து இருவரும் சாப்பிட்டனர்.

"நீ படு பாரதி. எனக்கு வேலை இருக்குது."

"நீங்களும் படுத்து தூங்குங்க. நாளைக்கு பார்த்துக்கலாம்.

"சரிங்க மகாராணி. உங்க உத்தரவுப்படி நடக்கறேன். அப்புறம் வேறு எதுவும் இருக்கா... சொல்லுங்க. அதையும் உடனே செய்கிறேன்" என்று இடுப்பு வரை குனிந்தான்.

"சொல்றது உங்களுக்கு கேலியாக இருக்கா? நான் வேணா, சாந்தி அக்கா அறையில போய் பேசிக்கிட்டு இருக்கட்டுமா?"

"ஏன் அவ பொழைப்பையும் கெடுக்கிறே! மற்றவங்க சந்தோஷமா இருக்கிறது உனக்குப் பிடிக்கலையா? நீயும் சந்தோஷமா இருக்காதே... மற்றவர்களையும் சந்தோஷமா இருக்கவிடாதே. நல்ல கொள்கை. இதையே பின்பற்று."

"இப்ப என்ன சொல்லிட்டேன்னு இப்படி 'லெக்சர்' அடிக்கிறீங்க? 'போக வேண்டாம்' என்றால் ஒரு வார்த்தையில் முடியுது. இவ்வளவு பேச்சு தேவையா?"

"நல்லா பேசு. இதையாவது ஒழுங்காச் செய்யிறியே!"

அவள் கீழே படுத்துத் தூங்கினாள். நேரமாக ஆக குளிர் தாங்க முடியவில்லை. ரவி வேலையை முடித்துவிட்டு வந்தான். தரையில் படுத்திருந்த அவளை அப்படியே தூக்கி, படுக்கையில் கிடத்தினான்.



'எத்தனை மென்மையாக இருக்கா! பேச்சுக்கூட எவ்வளவு இனிமை? 'நான் தப்பானவன்' என்று அவள் மனதில் பதிந்துவிட்டது. அதை எப்படிப் போக்குவது...?'

'உனக்காகத்தானே பாரதி, நான் இவ்வளவு மாறிட்டேன். இதை நீ எப்போது புரிந்துகொள்வாய்...?'

மறுநாளும் ஊர் சுற்றிப் பார்க்க கிளம்பினர். ரொம்ப தூரம் நடந்து சென்றனர். மேகக் கூட்டங்கள் தன்னை வந்து தழுவியது போல் இருந்தது. 'காலடியில் ஒரு வானமோ?' என்று நினைக்கும் அளவுக்கு மேகம் சூழ்ந்திருந்தது.

நடக்கும்போது தனது கால் பட்டு, சேலை அவிழ்ந்தது பாரதிக்கு. அப்படியே பிடித்துக்கொண்டாள். அடுத்து அவளால் நடக்கவும் முடியவில்லை.

ரவி முன்னால் சென்றுகொண்டிருந்தான். அவன் திரும்புவானா என்று பார்த்தாள்.

சிறிது தூரம் சென்றதும் திரும்பிப் பார்த்தான்.

"என்ன பாரதி... அங்கேயே நின்னுட்டே?" என்றவாறே அவன் வரவும், மற்றவர்களும் பாரதியைப் பார்த்தனர்.

எதுவும் பேச முடியாமல் திணறினாள்.

ரவி அருகில் வந்து, "என்ன?" என்றான்.

வாய்விட்டுச் சொல்ல முடியாமல், கண்களால் சேலையைக் காட்டி ஜாடை செய்தாள்.

அவன் புரிந்துகொண்டான். 'இப்ப என்ன செய்வது? எங்கு போய் கட்டுவது...?'- குழப்பம் அவனுக்கு.

தன் நண்பர்களிடம், "நீங்கள் முன்னே நடங்க. நாங்க கொஞ்ச நேரம் கழித்து வர்றோம்" என்றான்.

"என்னடா... உன் மனைவி எதுவும் சொல்லலே. நீ என்னடா என்றால்... 'நீங்க போங்க, நாங்க அப்புறம் வர்றோம்' என்கிறாய். ஏன், இரவின் மயக்கம் இன்னும் தீரலையா உங்களுக்கு...?"

"போங்க... பின்னாடியே வர்றோம்."

"சீக்கிரம் வந்தால் சரி. இல்லையென்றால், அறையில் சந்திப்போம்" என்று சிரித்துக்கொண்டே சென்றுவிட்டனர்.

ஆண்களும், பெண்களும் கூட்டம் கூட்டமாய் சுற்றித் திரிந்தனர்.

"மரத்தின் பின்னால் மெதுவாக சென்று, சேலை கட்டிக்கொள். நான் மறைவாக நின்னுக்கிறேன்" என்றான்.

"எனக்கு பயமா இருக்கு. யாராவது பார்த்துவிட்டால்?"

"யாரும் பார்க்க மாட்டாங்க... நான் பார்த்துக்கிறேன்.."

"என்னது... நீங்க பார்ப்பீங்களா...?"

"அய்யோ... லூசு. யாரும் பார்க்காம நான் பார்த்துக்கிறேன்னு சொன்னேன். சரி சரி... இரு. காரை வரச் சொல்றேன்."

அந்த இடத்தைக் குறிப்பிட்டு காரை வரச் சொன்னான். அடுத்த பதினைந்து நிமிடத்தில் கார் வந்தது.

டிரைவரை, 'குடிக்க தண்ணீர் வாங்கிட்டு வா" என்று போகச் சொன்னான்.

அவன் சென்றதும் பாரதியிடம், "கார் கதவைத் திறந்து, உள்ளே போய் கட்டு" என்றான். அதற்குமுன் கார் கண்ணாடியை ஏற்றிவிட்டான்.

ரொம்ப நேரம் ஆகியும் காருக்குள் இருந்து பாரதி வரவில்லை.

கதவைத் திறந்து உள்ளே போனான். "என்ன செய்யுறே... இவ்வளவு நேரமா?"

" உட்கார்ந்துகிட்டே கட்ட வேண்டியது இருக்கு. அதனால சரியா வர மாட்டேங்குது."

"இப்படிக் காட்டு, நான் கட்டுறேன்" என்று மடிப்பு வைத்து சொருகி 'பின்' குத்திவிட்டான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்... சேலை கட்ட?"

"ம்... இதுக்கு முன்னாடி இந்த வேலைதான் பார்த்தேன். வர்றவ-போறவளுக்கெல்லாம் சேலை கட்டுறதுதான் என் வேலை. அதில் சம்பாதித்ததுதான் எல்லாம். உனக்குத் தெரியாதா?" என்றான் அப்பாவியாக.

அவள் 'களுக்'கென்று சிரித்துவிட்டாள்.

"எல்லோருக்கும் தெரிந்து தாலி கட்டினேன். யாருக்கும் தெரியாமல் சேலை கட்டி விடுகிறேன்" என்றான்.

இவன் பேச்சின் கேலியை உணர்ந்து, வெட்கி தலை குனிந்தாள்.



"சரி வா. எங்கு போகலாம்? அவர்கள் எல்லோரும் போயாச்சு. சாப்பாட்டு நேரம் ஆகிடுச்சு. ஓட்டலுக்கே போயிடுவோமா?" என்றான்.

அவள் "சரி" என்று தலையாட்டவும், காரிலேயே ஓட்டலுக்குச் சென்றனர்.

"நாம முதல்ல சாப்பிடலாமா?" என்றான்.

"இல்ல... அவர்களும் வரட்டும்."

"அவர்கள் சாப்பிட இங்குதான் வருவாங்கன்னு சொல்ல முடியாது. பக்கத்தில் ஓட்டல் இருந்தால் சாப்பிட்டுவிடுவாங்க. அதனால, அவங்களுக்காக காத்திருக்காம நாம சாப்பிடுவோம்."

பாரதி ரசித்தவாறே மெதுவாகச் சாப்பிட்டாள்.

"என்ன இப்படிச் சாப்பிடுறே? நல்லா சாப்பிடு. அப்பத்தான் உண்டாக முடியும். சாரி... குண்டாக முடியும்" என்றான், நமட்டுச் சிரிப்புடன்.

"ஏன்... உங்களுக்கு குண்டா இருந்தாத்தான் பிடிக்குமா?"

"எப்படி இருந்தாலும் பிடிக்கும். அதுக்காக பீப்பா மாதிரி ஆகிடாதே" என்றான்.

கொடைக்கானல் நினைவு அகன்று... நிகழ்கால நினைவு மலர்ந்தது.

## 17

இரவு நன்றாகத் தூங்கிவிட்டாள். காலையில் கண் விழித்ததும் நன்றாக இருந்தது. எழுந்து கீழே போனாள்.

சிவகாமி, பாரதியைப் பார்த்து, "எப்படிம்மா இருக்குது? எதுக்கு இவ்வளவு சீக்கிரம் எழுந்து வந்தே...? நீ போ" என்றாள்.

"இல்ல அத்தை. எனக்கு உடம்பு சரியாகிடுச்சு. உங்களுக்கு எப்படி இருக்குது?"

"நல்லா இருக்கும்மா" என்றாள் கனிவாக.

எல்லோருக்கும் சிற்றுண்டி தயார் பண்ணினாள். சிவகாமிக்கு சாப்பிடக் கொடுத்தாள்.

# ஏழைகளின் கற்பூரம்

★ இறந்தவர்களைப் புதைக்கும்போது வெள்ளைப் பூண்டையும் போட்டு புதைத்தார்கள் புராதன எகிப்தியர்கள். அது கெட்ட ஆவிகளை விரட்டும் என்பது அவர்கள் நம்பிக்கை.

★ போருக்குப் போகும் முன்பு, வெள்ளைப்பூண்டை சாப்பிட்டுச் சென்றார்கள் ரோம வீரர்கள். அது வலுவூட்டும் என்பது எண்ணம்.

★ சீனர்கள் பூண்டை 'ஏழைகளின் கற்பூரம்' என்பார்கள்.

– முக்கிமலை **நஞ்சன்**



ரவி கீழே வந்ததும், சாப்பிட கூப்பிட்டாள். தட்டில் எடுத்து வைத்தாள்.

“எனக்கு நீ சாப்பாடு எடுத்து வச்சு எவ்வளவு நாள் ஆச்சு பாரதி?”

“ஆமாங்க. சாரி... நான் அன்றைக்கு அப்படி பேசியிருக்கக் கூடாது. எனக்குக் கோபம். அப்பா இறந்ததைப் பற்றி சொல்லலையேன்னு...”

“என் மேலதான் தப்பு பாரதி. நான் உடனே சொல்லி இருக்கணும். ‘நேரில் வந்து சொல்லலாம்’ன்னு விட்டுட்டேன்.”

“அன்று ரொம்ப பசித்ததா?”

“ம்... ரொம்ப பசி. மதியமும் சாப்பிடலை. நீ வந்துவிட்டதாக அம்மா சொன்னதும் எவ்வளவு சந்தோஷமாக மேலே வந்தேன். நீ அப்படி பேசியதும் பசியே அடங்கிடுச்சு.”

“அதுக்கெல்லாம் சேர்த்து இன்னைக்கு சாப்பிடுங்க.” என்றவாறே கூடுதலாக சாதத்தை வைத்தாள்.

“போதும் பாரதி. நீ பாட்டுக்கு வச்சிக்கிட்டே இருக்கிறே?”

“சாப்பிடுங்க. இப்ப இளைச்சுட்டீங்க.”

“இப்படி அதிகமாச் சாப்பிட்டா ரொம்ப குண்டாகிடுவேன்.



அப்புறம் உன்பாடுதான் திண்டாட்டம்.”

“எனக்கு என்ன திண்டாட்டம்?”

“அப்படியென்றால் சரி. நான் குண்டாகிடுறேன்” என்றான், சிரித்துக் கொண்டே.

மறுநாள் பாரதிக்கு தேர்வு இருந்தது. காலையில் சீக்கிரமே கிளம்பிவிட்டாள். அவள் படிப்பது ரவிக்கு தெரியாது.

பண்ணையார்தான் அவளை கூட்டிப் போனார்.

“மதியம் கார் அனுப்புகிறேன்ம்மா. பயப்படாம வந்துடுறியா? இல்லை நான் வரட்டுமா?” என்றார்.

“இல்லை மாமா... நானே வந்துடுறேன். நீங்க போயிட்டு வாங்க” என்றாள்.

மதியம் வீட்டுக்கு வந்தாள். அவளுக்கு அழுகை வந்தது. இன்று ரவி, வீட்டுக்கு வந்திருந்தான். அவனைப் பார்த்ததும் கட்டிக்கொண்டு ‘ஓ’வென அழுதாள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. “ஏன் பாரதி... எதுக்கு அழறே? எங்கே போய்ட்டு வர்றே?” என்றான்.

அப்படியும் அவள் அழுகை நிற்கவில்லை.

அவளை அப்படியே சோபாவில் உட்கார வைத்து, தானும் அமர்ந்தான்.

“என்ன... இங்க பாரு. சொல்லிட்டு அழு. ஏன் இந்த அழுகைடா? என்னடா நடந்தது?”

“நான் இனிமே பரீட்சை எழுதப் போகமாட்டேன்.”

அவனுக்கு தலையும் புரியவில்லை. வாலும் புரியவில்லை. அவள் முகத்தை நிமிர்த்தி, “என்ன சொல்றே... என்ன பரீட்சை எழுதமாட்டே?”

“நான் இன்னிக்கு பரீட்சை எழுதப் போனேன். அங்கே ரெண்டு பசங்க என்னை மிரட்டினாங்க. நான் எழுதின பேப்பரை பிடுங்கிக்கொண்டான் ஒருத்தன். மற்றொருத்தன் ‘பிட்’டைக் கொடுத்து, ‘பார்த்து எழுது’ என்கிறான். எனக்கு அவன்களைப் பார்க்கவே பயமா இருக்குது. நாளைக்குப் போகமாட்டேன்.”

“நீ என்ன படிக்கிற பாரதி?”

அவள் சரேலென அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கண்களில் கண்ணீர் ததும்பியது.




# பெண் மனசு

தென்காசி கு.அருணாசலம்

துணிக்கடை.

“இந்தச் சேலை இருக்கட்டும். ‘பில்’ போட அனுப்புங்க!”- ஓரளவு திருப்திப்பட்டவளாக அந்தப் பெண் சொன்னாள்.

விற்பனையாளருக்கு நிம்மதி வந்தது. ‘அரை மணி நேரத்துக்கு மேலாக ஏகப்பட்ட சேலைகளைப் புரட்டிப் புரட்டி... எதுவும் பிடிக்காம, ஏதோ இந்தச் சேலையாவது பிடித்ததே!’ என உடனே ‘பில்’ பிரிவுக்கு அனுப்பினார்.

அப்போது அங்கே இருந்த ஒரு பெண், “சார்! அதே மாதிரி சேலை இருந்தா எனக்கு எடுத்துத் தாங்களேன்” என்றாள்.

“இல்லம்மா... இந்த ‘டிசைன்’ல இந்த ஒரு சேலைதான் இருக்கு!” என்றார், அவர்.

சேலையை எடுத்தப் பெண் அதை வாங்கிப் போனதும், விற்பனையாளர் புதிய பெண்ணிடம் கேட்டார்...

“மேடம்! உங்களுக்கு கண்டிப்பா அதே மாதிரி சேலைதான் வேணுமா?”

லேசாக புன்னகைத்தபடி சொன்னாள்...

“வேண்டாங்க! அந்த அம்மா பல சேலைகளைப் புரட்டியும் திருப்தியே இல்லாதபடி இருந்தாங்க. நானும் பார்த்தேன். அவங்க மனசு குளிரணும், சந்தோஷப்படணும். தான் எடுத்த சேலை ‘சூப்பர்’தான்னு மனசுக்கு படணும்னுதான் அப்படிக் கேட்டேன். இப்ப திருப்தியா போறாங்க பாருங்க!” என்றாள்.

‘ஆகா! ஒரு பெண்ணின் மனசு, இன்னொரு பெண்ணுக்குத்தான் தெரியும் என்று சொல்வது சரிதான்’ என நினைத்துக்கொண்டார் அவர்.



★

“ஏய்... சொன்னாத்தானே எனக்குத் தெரியும். என்ன பரீட்சை எழுதப் போன...?”

“ம்... ‘பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ்’ எடுத்துப் படிக்கிறேன். பரீட்சைக்கு மாமாதான் காலையில கூட்டிட்டுப் போனாங்க. ‘மதியம் கார் அனுப்புகிறேன்... வந்துடு’ன்னாங்க. நான் காரில் ஏறும்போது அவன்களும் வந்து ஏறிக்கிட்டானுவ. எனக்கு ஒரே பயமாகிடுச்சு. ஒரு இடம் வந்ததும் இறங்கிக்கிட்டு, ‘டாட்டா’ சொல்லிவிட்டு போயிட்டானுக.”

“இதற்குப் போய் ஏன் அழுறே? கல்லூரி வாழ்க்கையில் இதெல்லாம் சகஜம். நாளைக்கு நானே உன்னைக் கூட்டிப் போறேன். சரியா...?”

“ம்...”

“நல்லா படிச்சிருக்கியா? ஏதாவது சந்தேகம் இருந்தா... என்கிட்ட கேளு. இது நாள் வரை என்னை எதுவுமே கேட்டதில்லை. கேட்டிருந்தால் நானே சொல்லிக் கொடுத்திருப்பேனே?”

“உங்களுக்குத் தெரியும்ன்னு எனக்குத் தெரியாதே!”

“என்ன பாரதி இப்படிச் சொல்லிட்டே? எனக்கு எவ்வளவோ தெரியும். அதைக் கத்துக் கொடுக்க உன் சம்மதம் வேணும் எனக்கு” என்று அவள் மூக்கைப் பிடித்து ஆட்டினான்.

அவள் இன்னும் நெருங்கி அவன் மார்பிலேயே சாய்ந்திருந்தாள்.

“நாளைக்கு கட்டாயம் நீங்க வருவீங்களா?”

“கட்டாயம் வருவேன். மதியமும் வந்து கூட்டி வர்றேன். போதுமா...? இல்லைன்னா சத்தியம் செய்யட்டுமா?”என்றான், சிரிக்காமல்.

‘கோபப்படுகிறானோ?’ என்று முகத்தைப் பார்த்தாள். அவன் கண்கள் சிரித்தன. “நான் பயந்துட்டேன். நீங்க கோபமா பேசுறீங்கன்னு.”

“நீ இப்படி என் மார்பில் சாஞ்சிக்கிட்டு பேசினா எனக்கு கோபம் வருமா?”

அவள் ‘சடக்’கென விலகினாள்.

“இப்ப எதுக்கு இந்த விலகல்? அவன்கள் புண்ணியத்தில் எனக்கு இப்படியொரு சந்தர்ப்பம் கிடைச்சுச்சு.”

மறுநாள் காலை ரவியே அவளைக் கூட்டிட்டுப் போனான். கார் அந்தக் கல்லூரி வாசலுக்குள் நுழைந்தது. பாரதி இறங்கவே பயந்தாள்.

"எனக்கு பயமா இருக்கு. நீங்களும் என்கூட வாங்க" என்று கையைப் பிடித்தாள்.

"சரி... வா" என்று அவனும் இறங்கினான். அவனை ஒட்டியவாறே நடந்தாள். 'அவன்கள் இருக்கிறானுகளா?' என்று அவள் கண்கள் அங்கும் இங்கும் அலைந்தன.

'அவன்கள்' எதிரே வர... அவள் கை நடுங்கியது.

"ஏன் பாரதி?"

"இதோ பாருங்க. அங்கே வர்றாங்களே அவனுகதான்."

அவர்கள் பக்கத்தில் வந்ததும், "ஹலோ பாரதி" என்றனர்.

அவள் ரவியுடன் ஒட்டி நின்றாள்.

அவர்களைப் பார்த்து "ஹலோ" என்றான் அவன்.

"சார் நீங்களும் பரீட்சை எழுத வந்தீங்களா?" என்றனர்.

"இல்ல. இவ என் மனைவி. இவளை 'டிராப்' பண்ண வந்தேன்."

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

"நான் வர்றேன் பாரதி. நீங்க நல்லா 'எக்ஸ்சாம்' எழுதுங்க."

"சரிங்க சார். நீங்க போங்க. 'சிஸ்டரை' நாங்க கூட்டிப் போறோம்."

"சரி" என்று ரவி கிளம்பினான்.

மதியம் தேர்வு நேரம் முடிவதற்குள் போய்விட்டான். பாரதியை உள்ளேயே தேடிப் போனான். அங்கு வந்த 'புரொபசர்', "ஹலோ ரவி... எங்கே இங்கு?" என்று கேட்டார்.

"என் மனைவி 'எக்ஸ்சாம்' எழுத வந்திருக்கா. 'பிக்கப்' பண்ண வந்தேன் சார்" என்றான்.

பாரதியும் வந்துவிடவே... அவரிடம் அறிமுகப்படுத்தினான். பின்னர் அவளைக் கூட்டிக்கொண்டு காரைக் கிளப்பினான். அப்போது, காலையில் பார்த்தவர்கள் வரவே, "ஹலோ பிரண்ட்ஸ்...



நீங்களும் வர்றீங்களா? உங்களை 'டிராப்' பண்ணுறேன்."

"வேண்டாம் சார். நீங்க போங்க."

"பரவாயில்லை... வாங்க."

"இல்ல சார். எங்களுக்கு வேலை இருக்கு."

"சரி" என்று காரை எடுத்துக்கொண்டு போனான். ஒரு பெரிய ஓட்டல் முன் நிறுத்தினான்.

"எதுக்கு நிறுத்திட்டீங்க...?"

"இங்க 'டிபன்' நல்லா இருக்கும். சாப்பிட்டுட்டே போலாம்."

"வீட்ல எல்லாமே தயாரா இருக்கே... அப்புறம் ஏன் காசை வீணாக்கணும்?"

"பரவாயில்ல... வா. ஒரு நாள் மாற்றம் இருக்கட்டும்."

"என்னங்க... இந்த ஓட்டல் ஒரே இருட்டா இருக்கு. ஏன் 'லைட்'டைப் போடாம இருக்காங்க. 'கரண்ட் பில்' அதிகமாகிடும்ன்னா...?"

## படைப்பாளர்கள் கவனத்துக்கு...

'ராணி', 'ராணிமுத்து' இதழ்களில் இடம்பெறும் படைப்புகளுக்கு சன்மானத் தொகை, காசோலையாகவோ... 'மணியார்டர்' மூலமாகவோ அனுப்புவதற்குப் பதிலாக இனி அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாக வழங்கப்படும். ஏற்கெனவே படைப்புகள் அனுப்பியவர்களும், இனி அனுப்புகிறவர்களும் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் பெயர், வங்கி மற்றும் கிளை விபரங்கள், கணக்கு எண், வங்கியின் IFS CODE ஆகியவற்றுடன் செல்போன் எண், அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் முழு முகவரியையும் தவறாமல் குறிப்பிடுமாறு வேண்டுகிறோம்.

– ஆசிரியர்

உங்கள் படைப்புகளை மின்னஞ்சலிலும் அனுப்பலாம்:

editor@raniweekly.in

ரவிக்கு சிரிப்பு வந்தது. "அடி செல்லமே... உன் அறிவுக்கு இங்கு இருக்க வேண்டியவ இல்ல... இது 'ஸ்டார்' ஓட்டல். இப்படித்தான் இருக்கும்..."

ஒரு மேசை முன் அமர்ந்தனர். அவளுக்கு இருட்டு பழகிவிட்டது. பக்கத்து மேசையில் முணுமுணுவென்று பேச்சுக்குரல் கேட்டது. ஒருவருக்கொருவர் ஊட்டிக்கொண்டனர்.

'என்ன இது... பொது இடத்தில் கொஞ்சங்கூட இங்கிதம் இல்லாம...?' என மனதுக்குள் திட்டினாள். இவர்கள் 'டிபனை' முடிக்க ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. ஓட்டல் வாசலில் பாரதியை நிற்கச் சொல்லிவிட்டு, காரை எடுத்து வரச் சென்றான்.

ரொம்ப நாளைக்கு பிறகு, அங்கு சாந்தியை சந்தித்தான்.

அவனைப் 'பிடி பிடி' என்று பிடித்துக்கொண்டாள் அவள்.

"என்ன ரவி, உன்னைப் பார்க்கவே முடியலை. பாரதி எப்படி இருக்கா?"

"ம்... நல்லா இருக்கா."

"எப்ப பொய்யெல்லாம் சொல்லக் கத்துக்கிட்டே?"

அவன் லேசாக சிரித்தான்.

"இந்த சிரிப்புக்கு என்ன அர்த்தம்? நீ இன்னும் ரோகினியை மறக்கலையா?"

"என்ன சாந்தி... இப்படிக் கேட்கிறே?"

"பின்ன... வேற எப்படிக் கேட்கிறதாம்?"

"ரோகினியை நான் விரும்பியது உண்மைதான்! ஆனா, இப்ப அவளை மறந்துட்டேன். பாரதிதான் என் மனதில் நிறைந்து இருக்கிறா."

"அப்புறம் எதற்கு பாரதியை தள்ளி வச்சிருக்கே?"

"நானா அவளைத் தள்ளி வச்சிருக்கேன். அவதான் என்னைத் தள்ளி வச்சிருக்கா."

"இதை நான் நம்பணுமா?"



"உண்மைதான் சாந்தி. அவ என்னை தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறா. இதற்கு நானும் ஒரு காரணம்தான். எப்ப பார்த்தாலும், 'அவளோடு ஊர் சுத்துறே. இவளோடு ஊர் சுத்துறே'ங்கிறா. எனக்கு கோபம். அதனால, 'நீயும் அவர்களில் ஒருத்திதான்'னு சொன்னேன். அதையே பிடிச்சிக்கிட்டா. நான் என்ன செய்ய முடியும்?"

"நீ பேசி புரிய வைக்கணும்."

"எதைச் சொன்னாலும் நம்ப மாட்டேங்கிறா. அதட்டினா பயந்து நடுங்கறா. எதிர்த்து நின்னா அடக்கலாம். பயந்து நடுங்குபவளிடம் என்ன செய்யறது?"

"நீதான் மெள்ள மெள்ளப் புரிய வைக்கணும். நான் சொல்லி புரிய வைக்கட்டுமா?"

"இல்ல. எங்க ரெண்டு பேருக்குள்ளும் யாரும் வர வேணாம். இதை நானே பேசிக்கிறேன். மும்பை போக வேண்டியது இருக்கு. அதன் பிறகு பேசுக்கிறேன்" என்றான்

அந்த வாரமே மும்பை கிளம்பிப் போனான்.

கிளம்பும் முன் ரோகினியிடம் இருந்து போன் வந்தது.

பிறருக்கு கேட்காதவாறு மெலிதாக பேசினான்.

"ம்... சரி, வர்றேன்" என்று கடைசியாக கூறியது மட்டும் பாரதியின் காதில் தெளிவாகக் கேட்டது.

ரோகினியுடன்தான் போகிறான் என்று தப்பாக புரிந்துகொண்டாள்.

'இனிமே நாம இங்கே இருக்கக்கூடாது. ரோகினிக்கும், அவனுக்கும் இடையே எதற்கு தடையாக நான் இருந்துகொண்டு...? அவர்கள் சந்தோஷமாக இருக்கட்டும். தெரியாம ஏன் ஊர் சுற்ற வேண்டும்? அவன் வரும்போது இங்கிருக்கக்கூடாது. உடனே கிளம்பிவிட வேண்டும். கிராமத்தில் போய் தோட்ட வேலை பார்த்துக்கொண்டு, அம்மாவோடு இருந்துவிடலாம்'- என்ற மனக் குழப்பத்துக்கு நடுவே, அவனின் படுக்கையில் படுத்துக்கொண்டு ரொம்ப நேரம் அழுதாள்.

பின்னர் கிளம்பி, பெட்டியுடன் கீழே வந்தாள்.

பண்ணையாரிடம் போய், "நான் ஊருக்குப் போறேன் மாமா" என்றாள்.

அவள் பெட்டியுடன் இருப்பதைப் பார்த்தவர், "சரி, போயிட்டு வாம்மா. நம்ம கார் இருக்கே?" என்றார்.

'இனி திரும்பப் போவதில்லை' என்ற முடிவுடன் இருந்ததால் காரை மறுத்துவிட்டு, ரெயிலில் செல்வதாகக் கூறி புறப்பட்டுவிட்டாள்.

## 18

அடுத்த நான்கு நாட்களில் ரவி வந்துவிட்டான். பாரதி அறைக்குச் சென்று பார்த்தான். அங்கு அவள் இல்லை. "பாரதி" என்று கூப்பிட்டான்.

சிவகாமி, "அவ இங்க இல்லை. ஊருக்குப் போயிட்டா."

"ஊருக்கா... எந்த ஊருக்கு? என்கிட்ட சொல்லலையே?" என்றவன், சற்று அதிர்ந்தான்.

"இங்கே உனக்கு வேலை பார்க்கணும். உன் அம்மாவுக்கு சேவை செய்யணும். இதெல்லாம் தவிர வேறு என்ன சுகம் கண்டா? அதனாலதான் ஊருக்குப் போயிட்டா."

"அப்பா... நீங்களாவது சொல்லி தடுத்திருக்கக்கூடாதா?"

"நான் எதுவும் சொல்லலை."

"சரி... நான் போய் கூட்டிட்டு வருகிறேன்" என்று உடனே கிளம்பினான்.

மறுநாள் காலை. நேராக பாரதி வீட்டுக்கே சென்றான். காரை நிறுத்திவிட்டு, உள்ளே போனான்.

பாரதி இருந்தாள். அவளைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டான்.

"வாங்க" என்றாள், மெதுவாக.



அவன் எதுவும் பேசவில்லை. "கிளம்பு பாரதி. ஊருக்குப் போகலாம்" என்றான்.

"இல்ல... நான் வரலை."

"உன் முடிவு இதுதானா?"

"ஆமா..."– தலையை ஆட்டினாள்.

அடுத்து, வேறு எதுவும் பேசாமல் அதே ஊரில் உள்ள தன் வீட்டுக்குச் சென்றுவிட்டான். 'நடந்ததை எல்லாம் மறந்துவிட்டு, புதிதாக வாழ்க்கையைத் தொடங்குவோம் என்று நினைக்கையில்... என்ன எண்ணத்தில் வந்திருப்பா? எப்படியும் இங்கே வருவா...!' என நம்பினான்.

அதுபோலவே, சாப்பாடு எடுத்துக்கொண்டு பாரதி வந்தாள். "சாப்பிட வாங்க" என்றாள்.

ரவி, மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிக்கொண்டு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

கைகளை நீட்டி, "இங்கே வா" என்றான்.

விரித்த கைகளுக்கிடையே ஓடிச் சென்று, அவன் மார்பில் சாய்ந்து அழுதாள். அவனும் மார்போடு இறுக அணைத்துகொண்டான்.

"என்னைவிட்டு ஏன் வந்தாய் பாரதி?" என்றான். அவளை அப்படியே படுக்கையில் அமர்த்தினான். அவள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அவளை கொஞ்சம் கொஞ்சமாக தன் வசமாக்கினான்.

அவளுக்கு இன்பமான அவஸ்தையாக இருந்தது. முத்த மழை பொழிந்தான். அவளும் சளைக்கவில்லை. இருவரது அன்பும் பெருக்கெடுத்து ஓடியது. அவன் ஆளுமையில் தன்னை மறந்தாள். கண்கள் சொருக, "ம்..." என்று முனகினாள்.

"என் ரதி" என்று கொஞ்சினான்.

அவளுக்கு பரவசமாக இருந்தது. விழிகள் சொருக, பாதி மயக்கத்தில் தன் வசம் இழந்தாள். இன்ப பரவசத்தில் மிதந்தாள்.

அவளுக்கு திகட்டத் திகட்ட அன்பைப் பொழிந்தான். விடிய,

விடிய இன்பத்தில் திளைத்து- பரவசத்தில் மூழ்கிக் கிடந்தனர் இருவரும்.

காலையில் இளம் வெளிச்சத்தில் கண் திறந்து ரவியைப் பார்த்தாள். அவன் உதடுகளில் எதையோ சாதித்துவிட்ட நவரசம். இளமுறுவல். அவனது கைகளுக்குள் அவள். எழுந்திருக்க முடியவில்லை. அவனும் விடவில்லை. "நேரம் ஆகிடுச்சு. என்னை விடுங்க" என்று சிணுங்கினாள்.

"ஆகட்டும்... பேசாம படு" என்று காதோரம் சிசுகிசுத்தான். அவள் வெட்கத்தில் மார்பில் முகம் புதைத்தாள். போன் ஒலித்தது. ரவிக்கு எரிச்சலாக வந்தது.

எடுத்து "ஹலோ" என்றான். அப்பா பேசினார்.

"என்னப்பா...?"

"இங்கே கொஞ்சம் அவசர வேலை இருக்கு. உடனே புறப்பட்டு வர்றியா...? அப்படியே மருமகளையும் கூட்டிட்டு வந்துடு" என்றார்.

"சரிப்பா. நாங்க கிளம்பி வர்றோம்" என்றான்.

'என்ன?' என்றாள், பார்வையாலேயே!

"அப்பா வரச் சொல்றார். இந்த வயசானவங்களுக்கே ஒன்றும் தெரியாது. சின்னஞ்சிறுசுகள் ஜாலியா இருந்துட்டு வரட்டுமேன்னு நினைக்க வேண்டாம்? 'உடனே வா' என்று சொல்கிறாரே...?"

பாரதிக்கு சிரிப்பு வந்தது.

"என் தவிப்பு உனக்கு சிரிப்பாக இருக்குதா? எனக்கு உன் கூடவே இருக்க வேண்டும் போல இருக்கு. நாம் ஊருக்குப் போனதும், எங்காவது வெளியூர் போய் வரலாமா?" என்றான்.

அவளும் விளையாட்டாகவே, "ம்... சிங்கப்பூர் போலாம்" என்றாள்.

"சரிடா" என்று மூக்கோடு மூக்கு வைத்து உரசினான்.

"என்னங்க" என்றாள்.

"ம்...ம்...ம்" என்றான்.

"நீங்கள் அந்த ரோகினியை" என்று நிறுத்தினாள்.

"என்ன அந்த ரோகினிக்கு...?"



"நீங்கதான் ரோகினிகூட மும்பை போனீங்க. அதனாலதான் இங்கு வந்துட்டேன். நீங்களாவது அவளோடு சந்தோஷமா இருங்க."

"எப்படி...? நேற்றிரவு உன்கூட இருந்த மாதிரியா?" என்றான், ஏளனமாக.

பார்வையைத் தாழ்த்தினாள் அவள்.

"இங்கே பாரு பாரதி, நான் அவகூட பழகினது- அவளை விரும்பியது உண்மை. உன்னை கல்யாணம் செய்த பிறகும் மறக்கலை. ஆனா, உன் மென்மையும்- பொறுமையும்- மற்றவர்களை குறை கூறாமல் நடந்த விதமும்... என் நெஞ்சில் அனுமதிக்காமலேயே நீ சம்மணம் இட்டு அமர்ந்துவிட்டாய்.

அதுகூட பிறகுதான் புரிந்தது. நான் அப்போதே ரோகினியிடம் சொல்லிவிட்டேன். 'நீ வேறு திருமணம் பண்ணிக்கொள்' என்று! நாங்க எந்தச் சூழ்நிலையிலேயும் தப்பு பண்ணவே இல்லை. தப்பாக நடந்துகொண்டோம் என்றுதானே நினைச்சே? அது எனக்கும் தெரியும். நீ ஆயிரம் முறை சொன்னாய்... அவளோடு ஊர் சுத்துறேன்னு. பெண்களுக்கு மட்டும்தான் மானம், ரோசம், கற்பு எல்லாம் இருக்குமா? ஏன்... ஆண்களுக்கு இருக்காதா? இந்தக் கேள்வியை, நான் கேட்டால் தாங்கிக்கொள்வாயா? அது நாகரிகமாக இருக்குமா? 'ஆண் பிள்ளையிடம் எதை வேண்டுமானாலும் பேசலாம். அவன் தாங்கிக்கொள்வான்' என்ற நினைப்பு உங்களுக்கெல்லாம்.

நாங்கள் தாங்கிக் கொள்வது போல் தெரியுமே தவிர, உள்ளுக்குள் ஆறாத ரணமாக இருக்கும். நீ பேசும்போது எனக்கு எப்படி இருக்கும் தெரியுமா? ரொம்ப நொந்துபோவேன்.

காதலித்தது ஒரு குற்றமா? உன்னை கல்யாணம் செய்த பிறகு, வேறொரு பெண்ணிடம் பழகினால் நீ சொல்வது சரி. நீ யாரென்றே தெரியாத போதுதானே காதலித்தேன். முதலில் உன்னைப் பிடிக்கவில்லை என்றாலும், பிறகு மனதார ஏற்றுக்கொண்டேன்.

நீ அப்படிச் செய்தாயா? என் வாழ்க்கையையே திசை திருப்பிவிட்டு, என் மேல் களங்கம் சுமத்தினாய். என்னை தப்பானவன் என்றால் எனக்கு கோபம் வராதா? அதனால்தான் அன்றைக்கு அப்படிப் பேசினேன்... 'நீ பத்தோடு பதினொன்று'ன்னு!

அதை நானே மறந்துட்டேன். பிறகு நீ அதை மனதில்

வைத்துக்கொண்டு என்னவெல்லாம் பேசினே? உன்னைத் தொட எனக்கு தகுதி இல்லையா? இதைவிடத் தகுதி உனக்கு வேறென்ன வேண்டும்? இப்பக்கூட உன்னை நோகடிக்க வேண்டும்ன்னு நான் சொல்லலை. நீ புரிந்துகொள் என்றுதான் சொன்னேன். எத்தனை முறை உன்னிடம் என் அன்பை வெளிப்படுத்தினேன். அத்தனை முறையும் என்னை அலட்சியப்படுத்தினாய். அப்படி இருந்தும் எனக்கு உன் மீதுள்ள அன்பு குறையவில்லை.”

மூச்சுவிடாமல்... தன் மனதில் உள்ளவற்றைக் கொட்டினான்.

“எனக்கு மட்டும் உங்க மீது அன்பு இல்லையா?” என்றாள் குரல் கரகரக்க.

“இல்லைன்னு நான் சொல்லலை ரதி. உன் அன்புதான் எனக்கு புரிய வைத்தது. எப்போது என்னையும்– வீட்டில் உள்ளவர்களையும் நீ காட்டிக் கொடுக்காமல் பேசினியோ, அப்போதே என் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய் என்று புரிந்துகொண்டேன்.”

“நான்தான் உங்களை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை” என்று விம்மினாள்.

“இனிமேல் அழக்கூடாது நீ. நாம் மனமொத்த தம்பதியாக இருக்கணும் என்றுதான் இவ்வளவு பேச்சும்” என்று தோளில் சாய்ந்துகொண்டான்.

“நிச்சயம் இருப்போம்...”

“சந்தேகம் என்பது சுழல் போல! அதில் மாட்டிக்கொண்டால்... நாம் மீளவே முடியாது. வெளியே வரணும்ன்னு நினைத்தால்கூட வர முடியாது. அது நம்மை அழித்துவிடும். நமக்குள் இனி சந்தேகம், ஒளிவு மறைவு– இதெல்லாம் இருக்கக் கூடாது... சரியா?”

“ம்...”– என்று தலையாட்டினாள்.

“சரி, குளிச்சிட்டு வா. கிளம்புவோம். நான் நேற்று காலையில சாப்பிட்டது... பயங்கரப் பசியா இருக்கு. விட்டால் உன்னையே கடித்துத் தின்றுவிடுவேன்” என்று அவளின் மாம்பழக் கன்னத்தை காதலுடன் கடித்தான்.



## 19

சிங்கப்பூர் சென்று ஒரு வாரம் ஆகியது. கல்யாண வாழ்க்கையில் இவ்வளவு இன்பம் இருக்கக்கூடும் என்று நினைக்கவில்லை அவர்கள் இருவரும்!

பழசையெல்லாம் மறந்து, புது உலகில் சிறகு விரித்துப் பறந்தனர். பாரதியை இன்பத்தின் எல்லைக்கே அழைத்துச் சென்றான் ரவி.

நாட்கள் உருண்டோடின. அன்று பாரதியால் எழவே முடியவில்லை. தலை பாரமாக இருந்தது. வாந்தி வேறு எடுத்தாள்.

பயந்துவிட்டான் அவன். “என்ன இப்படி வாந்தி எடுக்கறே? அம்மா... இங்கே வாங்க. பாரதி வாந்தி எடுக்கறா” என்றான்.

டாக்டருக்குப் போன் செய்து வரச் செய்தான்.

“வாழ்த்துகள் ரவி... நீ அப்பாவாகப் போறே” என்றார் அவர்.

மனைவியை அப்படியே தூக்கி இதழில் முத்தம் பதித்தான்.

“சரி... அப்ப நாங்க வெளியே போகட்டுமா?” என்றார் டாக்டர்.

மெதுவாக அவளை கீழே இறக்கிவிட்டான். அந்த இல்லமே மகிழ்ச்சியில் திளைத்தது.

பாரதியை எல்லோரும் கையில் வைத்துத் தாங்கினர்.

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்,
ஆசிரியர்: ர.பாஸ்கரன், அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம்.
ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
தொலைபேசி: 25324771 FAX: 044-26426884
E-MAIL:
admin@raniweekly.in
raniweekly@vsnl.net

ஒருநாள் 'ஷாப்பிங்' சென்றனர். அங்கு சாந்தியை சந்தித்தனர். பாரதியின் மேடிட்டிருந்த வயிற்றைப் பார்த்துவிட்டு, ரவியை நோக்கி கண் சிமிட்டினாள்.

"என்ன விசேஷம்... எங்களுக்கு தெரியப்படுத்தக்கூட இல்லை. பெண்டாட்டி மயக்கத்தில் இப்படியா?" என்றாள் கேலியாக.

"ஆமா. இப்ப எல்லாம் அவள் என்ன சொல்றாளோ அதன்படிதான் கேட்கிறேன். இல்லையன்றால் தோப்புக்கரணம் போடச் சொல்கிறாள்" என்று பயந்தவன் போல் நடித்தான்.

பாரதியும் கலகலவெனச் சிரித்தாள். ரவி அதை ரசித்தான். சாந்தி மகிழ்ந்தாள். "இதைத்தான் எதிர்பார்த்தோம். சந்தோஷமான இல்லற வாழ்க்கையை எங்கே தொலைத்துவிடுவீங்களோ என்று நினைத்தேன். இப்போது நிலைமை சரியாகிவிட்டது தெரிகிறது. சரி, எப்போது வளைகாப்பு... அதற்காவது சொல்வீங்களா?" என்றாள்.

"அதற்குச் சொல்லாமலா? பெரிய அளவுல செய்யணும் சாந்தி."

"வளைகாப்பு முடிச்சு, அவள் அம்மா வீட்டுக்கு அனுப்பிடுவீங்களா?" என்றாள்.

"இல்ல சாந்தி. இங்குதான் வைத்திருப்பேன். அங்கு ஆஸ்பத்திரி வசதி சரியா கிடையாது. சரியா இருந்தாலும் அனுப்ப மாட்டேன். அதுக்குக் காரணம் இதுன்னு சொல்ல வேண்டியதுதான்."

"உனக்கா சொல்ல வேண்டும் காரணம் சொல்ல! எனக்கு நேரம் ஆகுது... வரட்டுமா?" என்று அவள் சென்றுவிட்டாள்.

ரவியும், பாரதியும் வந்து காரில் ஏறினர். காரை மெதுவாக ஓட்டினான்.

மாதம் செல்லச் செல்ல பாரதியைப் போன்று ரவிக்கும் பதற்றம் தொற்றிக்கொண்டது.

அன்று இரவு பாரதிக்கு லேசாக வலி எடுத்தது. பயந்து நடுங்கிவிட்டாள். உடனே ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றனர்.





அவளால் தாங்க முடியவில்லை. அலறித் துடித்தாள். ரவியின் கண்களும் கலங்கிவிட்டன.

"டாக்டர், அவளால் வலி தாங்க முடியாது. அவளுக்கு 'ஆபரேஷன்' பண்ணிடுங்க" என்றான்.

"அவளுக்கு 'நார்மல் டெலிவரி' ஆகும். நீ ஏன் பயப்படுறே? கொஞ்ச நேரம் அப்படித்தான் வலிக்கும். அவளே பேசாம இருக்கிறா. நீ ஏன் பதறுறே? இன்னும் கொஞ்ச நேரத்தில் குழந்தை பிறந்துடும்."

"டாக்டர்... நானும் அப்ப பக்கத்துல நிற்கலாமா?" என்றான்.

"வரலாம்... வரணும். பிரசவம் என்பது மனைவிக்கு மறுபிறவி என்பது ஒவ்வொரு கணவனுக்கும் தெரிய வேண்டும். பெண் என்பவள் ஆக்கும் சக்தி. அவர்களை கேவலமாக நினைப்பவர்கள்- பெண் குழந்தை பிறந்தாலே பாவம் என்று சபிப்பவர்கள், பெண் சிசுக் கொலை செய்பவர்கள் எல்லாம், பிரசவத்தை நேரடியாகப் பார்க்க வேண்டும். அப்போதுதான் தெரியும். ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பது என்பது எவ்வளவு கஷ்டம்- பாக்கியம் என்று..." நீண்ட பாடமே நடத்திவிட்டார் டாக்டர்.

அடுத்த சில மணி நேரங்களில் பாரதிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அது, ரவியை அப்படியே உரித்து வைத்திருந்தது.

முதலில் பாரதியைப் பார்த்து அவள் நெற்றியில் முத்தமிட்டு, பிறகுதான் குழந்தையைத் தொட்டான். தூக்கி மனைவியிடம் காட்டினான்.

அதை வாங்கிய அவளுக்கு பரவசமாக இருந்தது. சிவகாமியும், பண்ணையாரும் அகமகிழ்ந்து போயினர்.

ரவியிடம் பாரதி, "நீங்க எவ்வளவோ பரிசுப் பொருள் வாங்கித் தந்தீங்க. 'எனக்கு ஒன்றும் இல்லையா?' என்று கேட்டீங்க. நானும் 'பிறகு தருகிறேன்' என்பேன். இதோ என்னால் முடிந்த பரிசு உங்களுக்கு..." என்று குழந்தையை அவனிடம் கொடுத்தாள்.

ரவி... அவளையும் குழந்தையோடு சேர்த்து இதமாய் அணைத்துக்கொண்டான்.

முற்றும்